Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

ரூபா 8/50

දිනමුරසු වාරමලර්

மார்.06-12,1994

# வாரமலர்
# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 41



## பிரேமா இல்லாத வெற்றிடம்!
அரசியல் அலசல்

அங்குலிமாலா
## சரிதம்
அரசியல் அலசல்

கொலை விழும் நேரம்

மகாபாரதம்



## முடி கருமையாக அருமையான யோசனை!

சிறுகதைகள் - இலக்கியநயம் - கவிதைகள்

கூடு - சுவை - சுவாரசியம் அதுதான் தினமுரசு

# துன்பப்படுத்துகிறவர்களை ஆசீர்வதிப்போம்

"உங்களை துன்பப்படுத்துகிறவர்களை ஆசீர்வதியுங்கள். ஆசீர்வதிக்க வேண்டிய தேயன்றி சபியாதிருங்கள்." **ரோமர் 12:14.**

பல பேர் முன்னிலையில் என்னை அவமானப்படுத்தி விட்டானே, பழிக்குப் பழி வாங்காமல் விடமாட்டேன். எனக்கு வரவேண்டிய சொத்தை அநியாயமாக அபகரித்துக்கொண்டு விட்டானே! என்றாவது ஒரு நாள் அவனைப் பழி வாங்கியே தீருவேன். காரணமின்றி துன்பப்படுத்துகிறார்களே! பொய்க் குற்றம் சாட்டி என்னை வேலையிலிருந்து நீக்கி விட்டார்களே! பொய்யான தகவல் கூறி எனது பிள்ளையின் திருமணத்தை நிறுத்தி விட்டார்களே என்றெல்லாம் அங்கலாய்ப்போர் பலர். இப்படிப்பட்ட வேளைகளில் நாம் என்ன செய்கிறோம். அவர்களை சபிக்கின்றோம். பழிவாங்கத் துடிக்கின்றோம். இது மனுஷ சுபாவம். ரோமர் 12:14ல் கூறியுள்ளதை மறந்து விடுகின்றோம்.

அரசன் அன்று கொல்வான். தெய்வம் நின்று கொல்லும் என்பார்கள். "பிரியமானவர்களே, பழி வாங்குதல் எனக்குரியது. பிள்ளைகளே நானே பதிற் செய்வேன், என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறபடியால் நீங்கள் பழிவாங் காமல், கோபாக்கினைக்கு இடங் கொடுங்கள்." என்று ரோமர் 12:19ல் கூறியுள்ளது போல் வாழுவோம். தேவன் அவனவன் செய்கைகளுக்கு தக்கதாக அவரவர்களுக்கு செய்வார். எனவே எமக்கு ஏற்படும் துன்பத்திலும், துக்கத்திலும், சஞ்சலத்திலும் இறை துணையை நாடுவோம். வாழ்வில் சமாதானம் பெறுவோம்.

**ஜே.புளோரன்ஸ்-கெங்கல்ல.**

# ஆன்மீகம்

## நோன்பு நேரங்கள்



| மாதம் | காலம் | ஸஹர் முடிவு | ஸுபஹ் | சூரிய உதயம் | ளுஹர் | அஸர் | மஃரிப் | இஷா |
|---|---|---|---|---|---|---|---|---|
| மார்ச் | 4–08 | 4.47 | 5.02 | 6.22 | 12.25 | 3.42 | 6.23 | 7.43 |
| " | 9–11 | 4.45 | 5.00 | 6.20 | 12.25 | 3.41 | 6.23 | 7.43 |
| " | 12–13 | 4.44 | 4.59 | 6.19 | 12.25 | 3.38 | 6.23 | 7.43 |
| ஆறு | 15–17 | 4.42 | 4.57 | 6.17 | 12.25 | 3.36 | 6.22 | 7.42 |
| நோன்பு | 18–20 | 4.41 | 4.56 | 6.16 | 12.20 | 3.33 | 6.22 | 7.42 |

ஈமான் கொண்டவர்களே! நீங்கள் உங்களைத் தீமையினின்றும் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டு உங்கள் முன்னோர்கள் மீது கடமையாக்கப்பட்டவாறே உங்கள் மீதும் நோன்பு கடமையாக்கப்பட்டுள்ளது.

(அல்-குர் ஆன் ~ :183)

### நோன்பின் நிய்யத்து

நவைத்து ஸவ்மகதின் அன் அதாயி பர்ழி ரமழானி ஹாதிஹிஸ்ஸனதி, லில்லாஹி தஆலா.

இந்த வருஷத்தின் ரமழான் மாதத்தின் பர்ழான நோன்பை அதாவாக நாளை பிடிக்க நிய்யத்துச் செய்கின்றேன் அல்லா(ஹ்)வுக்காக.

### நோன்பு திறக்கும்போது ஓதுகிற துஆ

அல்லாஹும்ம லகஸம்து வபிக ஆமன்து வஅலைக்க தவக்கல்த்து வஅலா றிஸ்கிக அப்தர்த்து பதகப்பல் மின்னி

இறைவா உனக்காகவே நோன்பு நோற்றேன்! உன்னையே விசுவாசிக்கிறேன் உன் பொறுப்பிலேயே எனது சகல காரியங்களையும் விடுகிறேன்: உனது ஆகாரத்தை கொண்டே நோன்பு திறந்தேன். ஆகையால் எனது நோன்பை அங்கீகரித்துக்கொள்வாயாக.

# முரசம்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

தரம் தாழ்ந்துவிட்ட அரசியலை
முரசு வழங்கிய
அரசியல் பார்வைகள்
படம் பிடித்துக் காட்டிவிட்டன என்று
பல்வேறு திசைகளிலும் இருந்து
பாராட்டுக்கள்.

அரசியல் கட்சிகள் சிலவற்றின்
முக்கியமானவர்கள் கூட
பாராட்டியதுதான் சந்தோசமான ஆச்சரியம்.

வீடு வீடாகச் சென்ற வேட்பாளர்களுக்கு
முரசை எடுத்துக்காட்டி
முகத்துக்கு நேராகவே கேள்வி எழுப்பிய
விழிப்பான நிகழ்வுகளும் உண்டு.

கிழக்கிலும், வவுனியாவிலும்
உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில்
முரசு எவரையும் ஆதரிக்கவுமில்லை.
எதிர்க்கவுமில்லை.
நடந்த வேடிக்கைகளை விளக்கியிருந்தது.
விட்ட தவறுகளை சுட்டிக்காட்டியிருந்தது.
நட்ட நடு வீதியிலே
தமிழர் தலைவிதி தள்ளாட
தமிழர் அமைப்புக்கள்
தமக்குள் கட்டிப் புரண்டு அடிபட்டு
நானா? நீயா என்று பிடுங்குபட்டு
அதனால்-
அள்ளுப்பட்டுப்போன
அரசியல் நாகரிகத்தின் சோகத்தை
வேதனையோடு வெளிப்படுத்தியிருந்தது.

வடலி வளர்த்தவர்கள் யாரோ
வந்து பயனடைந்தவர்கள் வேறு எவரோ
என்ற நிலையாக,
இரத்தம் சிந்தி-இழப்புக்கள் சந்தித்து
அவலம் சுமந்து-அல்லற்பட்டு
வாழும் மக்களின் பெயரில்
யார் யாரோ எல்லாம் பிரதிநிதிகளாகவும்
தலைவிதியை நிர்ணயிப்பவர்களாகவும்
வேசம் கட்டிவந்து வித்தை காட்டுகிறார்கள்.

இது எத்தனை சோகம்?
இது எதனால் ஏற்பட்ட துயரம்?
சொன்னால் சிலருக்கு கோபம் வருகிறது.
விமர்சனம் என்பது விஷம்போல் தெரிகிறது.
ஒருவர் முதுகைப் பார்த்து
மற்றவர்கள் சிரிக்கிறார்கள்.
அங்கே பார் என்று காட்டி
கேலி செய்கிறார்கள்
தங்கள் முதுகில் இருப்பது மட்டும்
எவருக்கும் தெரியவில்லை.
தெரிந்துகொள்ள நாட்டமும் இல்லை.

ஆனால்-
மௌனமாய் இருக்கும் பொதுமக்கள்
சகலரையும் எடைபோட்டு வைத்துள்ளார்கள்.
ஆயுத ஆதிக்கம்
பொதுமக்களின் வாயை மூடலாம்.
சிந்திக்கும் திறனை மூட முடியாது.

தேர்தலில் வெற்றி தோல்வி சகஜம்.
தவறானவர்கள் கூட விபத்துப்போல
வெற்றி பெற்று விடுவதும் உண்டு.

ஆனால்-
சமீபத்தில் உள்ளூராட்சி சபை தேர்தல்களில்
பொதுமக்கள் என்ன பேசிக்கொண்டார்கள்?
எவ்வாறெல்லாம்
வேட்பாளர்கள் பற்றி எடைபோட்டார்கள்?
என்கின்ற கருத்தறிவதே முக்கியம்.

அவ்வாறான கருத்தறிதல்கள்
வரும் காலத்தில் எனினும்
அரசியல் அரங்கை அநாகரிகமாக்காமல்
பொறுப்போடு செயற்பட
வழிவகுக்கும். வகை செய்யும்.

தற்போதைய தேர்தலில்
தமிழ் கட்சிகள் மற்றும் சுயேச்சைகள்
ஓரளவு தப்பிப் பிழைக்க
தன்னால் முடிந்தவரையெல்லாம்
நமது ஜனாதிபதி உதவியிருக்கிறார்.
அதனையும் மறந்துவிடக்கூடாது. ■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும் வரை

என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

# தினமுரசு போன்: 820265

## கவிதைப்போட்டி இல-38

வந்து குவிந்தவற்றில் வெற்றி பெற்றதுவும்–வியக்கப்பட்டவற்றில் இடம் பிடித்தவையும்.

### பரிசுக்குரிய கவிதை

**எனது தேசமே...**

அப்பாவை நாடுகடத்த
திட்டமிடு....
அண்ணாவுக்கு
'விஷேட அடையாள
அட்டை' கொடு...
என்னை இப்படி
நடுத்தெருவில் விட்டு
புதினம் பார்!

**செல்வி. பீ. பிரதீபா**
**திருமலை.**

### வியக்கப்பட்டவை

**வாழ்க்கைப் பயணம்**

வறுமை நிலையத்தில்
வந்திறங்கியதாய் எம்
வாழ்க்கைப் பயணம்
சந்திக்க முடியாத தண்டவாளங்களாய்
எங்கள் சந்தோசங்கள்
தள்ளிப் போகும் அவலம்.

-ஷர்மி கண்டி-

**கொடுமை**

கொடிது....கொடிது...
இளமையில் தனிமை.

செல்வன்-ஞா.சுபோஜன்
மண்டூர்-01.

ஆயுத நச்சரிப்பால்
ஆதரவு இழந்த பிஞ்சுகளை
தேடிச் சேர்ப்பது-2000த்தில்
தேசிய வேலையாகுமா?

அமரன்-பாண்டியூர்.

**ஏது காரணம்?**

இவர்கள்
வீதமும் அதிகம்
காரணம்
நாட்டு அரசியல்!

காரைதீவு நிலாமதி.

முரசே...!
இவன் நிச்சயமாக
35ம் போட்டிப் பெண்ணின்
மகனேதான்.

எம்.எம். பௌஸ்-கிண்ணியா-03.

போட்டோ எடுத்து-என்
வாட்டத்தை காட்டலாம்.
வாழ்க்கையை காட்ட முடியுமா?

சிவசேகரம் சிவகுமார்-மட்டக்களப்பு.

**முகவரியில்லாமல்...**

யுத்த தேவதையின்
தத்து குழந்தைகளே...
இந்த வண்டிக்கு கூட-ஓர்
இலக்கு உண்டு
நீங்களோ...பாவம்
திக்கற்றவர்கள்!

ஐ.என்.எம். நிஷ்ரீர்-புத்தளம்.

தங்கச்சி பசிச்சிருப்பா
தாங்காது தவிச்சிருப்பா
போகட்டா நான்
விரைவா!

செல்வி புவனேஸ்வரி ஆறுமுகம்
பசறை.

தாய்மரம் தறிபட
சேய்க் கொடி மண்ணில்
பாசப் பகிர்வுக்காய்
வாழ்வைச் சுமக்கிறதோ?

செல்வி.கிரிஜா சிவானந்தம்
காரைதீவு.

**மயான காண்டம்**

கூடுகள் பிரிக்கப்படக்
குஞ்சுகள் திசைதவறித்
தாயன்பு வேண்டித்
தவித்து நிதம் வாடும்

செ.வாமதேவன்
பெரியகல்லாறு.

ஏழையின் சிரிப்பில்
இறைவனைக் கண்டது
போதும்!
இந்த மழலையின்
சிரிப்பில் மனித நேயத்தைக்
காணுங்கள்!

ஆர்.பாலகிருஷ்ணன்
மாத்தளை.

**உழைப்பாளி**

அடுத்த வண்டி
அரை மணியிலே
வருவதை
அறிவிப்புப் பலகை
காட்ட
அரைவயிறு நிரம்பிய
சந்தோசம்.

சு.வினோதன் ஜோர்ச்
கொழும்பு-5.



**"மண்ணோடுதான் சொந்தம்!"**

"நீங்க-
வேணும்னா..
போங்க!
நான்னா-
வரமாட்டேங்க!
வசந்தமாய்-
வாழ்ந்தாலும்..
வளைந்துதான்
வீழ்ந்தாலும்
இந்த சொந்த-
மண்ணோடுதாங்க"!

கோட்டைமுனை முத்துமணி
பதுளை.

**நான்**

தவறவிட்டவன்
நான்.
வண்டியை
மட்டுமல்ல,
வாழ்க்கையையும் கூட.

ச.தஜானி
ஆரையம்பதி-3.

விட்டுப்போன உறவுகளை
எட்டிப் பார்க்க வந்த வேளை
வீழ்ந்து விட்டதோ
விலாசம்.

செல்வன்.இளங்கோவன்
தமிழ்வண்ணன்
இரத்தினபுரி.

**திருத்தம் தேவை!**

இவன் எப்படி உருவானான்?
காரணமானவர்களைத் தண்டிக்க
சட்டத்தில் திருத்தம் தேவை!

ரி.தவராசா-காரைதீவு.

**போரினால்...**

இன்றைய வாழ்க்கை வீதியிலே;
நாளைய வாழ்க்கை எங்கெங்கோ?
நாளொன்றில் முடிந்திடும் சமருண்டோ?

சு.அருள்ஜோதி-வேலணை-06.

## கவிதைப் போட்டி இல-41



சிந்தனைகள் சூழலைப் பிரதிபலிக்கட்டும். சொல்லும் கருத்தில் தெளிவும், சுருக்கமும் இருக்கட்டும். எண்ணத்தில் உருவாகும் கவி வரிகளுக்கு தபாலட்டையில் வடிவம் கொடுத்து அனுப்பிவையுங்கள். சிறந்த கவிதை ஒன்றுக்கு பரிசு ரூபா 100/=.

அனுப்பிவைக்க வேண்டிய கடைசித் திகதி 12.3.1994. (பட உதவி - கண்டி நிருபர்)

–முகவரி–
கவிதைப் போட்டி இல: 41
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ், கொழும்பு-5

# வாசகர் சாலை

இராஜதந்திரியின் இராஜதந்திர அலசலும், நாரதரின் ரிப்போர்ட்டும் நாட்டின் அரசியல் யதார்த்த நிலையை படம் பிடித்துக்காட்டுகின்றதை வரவேற்க வேண்டும்.

அத்துடன் அங்கத்திற்கு அங்கம் விறுவிறுப்புடன் நகர்த்திய 'கண்ணே மதுமிதா' வை ஓரம் கட்டி 'கொலை விழும் நேரம்' மூலம் மீண்டும் களம் நுழைந்த ரசிகன் ஆரம்பத்திலேயே ஒரு கலக்கு கலக்குகிறாரே.

இம்மும்மூர்த்திகளின் கை வண்ணங்கள் என்றென்றும் முரசில் ஜாலங்காட்டட்டும்.

**எம். நிஸா முஸம்மில்-தொடம்வத்தை.**

•

வாரம் ஒருமுறை மலர்ந்தும் எம் மனதை, கொள்ளை கொள்ள நீ அள்ளித் தரும் அனைத்து அம்சங்களும் அற்புதம். ரசிகனின் இலக்கிய நயம் சூப்பர்.

**கே.குமார், ஆனந்தி, மோகனா, யோகேஸ்வரி, சரஸ்வதி-செனரத்வெல.**

•

இனிய முரசே!

ரசிகனின் 'கொலை விழும் நேரம்' பார்த்து பரவசமடைந்தோம். ஒரு சந்தேகம் பெண்களுக்குள் ஆண்கள் பலவீனமடைவதை குறிப்பாக இவரது கதைகளில் வெளிக்காட்டுகின்றார்.

இதே போன்ற கதைகளையே படைக்கும் ரசிகன் உண்மையிலேயே ஒரு ரசிகனா அல்லது ரசிகையா. முரசுக்கு மெருகூட்டும் ரசிகனின் முத்தான ஆக்கங்கள் மேலும் மேலும் வெளிவர எமது வாழ்த்துக்கள்.

**ஸரீனா.எஸ்.ஹமீட், ஹலீமா.எஸ்.ஹமீட், மொஹமட் ஹில்மி -மல்வான ஹின்ன- அக்குறணை.**

•

தினமுரசே!

உன் இதழ்கள் தரும் போதையிலே, எனையே மறந்து உறக்கம் துறந்து சொர்க்கத்தில் மிதக்கின்றேன். கொலை விழும் நேரம் ஆரம்பமே ஆனந்தம் பாராட்டுக்கள்.

**ஞா.அருணா-கிண்ணியா.**

•

மகாபாரதத் தொடர் சுவாரசியமாக செல்கிறது. தமிழில் தரும் இராஜகுமாரனுக்கும் அதை பெருந்தன்மையுடன் வழங்கிவரும் உனக்கும் எனது பலகோடி வாழ்த்துக்கள் உரித்தாகட்டும். வாழ்க என்றென்றும் நீ வளமுடன்.

**எ.பரீனா-பைதா-புத்தளம்.**

•

### இலக்கிய நயம்

என் மனதை கொள்ளை கொண்ட முரசே! 'கனவும் உயிர்காக்கும்' என்ற இலக்கிய நயம் மிகவும் சுவாரஸ்யமாக இருந்தது. எழுதுகின்ற ரசிகனுக்கு என் இனிய நன்றிகள். மேலும் உன் சேவை வளர்ச்சியடைய என் வாழ்த்துக்கள்.

**எம்.தில்லைராஜா-பசறை.**

•

டியர் தினமுரசே,

திகைப்பூட்டும் உண்மை செய்திகளையும் புதிய அம்சங்களையும், வாரி வழங்குவதில் உனக்கு நிகர் நீயே தான் முரசே. நீ சுமந்து வரும் இலக்கிய நயம், அதிரடி அய்யாத்துரை, நாரதர், தேன் கிண்ணம், சினிவிசிட், மகாபாரத் தொடர் இவை அனைத்தும் சூப்பரோ சூப்பர். என் வாழ்த்துக்கள் உனக்கு.

**ஆறுமுகம் விஜயகுமார்- நு/பம்பரகெலை தோட்டம்.**

•

வண்ண மலராய் வாரந்தோறும் வலம் வரும் தினமுரசே, உன் புகழ்பாடும் தகுதி எனக்கேது? ஆனால் உன் அரசியல் சதுரங்க நாரதரை புகழாமல் இருக்க முடியவில்லை.

**சுந்தர்-திருமலை.**

•

குழப்பமான மனநிலையையும் களிக்க வைத்து, அக்களிப்பில் இளமையான உணர்வுகளை ஒரு கலக்குக் கலக்கும் இலக்கிய நயம் இதமானது. ரசிகன் ரசித்து எழுதும் ஒவ்வொரு நயமும் எம்போன்றோர் மிகச் சிரத்தையுடன் ரசிக்க உதவுவதாக அவரின் எழுத்து நடைப் பாணி தனி. ஆமாம் தினமுரசு எல்லா அம்சங்களிலும் மணி. தேன் கனி.

**எஸ்.பி.கரன்-கொள்ளுப்பிட்டி.**

•

அன்பின் முரசே,

எங்களின் அபிமான தினமுரசே, தித்திக்கும் தீந்தமிழ் காவியமே, அழகு ஓவியமே, நீ சுமந்து வரும் எழுத்தும் அப்படி. கவிதையும் அப்படி. கேட்கும் கேள்விகளுக்கு சிந்து தரும் பதிலும் அப்படி. இன்னும் எப்படியோ வர்ணிக்கலாம். இன்னும் நலம் பெற உன்னை வாழ்த்துகின்றோம். ஆசிரியரும் நீடூழி வாழ வாழ்த்துகிறோம்.

**எஸ்.சித்ராதேவி, மஞ்சுளாதேவி, மேகளாதேவி, சசிகலாதேவி, சீலாதேவி, ஜீவராணி, சுதாகர், சிவாகர்- நியூ புபுரஸ்ஸ.**

•

அன்பின் முரசே!

வாரம் ஒரு முறை எங்கள் இதயச் சோலையில் மலரவில்லையானால் சோகத்திற்கு எல்லையே இல்லை. நீ கொண்டு வரும் முத்து முத்தான அத்தனை அம்சங்களும் அபாரம். அதிலும் இளமைத் தொடர் இனிக்கிறது. பல்லாண்டு வாழ என் நல்வாழ்த்துக்கள்.



**முஹம்மட் ஜஹானி-காத்தான்குடி.**

முத்தான என் முரசே!

எல்லாப் பாகங்களிலும் அழகுடன் பல்சுவை அம்சங்களோடு என்றும் உலா வரும் நிலா. உன் சேவைக்கும் உன் வளர்ச்சிக்கும் என் இனிய வாழ்த்துக்கள்.

**வி.அன்வர்கான்-கந்தளாய்-01.**

•

என் தேன் முரசே, உனது அனைத்து அம்சங்களும்-அதிலும் ரசிகன் தரும் கொலைவிழும் நேரம் "த்ரில்". முரசே! பிளீஸ் ரசிகனை அறிமுகப்படுத்து.

**ரொஷான் நபீல்-அக்குறனை.**

# இந்த ஆண்டு போர் ஆண்டு!

# புலிகள் அறிவிப்பு! போருக்கான தயாரிப்பு!!

## "பேரினவாதத்தில் மாற்றம் ஏற்பட்டால் மட்டுமே சமாதானம்"

கிழக்கிலும், வவுனியாவிலும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் முடிவடைந்ததும் அரசாங்கம், வடக்கு-கிழக்கில் இராணுவ நடவடிக்கைகளை மிகத் தீவிரமாக முடுக்கி விடவுள்ளதாக புலிகள் யாழ்ப்பாணத்தில் கூறிவருகின்றனர்.

இந்த ஆண்டு அரசாங்கத்தால் போர் ஆண்டாக மாற்றப்படப் போவதாகவும், வடக்கே பாரிய தாக்குதல்களுக்கு திட்டமிடப் பட்டு வருவதாகவும் 'புலிகளின் குரல்' வானொலியில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

சமீபத்தில் யாழ்ப்பாணம் கைதடியில் நடைபெற்ற புலிகள் அமைப்பினரின் பலியான உறுப்பினர்களது நினைவுதினக் கூட்டத்தில், புலிகள் அமைப்பின் அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் கரிகாலன் உரையாற்றினார்.

"சமாதான நல்லெண்ண முயற்சிகளை மேற்கொண்டு சிறீலங்காவில் இருந்து மதப்பிரமுகர்கள் இங்கு வந்து பேசுகின்றனர்.

"சமாதானம் பெரும்பான்மை சிங்கள மக்கள் மத்தியில் இருந்துதான் ஏற்பட வேண்டும். இதனை மதப்பிரமுகர்களிடம் நாம் ஆணித்தரமாக கூறியுள்ளோம். சமாதானம் ஏற்படுவதை நாம் மறுக்கவில்லை. ஆனால் அந்த சமாதானம் நிரந்தர சமாதானமாக இருக்கவேண்டும்.

"பேரினவாதத்துக்கு மனமாற்றம் ஏற்பட்டால் மாத்திரமே நிரந்தர சமாதானம் ஏற்பட முடியும். இதனையும் தூதுக்குழுக்களிடம் தெரிவித்துள்ளோம்.

"சாதாரண சிறியவகை துப்பாக்கிகளோடு போருக்கு சென்ற நாங்கள் இன்று கவச வாகனங்களைக்கூட போரில் பயன்படுத்தக் கூடிய அளவுக்கு வளர்ந்துள்ளோம்.

"ஆனையிறவு இராணுவ முகாமை தாக்க வெகு நாட்கள் சண்டையிட்டோம். பூநகரி இராணுவ முகாமை மூன்று நாட்களில் தாக்கி முடிக்கும். அளவுக்கு மாறியுள்ளோம்" என்று கரிகாலன் தனது உரையில் குறிப்பிட்டார்.

சமாதான முயற்சிகளுக்கு தாம் தயாராக இருப்பதாகவும், ஆனால் அரசாங்கம் அதற்கு முன்வரவில்லை என்றும் கூறிவரும் புலிகள் அமைப்பினர் பாரிய தாக்குதல் ஒன்றை எதிர்பார்த்து அதற்கான ஏற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகள் தொடரும் என்றே இராணுவ வட்டாரங்களும் கூறி வருகின்றன.

ஜனாதிபதியின் உரைகளும் சமீப எதிர்காலத்தில் புலிகளோடு பேச்சு நடத்தப்படக்கூடிய அறிகுறிகளை பிரதிபலிக்கவில்லை என்றே அரசியல் விமர்சகர்கள் கருதுகின்றனர்.

ஜனாதிபதி அண்மையில் தெரிவித்து வரும் கருத்துக்கள் புலிகளை மக்கள் மத்தியில் ஆதரவு பெறவைப்பதாக கொழும்பின் பிரபல ஆங்கில தினசரி ஒன்றில் அரசியல் விமர்சகர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கிறிஸ்தவ மத அமைப்புக்களின் சமாதான முயற்சிகள் பற்றி பௌத்த மத அமைப்புக்கள் சில கண்டனம் தெரிவித்துள்ளன.

## புலிகளிடம் நிர்வாகத் திறன்!
## 'லங்கா கார்டியன்' புகழாரம்!!

கொழும்பில் இருந்து வெளிவரும் 'லங்கா கார்டியன்' சஞ்சிகை புலிகள் அமைப்பினரின் நிர்வாகத்திறனை புகழ்ந்து எழுதியிருக்கிறது.

அந்த சஞ்சிகையில், டாக்டர் மூர் என்பவர் எழுதிய ஆய்வுக் கட்டுரை ஒன்றில், புலிகள் பிரதேசங்களை நிர்வகிக்கும் பொறுப்பு வாய்ந்த இராணுவமாக மாறியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

"தமிழ் பகுதிகளில் உள்ள ஒரேயொரு சக்தி வாய்ந்த அமைப்பு புலிகள் இயக்கமே.

"மரபு முறை சார்ந்த யுத்தத்திலும் புலிகள் வளர்ச்சி கண்டுள்ளனர். இந்தியப் படை இலங்கையில் நிலை கொண்டிருந்த காலத்திலும் புலிகள் சக்திமிக்க அமைப்பாகவே விளங்கினர்" என்றும் டாக்டர் மூர் தெரிவித்துள்ளார். டாக்டர் மூர், இலினோயிஸ் பல்கலைக்கழகத்தில் தென்னாசியத்துறை நிபுணராக இருந்து வருகிறார்.

## யூ.என்.எச்.சி.ஆர்-புலிகள் பேச்சு!

ஐக்கிய நாடுகளுக்கான அகதிகள் உயர் ஸ்தானிகராலய (யூ.என்.எச்.சி.ஆர்) அதிகாரிகள் குழுவொன்று கடந்த மாதம் 27ம் திகதி யாழ் சென்றது. மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு பகுதிகளில் மேற்கொள்ளவுள்ள வேலைத் திட்டங்கள் பற்றி புலிகள் அமைப்பினரோடு பேசுவதற்காகவே அவர்கள் யாழ் சென்றதாகக் கூறப்படுகிறது. மடு அகதிகளின் உணவுப் பிரச்சனை பற்றியும் அவர்கள் புலிகள் அமைப்புப் பிரதிநிதிகளோடு கலந்துரையாடினார்கள். மறுநாளே அக்குழுவினர் கொழும்பு திரும்பினார்கள்.

## வவுனியாவில் பரபரப்பு!
## புலிகள் தாக்கலாம் என்று அச்சம்!!

வவுனியா நகரில் கடந்த வாரம் முழுவதும் பரபரப்பான நிலையே காணப்பட்டது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நேரத்தில் புலிகள் தாக்குதல் நடத்தக்கூடும் என்று மக்கள் மத்தியில் அச்சம் நிலவியது.

பெப்ரவரி 27,28ம் திகதிகளில் நகர் முழுவதும் பரபரப்பான நிலை தென்பட்டது. திங்கட்கிழமை பாடசாலைகளுக்கு மாணவர்கள் வரவும் மிகவும் குறைந்திருந்தது. ஆசிரியர்கள் பலர் விடுப்பில் சென்றுவிட்டார்கள்.

பெப், 28ம் திகதி நகரில் ஏற்பட்ட குண்டு வெடிப்பும், ஒரு குழுவினர் வானத்தை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தமையும் பதட்டத்தை மேலும் அதிகரித்தது.

வானத்தை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்தவர்கள் ஒரு தமிழ் அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்று பரவலாகப் பேசப்பட்டது.

மேற்படி துப்பாக்கிப் பிரயோகச் சம்பவத்தை புளொட் வட்டாரங்களும் கண்டித்தன.

## உயிரிழப்பு அதிகரிப்பு!

யாழ் குடாநாட்டில் தொற்றுநோய்களால் ஏற்பட்டுவரும் உயிரிழப்புக்கள் அதிகரித்து வருகின்றன.

கடந்த 20 நாட்களுக்குள் 'செப்டி சீமியா' என்னும் நோயினால் 11 பேர் இறந்துள்ளதாக அதிர்ச்சி தரும் தகவல் ஒன்று வெளியாகியுள்ளது. இறந்துள்ளோரில் சிறுவர்களும் அடங்குவர்.

இதேவேளை யாழ்ப்பாணம் சுன்னாகம் பகுதியில் எடுக்கப்பட்ட புள்ளி விபரம் ஒன்றின்படி 87 வீதமானவர்கள் போசாக் கின்மையால் நோயாளிகளாகியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

94ல் யாழ் குடாநாட்டில் மேற்கொள்ளப் பட்ட ஆய்வு ஒன்றின்படி, மூளை மலேரியா இரட்டிப்பு மடங்கில் பரவி வருகிறது. இந்த நோய் உயிராபத்தை ஏற்படுத்தக்கூடியதாகும்.

யாழ் மாநகர சபைப் பகுதியில் இரத்த பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

மலேரியா நோயாளர்களில் 80 வீதமானோர் சாதாரண மலேரியாவாலும், 20 வீதமானோர் மூளை மலேரியாவாலும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று கண்டறியப்பட்டுள்ளது.

## மாமாங்கத்தில் மகா சிவராத்திரி

மட்டக்களப்பு அருள்மிகு மாமாங்கேஸ்வரர் ஆலயத்தில், மார்ச் 10ம் திகதி மகாசிவராத்திரி பூசைகளை சிறப்பாக நடத்துவதற்கு இந்து கலாசார அமைச்சு விரிவான ஏற்பாடுகளைச் செய்து வருகிறது. தமிழ் நாட்டிலிருந்து வரும் கலைஞர்களுடன் உள்நாட்டு கலைஞர்களும் இணைந்து பல கலை நிகழ்ச்சிகள் இங்கு நடைபெறவுள்ளன.

முன்பு திருக்கேதீஸ்வர ஆலயத்திலிருந்து நான்கு சாமப் பூசைகளும் கலை நிகழ்ச்சிகளும் வானொலியில் அஞ்சல் செய்யப்படுவது போல் இம்முறை மாமாங்கேஸ்வரத்திலிருந்து அஞ்சல் செய்வதற்கான ஏற்பாடுகளும் செய்யப் பட்டுள்ளன.

## 45 மாதங்களும் நல்ல கவனிப்பு!
## விடுதலையான பொலிசார் தெரிவிப்பு!!

கடந்த 24.02.94 அன்று தம் வசமிருந்த இரு பொலிசாரை புலிகள் அமைப்பினர் விடுவித்தனர். கொழும்பு கத்தோலிக்க பேராயர் அதி.வண. நிக்கலஸ் மார்க்கஸ் பெர்னாண்டோவின் கோரிக்கையை ஏற்றும், சமாதான முயற்சியை ஊக்குவிக்கவுமே பொலிசாரையும் விடுவித் திருப்பதாக புலிகள் யாழ்ப்பாணத்தில் தெரிவித்தனர்.

திலகரத்தின பண்டார (வயது 39) சந்திரசேகர (வயது 36) ஆகியோரே விடுதலையான பொலிசாராவர்.

இருவரும் 1990ம் ஆண்டு மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் வைத்து புலிகள் அமைப்பினரால் பிடிக்கப்பட்டனர். இருவரும் திருமணமானவர்கள்.

45 மாதங்களாக புலிகள் தம்மை நன்கு உபசரித்தனர் என்றும், அதற்காக நன்றி தெரிவிப்பதாகவும், தமிழ் மக்களுக்கு சமாதானத் தீர்வு ஏற்பட வேண்டும் என்று தாம் விரும்புவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இலண்டன் பி.பி.சி. நிருபருக்கு அவர்கள் அளித்த பேட்டி ஒன்றில் சமாதான நல்லெண்ண முயற்சியாகவே தமது விடுதலை அமைந்துள்ளது என்று கூறியுள்ளனர்.

## தேர்தல் திருவிழாவின் பின்



"வெற்றிக் கொடி நாட்டியுள்ள நம்முடைய அருமை வேட்பாளர் உங்களையெல்லாம் சந்திக்க, வந்து கொண்டிருக்கிறார்.... கடைசி முறையாக அவரைப் பார்க்க விரும்புகிறவர்கள் இப்போதே பார்த்துக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்....!"

# "மாத்தையா விவகாரத்தில் இந்திய அரசு அக்கறை காட்டாது"

## மாத்தையா குழுவினரின் கோரிக்கைக்கு இந்திய அதிகாரி பதில்

***"புலிகள் அமைப்புக்குள் ஏற்பட்டுள்ள உட்பிரச்சனைகள் பற்றி இந்திய மத்திய அரசோ, தமிழக அரசோ அக்கறை கொள்ளவேண்டும் என்று எதிர்பார்ப்பது அர்த்தமற்றதாகும்." இவ்வாறு தமிழ் நாட்டின் உயர்அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.***

***மாத்தையா குழுவினரால் தமிழ் நாட்டில் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. அவற்றில் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் மீது கடும் கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.***

***தமிழ் நாட்டின் பிரபல தினசரியான 'தினமலர்' வெளியிட்டுள்ள செய்தியில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:***

விடுதலைப் புலிகள் அமைப்பில் பிளவு பகிரங்கமாக வெடித்துள்ளது.

புலித் தலைவர் பிரபாகரனுக்கு எதிராக, அவரது முன்னாள் தளபதியும், இன்னாள் 'துரோகி'யுமான மாத்தையாவின் ஆதர வாளர்கள் போர்க் கொடி தூக்கியுள்ளனர் என யாழ்ப்பாணத்தில் இருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன. எனினும், புலித் தலைவரின் தலைமைப் பதவிக்கு இந்த எதிர்ப்பு ஒரு ஆபத்தாக இதுவரை மாறவில்லை.

புலிகளின் அதிகாரப்பூர்வ இலச்சினை பொறிக்கப்பட்ட கடித முகப்பில், "பிரபாகரனின் துரோகத்தனம்" என்ற தலைப்பிட்டு அச்சிடப்பட்ட அறிக்கை, தமிழகத்தில் பரபரப்பாக விநியோகிக்கப் படுகிறது. அதில் கூறியிருப்பதாவது:

தமிழீழ விடுதலைப் போராட்டம் பல இழப்புகள் தியாகங்களுக்கூடாக உச்ச கட்டத்தை அடைந்த நிலையில் காட்டிக் கொடுக்கும் தலைமை வெறி கொண்ட பிரபாகரனின் துரோக நடவடிக்கைகளுக் கெதிராக குரல் கொடுத்தவர்கள் உயிருடன் இருந்ததே இல்லை. இலங்கை அரசு அழித்தொழித்த தமிழர்களின் தொகையளவே இவர்களால் அழிக்கப்பட்ட தமிழர்களின் தொகை எனக் கணக்கிடப்படலாம். இவரது ஆரம்பகால இயக்கச் செயல்பாடுகளே துரோகத்திலிருந்து ஆரம்பமானதுதான்.

1. பற்குணம், மைக்கல் போன்ற சக போராளிகளை கொன்றமை.
2. தங்கத்துரை, குட்டி மணி ஆகியோரை இலங்கை அரசுக்குக் காட்டிக் கொடுத்தமை.
3. செல்லக்கிளியை ஒளிந்திருந்து கொலை செய்தது (இராணுவ தாக்குதலின்போது)
4. செட்டியைச் சுட்டுக் கொன்றது.
5. மன்னார் பொறுப்பாளர் விக்ரரை பின்னாலிருந்து துப்பாக்கியால் சுட்டுக்கொன்றது.
6. குமரப்பா புலேந்திரனுடன் 10 போராளிகளுக்கு சயனைட் கொடுத்துக் கொன்றமை.
7. கிட்டுவை இந்திய இராணுவத்திற்கு காட்டிக் கொடுத்தமை.

இப்படிப் பலப்பல எண்ணிலடங் காதவை.

இயக்கம் என்பது இவரது சொந்த வீடுபோலத்தான் பாவிக்கப்பட்டது. இவ்வளவு தொகையான மக்களின் பணமும் போராளிகள் உயிர்களும் இவரது பதவி வெறிக்காகப் பாவிக்கப்பட்டன.

இயக்கத்தில் உள்ளவர்கள் திருமணம் செய்யக்கூடாது என்று கட்டுப்பாடு விதித்து, காதலித்தவர்களை மண்ணுக்குள் புதைத்தவர், தனக்காக மட்டும் இந்தக் கட்டுப்பாடுகளை நீக்கினார்.




காலத்துக்குக் காலம் இந்தத் துரோகங் களைப் பொறுத்துக்கொண்டு, தமிழ் மக்களின் விடுதலைக்காக உழைக்க வேண்டும் என்றே மாத்தையா, யோகி போன்ற எமது உண்மைத் தலைவர்கள் இயக்கத்திற்குள் இருந்தார்கள்.

பாலசிங்கம்-பிரபா கூட்டை அடிக்கடி விமர்சித்தார்கள். இயக்கத்தை சரியான பாதையை நோக்கி வழிநடத்த முற்பட்டார்கள். தமிழீழத்தை விட தனது தலைமையே முக்கியம் எனக் கருதும் பிரபா, இயக்கத்திற்காக ஆக்கபூர்வமாக எந்த வேலையும் செய்ய வில்லை.

உண்மையாக உழைத்த 300க்கும் மேற்பட்ட போராளிகள் எங்கே என்று தெரியாத நிலையில் உள்ளனர். அன்னிய சக்திகளின் கைக்கூலியாகிவிட்ட பிரபாவிற்கு எதிராக இயக்கத்திற்கு உள்ளேயும், வெளியேயும் தலைவர் மாத்தையாவின் ஆதரவாளர்கள் உள்ளனர்.

பிரபாகரன் இல்லாத ஒரு உண்மையான போராட்டம் நிகழ்த்தப்படும். அதுவரைக்கும் பிரபாகரனின் துரோகத் தலைமைக்கு ஆதரவான சகல பத்திரிகைகள், ஸ்தாபனங்கள், தனி நபர்களுக்கு எதிராக எம்மால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும். உண்மையான போராளிகளின் வாழ்க்கைக் காகவும், மக்களுக்காகவும் கடைசி வரைக்கும் போராடுவோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**
**பிரச்சாரப் பிரிவு (மாத்தையா குழு)**

-இந்த அறிக்கையுடன் கூடவே, "இந்தியாவின் மீது நம்பிக்கையும் நன்மதிப்பும் கொண்ட இலங்கைத் தமிழர்கள் சார்பில்," மறைமணாளன் என்பவர் பெயரில் இன்னொரு அறிக்கை வந்துள்ளது.

அகதிகளை திருப்பி அனுப்பும் நடவடிக்கைக்கு எதிரான கருத்து கொண்ட அந்த அறிக்கை, கடித வடிவில் உள்ளது. முதல்வர் ஜெயலலிதாவுக்கு எழுதப்பட் டுள்ளது. அதன் நகல்கள் ஜனாதிபதி, பிரதமர், கவர்னர், வாழப்பாடி, எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம், சுப்பிரமணியசாமி ஆகியோருக்கு அனுப்பப்பட்டுள்ளது. "புலிகள் இன்னமும் தமிழகத்தில் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்களை விட்டுவிட்டு அகதிகளை அனுப்புகிறீர்களே" என்று கடிதம் கேட்கிறது. அதன் சில பகுதிகள்:

புலிகள் இல்லை என்பது வேறு, புலிகளின் நடவடிக்கைகள் இல்லை என்பது வேறு. இலங்கை வடக்கில் புலிகள் பாவிக்கும் பெட்ரோல், மண்ணெண்ணெய், டீசல் ஆகியவற்றில் 90 சதவீதமானவை இப்பொழுதும் தமிழக கடற்கரையில் இருந்தே கடத்தப்படுகின்றன. இந்தக் கடத்தலுக்கு உடந்தையாக இருப்பவர்கள் யார்? இங்குள்ள இலங்கைத் தமிழர்களா? இல்லவே இல்லை. பணத்துக்காக இங்குள்ள போலிசாரும் கரையோர தமிழர்களும் சேர்ந்தே இக்கடத்தல்களைச் செய்கிறார்கள்.

தமிழகத்தில் புலிகளின் தொடர்புகளும், தொடர்பாளர்களும், நடவடிக்கைகளும் இப்பொழுதும் இருந்து கொண்டே இருக் கின்றன. இங்கு எஸ்.டி.டி...,ஐ.எஸ்.டி அலுவலகங்களும், டிராவல் ஏஜன்சிகளும் மற்றும் பல நிறுவனங்களும், கடத்திக் கொண்டிருக்கும் புலிகளின் பிரமுகர்களும், உறவினர்களும், ஆதரவாளர்களும் தொடர்ந்து தமிழகத்தில் இருக்கிறார்கள். (சிறு பட்டியல் முகவரியுடன் உள்ளது.)

சந்தர்ப்பவாத அரசியலை வளர்த்துக் கொள்ள புலிகளை ஆயுதங்களாகப் பாவித்து, தமிழ் நாட்டில் புலிகளின் ஆயுதக் கலாசாரத்தையும், அராஜகத்தையும் வளரவிட்டு, இங்கு அடைக்கலம் தேடி வந்தவர்களையே புலிகள் படுகொலை செய்வதற்கு உடந்தையாக இருந்த தமிழக அரசியல் தலைவர்கள், பிரமுகர்கள் மற்றும் இவர்களுக்குத் துணை போன போலிஸ் அதிகாரிகள், சிவில் நிர்வாகிகள் ஆகியோர் தாங்கள் விதைத்த வினையின் பயனை அனுபவித்து விட்டார்கள்; சிலர் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அந்த வரிசையில் நீங்களும் உங்களை நிறுத்திக் கொள்ள மாட்டீர்கள் என்று நம்புகிறோம்.

-இவ்வாறு கடிதத்தில் வாசகங்கள் அமைந்துள்ளன. இது பற்றி கேட்டபோது ஓர் உயர் அதிகாரி கூறியதாவது:

புலிகளின் நடவடிக்கை இப்போது இல்லை. சட்டத்துக்கு எதிரான செயலில் ஈடுபடாதவரை இங்கு குடியேறிவிட்ட இலங்கைத் தமிழர்களை யாரும் துன்புறுத்தப் போவதில்லை. இந்தக் கடிதத்தில் மனிதாபிமான உணர்வைக் காட்டிலும், அரசியல் வாசனையே அதிகமாகத் தெரிகிறது. மாத்தையா கதி என்ன என்பது பற்றி நமது நாட்டு அரசுகள் அக்கறை காட்டுமாறு எதிர்பார்ப்பது பொருத்தமல்ல. புலிகள் இயக்கத்தில் ஏற்பட்டுள்ள பிளவால் தமிழகத்தில் எந்த சீர்குலைவும் ஏற்பட அரசு நிச்சயம் அனுமதிக்காது.

இவ்வாறு அந்த அதிகாரி கூறினார்.

இந்திய-இலங்கை அரசுகளின் ஆதரவுள்ள சக்திகள் வெளிநாடுகளில் சீர்குலைவுப் பிரச்சாரங்களை மேற்கொண்டு வருவதாக புலிகள் அமைப்பினரின் பாரிஸ் கிளையினர் தெரிவித்துள்ளனர்.

-நன்றி தினமலர்-

## விளம்பரப் பகுதி



### மலையாள மாந்திரீகம்

உலகளாவிய ரீதியில் 27 வருடங்களாகத் தொடர்ந்து உண்மைச் சேவையாற்றி வரும் உலக மலையாள மாந்திரீகச் சக்கரவர்த்தி P.K.சாமி, எஸ்ஸோஸியேட் பிரைவேட் லிமிட்டெட்டாரின் சேவையில் கைரேகைகள், ஜாதகங்கள், மாந்திரீக ரீதியில் உங்கள் பிரச்சனைகளுக்கு நிவாரணம் பெற இன்றே எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

தொழில் பிணக்குகளா? காதல் கிலேசங்களா? வசியங்களா? கணவர், மனைவி, குடும்பப் பிரச்சனைகளா? ஆஸ்த்துமா போன்ற தீராத நோய்களா? இரகசிய ஆண், பெண் நோய்களா? வெளியூர் வாய்ப்புப்பெற வேண்டுமா? என்ன குறை?

P.K. SAAMY
ASSOCIATE PVT. LTD.,
**33, Daily fair Complex,**
**NUWARA ELIYA.**

**Dial: 052-2508 & 3093**
**AND**
**072-26088, 078-61933**

FAX: 0094-523093

ஆரம்ப மனுச் செய்பவர்களுக்கு, தற்கால பலாபலனைத் தங்கள் பிறந்த திகதி, மாதம் மாத்திரம் எழுதியனுப்பினால் தற்போதைய அல்லது கடந்த ஆண்டுகளின் பலனை இலவசமாக அனுப்புவோம். விஷேடமாக வெளிநாட்டு ஆடர்கள் உடன் கவனிக்கப்படும். வாரந்தோறும் சனிக்கிழமைகளில் நடைபெறும்; துர்க்கையின் அக்கினிக் குண்டல பூஜையில் கலந்து உண்மை அறியலாமே.

*Phone: 052-2508, 052-3093, 072-26088, 078-61933, 078-71243.*

வெளிநாட்டு ஆடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்

### ரிஷி அஜமாமிச லேகியம்

(முஸ்லிம் முறைப்படி தயாரிக்கப்பட்டது)



இளமையின் விளைவுகளை அறியாமல் தவறு செய்ததினால் ஏற்படும் இடுப்பு வலி, அசதி, இரத்தக் கொதிப்பு, உஷ்ணம், ஊறல், இருதயத் துடிப்பு, பசியின்மை, திரேக வரட்சி, தூக்கமின்மை, நெஞ்சு நோவு, துடிப்பு, முதுகு வலி, வயிற்று நோவு, உடம்பு, கால் கை வலி, நாட்பட்ட வாய்வு, மறதி, மயக்கம், மூளை பலவீனம், நரம்பு பலவீனம் முதலிய சகல வியாதிகளையும் தீர்த்து, திரேக வலிமையையும் தேஜஸ்சையும் கொடுக்கும். ஒரே பாட்டிலில் குணம் அறியலாம்.

விலை ரூபாய் 175/=,95/=
தங்க பஸ்பம் கலந்தது 975/=
வெள்ளி பஸ்பம் கலந்தது 875/=

**ஞான சுந்தர வைத்தியசாலை**

*187, செட்டியார் தெரு, கொழும்பு 11, போன்: 421398*

### முகவர்கள் தேவை

ஹெப்பாவெல, முழிச்சிக்கண்டி, பலுகஸ்வெவ, ஒபனாயக்க, கோழிபந்தாவ, ஹெட்டிப்பொல, கம்பிரிகெஹ்வெவ, யால, கலேபிந்துனவெல, கிரிந்த, இப்பாகமுவ, மஹாகந்தராவ, சீப்புக்குளம், கெப்பிட்டிகொல்லாவ.

மேற்காணும் ஊர்களில் தினமுரசு விற்பனை செய்வதற்கு முகவர்கள் கோரப்படுகின்றார்கள். முற்பணம் செலுத்தக்கூடிய முகவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

CIRCULATION MANAGER
THINAMURASU
**88/14, Somadevi Place,**
**Kirilapone, Colombo-6.**
Phone- 820265

### மிகக் குறைந்த கட்டணம்

கனடா (CANADA) போக வேண்டுமா?
வெளிநாடுகளிலிருந்து வரும் விமானப் பயணச் சீட்டுக்களை எதிர்பார்க்கவேண்டிய சிரமம் இப்போது இல்லை!
மிகக் குறைந்த -சலுகைக் கட்டணத்தில் விமானப் பயணச் சீட்டுக்களைப் பெறலாம்.

**விபரங்களுக்கு:**

Pyramid Air Services Ltd.
Consistory Building, 96-1/4, Front Street,
Colombo-11, Sri Lanka.
Tel: 449806-449154, 448104
**Fax:** 448104 **Telex:** 21975 Laksiri Ce Pyramids
**Cable:** AIRPYRAMID

IATA பதிவு பெற்றது

### பேனா நண்பர்

110 புகைப்படங்களுடன் 300 நண்பர்களின் விபரங்களடங்கிய அகில உலக பேனா நண்பர் சஞ்சிகையின் முதலாம் ஆண்டு நிறைவு மலர் தற்பொழுது விற்பனையாகின்றது.

விலை ரூபா 50/=
த.செ. ரூபா 2/=

Y.L. MOHAMED NAYIEM
25, KIRIGALA ROAD
MAWANELLA.

BAJAJ SUPER THREE WHEEL சகல உதிரிப்பாகங்களும் விஷேட கழிவுடன் பெற்றுக்கொள்ள எமது காட்சி அறைக்கு விஜயம் செய்யுங்கள்.

BOSCO
21, FIRST DIVISION, TECHNICAL JUNCTION
MARADANA.
Tel. 445823

### சிங்களம்

ஒரு மாதத்தில் எழுத, வாசிக்கக் கற்றுக் கொள்ளுங்கள்.

K.RAVI M.Sc.
E P I
642/2-HINNI APPUHAMY MAWATHE,
KOTAHENA, COLOMBO-13.


தருவது **அயலகச் செய்திகள்** ஏழுமலை

# செல்விக்கு வயது 46

## பத்தாயிரம் குழந்தைகள் முதல்வரின் பிறந்தநாளில்! வாழ்த்துச்சொல்ல வீட்டின் முன் குவிந்தனர் மக்கள்!!

### மறுபடி கிளறுகிறார்கள்

அயோத்தியில் இராமர் கோவில் கட்டும் பிரச்சனைக்கு மீண்டும் புத்துயிர் கொடுக்க முயல்கிறது விஸ்வஹிந்து பரிஷத்.

அந்த அமைப்பின் தலைவர் அசோக்சிங்கால் இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் வரை மதத் தலைவர்களை சந்தித்து இராமர் கோயில் கட்டுவது பற்றி ஆராயப்போவதாக அறிவித்துள்ளார்.

இந்தியப் பிரதமர் திரு. நரசிம்ம ராவ் உச்ச நீதிமன்ற தீர்ப்பு வந்ததும் அயோத்தி பிரச்சனை பற்றிய தனது நிலையை அரசு அறிவிக்கும் என்று கூறியிருக்கிறார்.

### மீனவர்களுக்கு வோக்கி டோக்கி

இந்தியாவில் முதன் முறையாக தமிழ்நாட்டில் மீனவர் பாதுகாப்புக்கான வயர்லெஸ் கோபுரம் அமைக்கப்பட்டு வருகிறது.

தூத்துக்குடி, நாகபட்டினத்தில் ரூபா 32 இலட்சம் செலவில் வயர்லெஸ் கோபுரம் அமைக்கப்படுகிறது.

கடலுக்குச் செல்லும் மீனவர்களுக்கு 'வோக்கி டோக்கி'கள் வழங்கப்படும். கடலுக்குள் தங்களுக்கு ஏற்படும் ஆபத்துக்களை வோக்கி டோக்கி மூலம் கடற்கரையில் உள்ள வயர்லெஸ் கோபுரத்துக்கு அவர்கள் தெரிவிக்க முடியும்.

இதன் மூலமாக மீனவர்கள் விபத்துக்களில் இருந்தும், பிற ஆபத்துக்களில் இருந்தும் சுலபமாகக் காப்பாற்றப்பட வசதி ஏற்படும்.

90 அடி உயரத்தில் அமைக்கப்படும் அந்த வயர்லெஸ் கோபுரம் மூலம் 20 கி.மீ. தூர கடற் பரப்பில் உள்ள மீனவர்களோடு தொடர்புகொள்ள முடியும்.

### யாழுக்கு டீசல் கடத்தல் தண்டனை ஒருவருட சிறை!

இலங்கையில் யாழ்ப்பாணம் பருத்தித் துறையைச் சேர்ந்த செல்வேந்திரன்(34), இலியாஸ் (35), அந்தோனிப்பிள்ளை ஆகிய மூவர் யாழ்ப் பாணத்திற்கு படகுமூலம் டீசல் கடத்த முயன்ற போது வேதாரண்யம் பொலிசிடம் சிக்கினார்கள்.

அவர்கள் மீதான வழக்கை விசாரித்த நாகபட்டினம் நீதிபதி மூவருக்கும் ஒரு ஆண்டு சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளார். டீசல் கடத்தி சிக்கிக்கொண்ட மேலும் 11 பேர் மீது விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

### 10 ஆயிரம் குழந்தைகளோடு முதல்வரின் பிறந்த நாள்



தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவின் 46வது பிறந்தநாள் பெப்ரவரி மாதம் 24ம் திகதி தமிழ்நாட்டில் கொண்டாடப்பட்டது.

தமிழக முதல்வருக்கு இந்தியப் பிரதமர் நரசிம்ம ராவ் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

தமிழக முதல்வரோடு அடிக்கடி மோதும் தமிழக ஆளுநர் சென்னா ரெட்டியும் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்திருந்தார்.

சென்னையில் உள்ள நேரு விளையாட்டரங்கில் 10 ஆயிரம் பள்ளிக் குழந்தைகள் முதல்வரின் பிறந்தநாள் விழாவில் கலந்துகொண்டனர்.

பள்ளிக் குழந்தைகள் மத்தியில் முதல்வர் ஜெயலலிதா பிறந்தநாள் கேக் வெட்டினார்.

சென்னையில் உள்ள முதல்வரின் வீட்டின் முன் காலையில் இருந்தே கூட்டம் அலை மோதியது. அலகு குத்தி காவடி எடுத்துவந்த தொண்டர்களும் காணப்பட்டனர்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர் முதல்வரின் பிறந்த நாளை நான்கு நாட்கள் கொண்டாடினார்கள்.

### தமிழக மக்களின் இதய மன்னவன் பேரறிஞர் அண்ணாவின் நினைவுநாள் பெப்-3

பூஞ்சிரிப்பைச் சிந்தி, கற்கண்டுச் சுவையாக சொல்மாரி பொழிந்திட்ட தமிழகத்தின் தலைசிறந்த தலைவர் முன்னாள் தமிழக முதல்வர் பேரறிஞர் அண்ணா மறைந்த 25வது நினைவுதினம் பெப்ரவரி 3ம் திகதி தமிழகமெங்கும் அனுஷ்டிக்கப்பட்டது.

தி.மு.க., அ.தி.மு.க. இரண்டும் அண்ணா நினைவு நாளை சிறப்பாக அனுஷ்டித்தன.

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா தலைமையில் பெப்ரவரி 3ம் திகதி காலை 10 மணிக்கு சென்னை அண்ணா சாலையில் உள்ள அண்ணா சிலையில் இருந்து அமைதி ஊர்வலம் புறப்பட்டது. சென்னைக் கடற்கரையில் உள்ள அண்ணா சமாதியை ஊர்வலம் சென்றடைந்தது.



### அண்ணாவின் தம்பியா நீங்கள்? வை.கோ. எழுப்பிய வினா!

ராஜிவ் கொலை நடந்த சூழல் பற்றி விசாரிக்கும் ஜெயின் கமிஷன் முன் தி.மு.க. தலைவர் கலைஞர் கருணாநிதி வாக்குமூலம் அளித்துள்ளார். அந்த வாக்குமூலம் தி.மு.க. (கோ) பிரிவினருக்கு எரிச்சல் கொடுத்துள்ளது.

வை. கோபால்சாமி அது குறித்துப் பேசும் போது,

"அண்ணாவின் தம்பியா நீங்கள்? அண்ணாவின் இதயத்தைப் பெற்றவரா நீங்கள்? தோற்கப் போகிறவனின் கடைசி ஆயுதம் வன்முறை. அதை நீங்கள் கையில் எடுத்துள்ளீர்கள்.

ஜெயின் கமிஷன் முன் கலைஞர் தந்துள்ள வாக்குமூலம் ஜெயவர்தனா, லலித் அத்துலத் முதலி ஆகியோரது பேச்சைவிட மோசனமாகும்,"

என்று காரசாரமாக கண்டித்துள்ளார்.



வை.கோ.

### யாருக்காக–இது யாருக்காக?

திருகோணமலை வைத்தியசாலைக்குப் போய் வருவதற்கு பஸ் சேவை இல்லாமல் பொதுமக்கள் பெரும் அல்லோல கல்லோலப் படுகிறார்கள்.

பிரதானமாக, மூதூர் பகுதியிலிருந்தும், கந்தளாய், 6ம் கட்டை, தம்பலகமம், முள்ளிப்பொத்தானை, மங்கி பிறிட்ஜ், ஆண்டான் குளம், மிகுந்தபுரம், பாரதிபுரம், அன்புவளிபுரம், அனுராதபுரம் சந்தி, பாலையூற்று, மட்கோ, லிங்கநகர், உப்புவெளி, செல்வநாயகபுரம், சிறிமாபுரம், அபயபுரம், சல்லி, சாம்பல்தீவு, குச்சவெளி, இறக்கக் கண்டி, புடவைக்கட்டு, மடத்தடி, மட்டிக்களி, பெரியகடை என்.சி.ரோட், திருஞானசம்பந்தர் வீதி முதலாம் இடங்களில் இருந்தும் வைத்தியசாலைக்குச் செல்வோர், எந்தவித பஸ் வசதியுமின்றி தனியார் வாகனங்களையே நம்பியிருக்கும் அளவுக்கு நிலைமை மோசமடைந்துவிட்டது.

மக்கள் மயப்படுத்தப்பட்ட பஸ் சேவை, யாருக்காக நடத்தப்படுகின்றது என்று பொதுமக்கள் யாவரும் கேள்விக் கணை தொடுக்கிறார்கள்.

பஸ்நிலையத்திலிருந்து புறப்படும் பஸ்கள் யாவும், வைத்தியசாலைக்குச் சென்று, நீதிமன்ற வீதி வழியாக, தபாற் கந்தோர் சந்தியை அடைந்து, தற்போது மேற் கொள்ளும் பாதைவழியாக எல்லா இடங்கட்குச் செல்லவும், திரும்பிவரும் போதும் அதே பாதையால், வைத்தியசாலை ஊடாக பஸ் நிலையத்தை அடைய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

மக்களுக்காக பஸ் சேவையா? பஸ் சேவைக்காக மக்களா? என்று கேட்க விளைகிறார்கள் பொதுமக்கள்.

ஜி. மரியநாயகம்–திருமலை.

### திருத்தப்பட்டது பாதி! பழுதுள்ளது மீதி!!

04.07.1993ம் திகதி தினமுரசு வாரமலர் புகார் பெட்டியில் பிரசுரிக்கப்பட்ட, 'புத்தளம் மாவட்டத்தில் அமைந்துள்ள கொத்தாந்தீவு போக்குவரத்துப் பாதை பள்ளமும், குழியுமாகக் காணப்படுகிறது.' என்ற தகவலுக்கு அண்மையில் பலன் கிடைத்தது. ஆனால் அது அதிக பலன் அளிக்கவில்லை. காரணம் இப்பாதையின் சில பள்ளம் குழிகளைத் திருத்தம் செய்துவிட்டு, ஏனைய பகுதிகளைத் திருத்தம் செய்யாமல் விட்டு விட்டார்கள்.

### புகார் பெட்டி

இதனால் இப்பாதை அண்மையில் பெய்த அடை மழை காரணமாக மிகவும் மோசமான நிலையில் காட்சியளிக்கிறது. இப்பாதையில் ஏற்பட்ட பள்ளம், குழிகளில் நீர் நின்று இன்னும் படுமோசமாக காணப்படுகிறது இப்பாதை. இப்பாதையால் வாகனங்களுக்கோ, துவிச்சக்கர வண்டிகளுக்கோ போகமுடியாத நிலை. பயணிகள் கஷ்டத்தின் மத்தியில் தான் 2 1/2 மைல் தூரம் செல்ல முடியும்.

இனிவரும் காலங்களில் இப்பாதை திருத்தம் செய்தால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அதிகளவு செலவிட வேண்டும். காரணம் அவ்வளவு மோசமான பாதையகும் கொத்தாந்தீவு போக்குவரத்துப் பாதை ஆகவே இனியாவது இப்பாதையை ஒழுங்காக திருத்தும்படியும் சம்பந்தப்பட்டவர்கள் கண்டிப்பாக கவனம் எடுக்கும்படியும் மக்களின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

எம்.ஏ.ஏ. ஜுனூத்
கொத்தாந்தீவு.

### இங்கே இப்படியும் பேசப்படுகிறா தமிழ்?

இலங்கையில் தமிழ் மொழிக்கு அரசியல் அந்தஸ்து கொடுபட்டுவிட்டது. தமிழ் தேசிய மொழி–அரசகரும மொழியாக்கப்பட்டு விட்டது என்று ஜனாதிபதி முதல் பல அமைச்சர்கள் மேடை தோறும் முழங்கி வருகின்றனர்.

ஆனால் அரச ஸ்தாபனமான ரூபவாஹினியில் தமிழில் புதுமையான விளம்பரங்கள் ஒளிபரப்பாகின்றன. அங்கர், பிலிப்ஸ் மில்கப் ஒஃப் மெக்னீஷியா போன்றவற்றிற்கு விளம்பர நிகழ்ச்சிகளில் புதுமையான தமிழ் பேசப்படுகின்றது. தமிழர்களுக்கே இது விளங்காமல் தலையை இடித்துக் கொள்ளவேண்டும்போல் இருக்கின்றது. மற்றவர்கள் பார்க்கும்போது இலங்கையரின் தமிழ் பேசும் முறை இதுதான் என்றல்லவா எண்ணிவிடப் போகிறார்கள்.

நன்றாகத் தமிழ் பேசக் கூடிய சிங்களவர்கள் எத்தனையோ பேர் இருக்க இவ்வாறு தமிழைப் பேசி ஏன் ரூபவாஹினி கழுத்தறுப்புச் செய்யவேண்டும்? இதைப் பார்க்கும் தமிழர்களால் விளம்பரதாரர்களுக்கு எவ்வித பயனும் ஏற்படப் போவதில்லை. மாறாக வெறுப்பே ஏற்படும் என்பதை விளம்பரத்தாரர்கள் கவனத்தில் எடுப்பது நல்லது.

தமிழர்களின் முகத்தை தொலைக்காட்சியில் காட்டக் கூடாது (விளம்பரங்களுக்கு) என்று கட்டுப்பாடு ரூபவாஹினிக்கு இருக்குமானால் நல்ல தமிழ் குரலையாவது பயன்படுத்தலாமே. இதுவுமா தடை செய்யப்பட்டுள்ளது?

தமிழ் மொழிக்கு நல்ல முறையில் அந்தஸ்த்து வழங்கப்பட்டுள்ளதை ரூபவாஹினி இந்த விளம்பரங்கள் மூலம் வெளியுலகுக்கு எடுத்துக் காட்டுவதை சம்பந்தப்பட்டவர்கள் ஏன் இன்னும் உணரவில்லை?

வி.எஸ். நாதன்–கொழும்பு–11.

# எக்ஸ்ரே ரிப்போர்ட்

# பிரேமா இல்லாத வெற்றிடம்!

நாரதர்

கடந்த வாரம் பிரதமர் ரணில் கிழக்கிலும், வவுனியாவிலும் தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் வெகு தீவிரமாக இருந்தார்.

அமைச்சர்கள் சிலரும் பிரச்சாரக் கூட்டங்களில் கலந்துகொண்டு ஆளும் கட்சிக்கு வாக்களிக்குமாறு வேண்டுகோள் விடுத்துக் கொண்டிருந்தனர்.

பிரதமர் ரணில், கிழக்கில் சிங்கள-தமிழ்-முஸ்லிம் மக்களின் ஒற்றுமை பற்றி பேசிக்கொண்டிருந்தவேளையில்,

ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா தெற்கில் சிங்கள மக்களின் ஒற்றுமை பற்றி பேசிக் கொண்டிருந்தார்.

சிறுபான்மையினர் பெரும்பான்மையினரின் கரங்களை பின்புறமாக மடக்கிப் பிடித்திருப்பதாகவும் ஜனாதிபதி கூறியிருந்தார்.

ஜனாதிபதியின் உரைகளைக் கேட்பவர்களுக்கு ஒரு சந்தேகம் வரக்கூடும்.

நாம் இருப்பது தென்னாபிரிக்காவிலா? அல்லது இலங்கையிலா? என்று சந்தேகத்தோடு யோசிக்கவைத்து விடுகிறார்.

தென்னாபிரிக்காவில்தான் பெரும்பான்மையின கறுப்பு இன மக்களை சிறுபான்மையின வெள்ளை இனத்தவர்கள் ஒடுக்கி ஆள்கிறார்கள். எனவே பெரும்பான்மை இனத்தவர்கள் தங்கள் உரிமைக்காக அங்கு போராடவேண்டிய நிர்ப்பந்தம்.

ஆனால், இங்கு நிலமை வேறு. தென்னாபிரிக்காவில் இருந்து பேசவேண்டிய பேச்சை நமது ஜனாதிபதி தெற்கில் இருந்து பேசிக் கொண்டிருப்பது சூழல் பொருத்தம் அல்ல; காலப் பொருத்தமும் அல்ல.

கிழக்கிலும், வவுனியாவிலும் தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் உரையாற்றிய அமைச்சர்கள் பிரச்சனைக்கு விரைவில் தீர்வு கண்டுவிடுவோம் என்று கூறினார்கள்.

புலிகள்தான் பேச்சுக்கான அழைப்புக்களை நிராகரித்துக் கொண்டிருக்கிறார்கள். அரசாங்கம் பேசுவதற்கு ஆயத்தமாக இருக்கிறது என்ற தோரணையில் பேசினார்கள்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் தமது கட்சிக்கு கணிசமான வாக்குகளைக் கவரவேண்டும் என்ற எண்ணத்தில் பிரதமர்

# ஆளும் கட்சிக்கு எதிரான வெற்று முழக்கங்கள்!!

ரணில் காலையும், மாலையும் பிரச்சாரக் கூட்டங்களில் பங்குபற்றிக் கொண்டிருந்தார்.

ஆனால் ஜனாதிபதி பிரச்சாரக் கூட்டங்களுக்கு செல்லவில்லை.

எனினும், கிழக்கிலும், வவுனியாவிலும் ஆளும் கட்சி அமைச்சர்களும், பிரதமரும் பேசிய பேச்சுக்களையெல்லாம் முற்றாக மறுக்கும் தொனியில் தெற்கேயிருந்து பேசிக்கொண்டிருந்தார்.

ஆக, மொத்தத்தில் ஆளும் கட்சியினரின் பிரச்சாரக் கூட்டங்களில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களுக்கு எதிரணி வேட்பாளர்கள் பதில் சொல்லவேண்டிய அவசியமே இருக்கவில்லை.

"இவர்கள் பொய் சொல்கிறார்கள். அதை நம்பி வாக்களிக்கவேண்டாம்" என்று எதிரணி சொல்லும் தேவையே இருக்கவில்லை.

அந்த வேலையை ஜனாதிபதியே செய்து கொண்டிருந்தார். எதிரணிகளின் தேவையை நிறைவேற்றிக் கொண்டிருந்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமை வேட்பாளர் ஒருவர் தமிழ் அரசியல் கட்சி ஒன்றின் பிரமுகரிடம் பேசும்போது, "நீங்கள் தேர்தலில் பிரச்சாரம் செய்யும் அவசியமே இல்லை. உங்களுக்காகத்தான் ஜனாதிபதி பேசுகிறாரே." என்று சலிப்போடு சொன்னாராம்.

அவ்வாறுதான் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர்கள் பலர் கையைப்பிசைந்து கொண்டிருந்தார்கள்.

ஒவ்வொரு ஆளும் கட்சி வேட்பாளரும் காலையில் எழுந்தவுடன் பத்திரிகைகளைப் பரபரப்போடு புரட்டிப் பார்த்துக் கொண்டார்கள்.

ஜனாதிபதி இன்று என்ன சொல்லியிருக்கப்போகிறாரோ என்று பயந்துகொண்டே பத்திரிகை படித்தார்கள்.

ஜனாதிபதியும் சலிக்காமல், தளராமல் "இனப்பிரச்சனையே இல்லை" என்று பேசிக் கொண்டிருந்தார்.

"எதிரணிகளுக்கு வெற்றி வாய்ப்பளிக்கின்ற பரந்த ஜனநாயக மனப்போக்கை ஜனாதிபதி கொண்டிருக்கிறார். இவ்வாறான ஒரு ஜனாதிபதியை பெற்றிருப்பது எமது அதிஷ்டம்" என்று ஒரு அரசியல் கட்சிப் பிரமுகர் விமர்சனம் செய்தார்.

இவ்வாறான நோக்கத்தில்தான் மறைந்த ஜனாதிபதி பிரேமதாசாவின் வெற்றிடம் வெளிப்படுகிறது.

பெரும்பான்மை இன மக்கள் மத்தியில் இருந்த அரசியல் தலைவர்களிடையே தமிழ்-முஸ்லிம் மக்கள் மத்தியில் அதிக செல்வாக்குப் பெற்ற தலைவராக இருந்தவர் பிரேமா மட்டுமே.

அவர் இன்று இருந்திருந்தால் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் பிரச்சாரங்களுக்கு தானே நேரில் சென்றிருப்பார்.

அமர்க்களமான அரசியல் பிரச்சாரத்தை கிழக்கிலும், வவுனியாவிலும் நடத்திக் காட்டியிருப்பார்.

எதிரணிகளது நிலையும் தர்மசங்கடமாகியிருக்கும்.

ஆளும் கட்சியை காரசாரமாகக் கண்டித்து, ஆளும் கட்சியை தாங்கள் பயங்கரமாக எதிர்ப்பதுபோல் வாக்காளர்களை நம்பவைத்து வாக்குகளை அறுவடை செய்ய தமிழ் கட்சிகள் சில பெரும் முயற்சி செய்தன.

பிரேமா ஜனாதிபதியாக இருந்தபோது சம்பந்தப்பட்ட கட்சிகள் விடுத்த அறிக்கைகள், பிரேமாவையும் அரசாங்கத்தையும் அதிகம் ஆதரிப்பது யார் என்று போட்டியிடுவது போலவே தென்பட்டன.

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய மாநாடுகளில் கலந்துகொண்ட தமிழ் அரசியல் கட்சிகள் ஜனாதிபதி பிரேமதாசாவின் கரங்களை பலப்படுத்தப்போவதாக ஒன்றுக்கு பத்துத்தடவை உறுதி சொல்லிக் கொண்டன.

எனவே, மறைந்த ஜனாதிபதி பிரேமதாசா உயிரோடு இருந்திருந்தால் அக் கட்சிகள் புலிகளைப் பற்றி மட்டுமே பேசியிருப்பார்கள். புலிகளை எதிர்ப்பது மட்டுமே தேர்தல் பிரச்சாரத்தின் முக்கிய கருப்பொருளாக இருந்திருக்கும்.

தவிரவும், தமிழ் கட்சிகள் நிறுத்திய வேட்பாளர்கள் பற்றிய பரலான அதிருப்திகளும், பிரேமதாசா மீதான நம்பிக்கைகளும் தமிழ் கட்சிகளை தேர்தலில் தர்மசங்கட நிலைக்கு உள்ளாக்கியிருக்கும்.

தேர்தலில் போட்டியிட்ட சகல தமிழ் அரசியல் கட்சிகளும் மக்களிடம் பொய் சொல்ல முற்பட்டன.

ஐக்கிய தேசியக் கட்சி, அரசாங்கத்தை தாம் ஆதரித்தது எதற்காக? எத்தகைய நோக்கங்களுக்காக என்பதை வெளிப்படையாகச் சொல்லி மக்களுக்கு தமது கொள்கைகளை விளக்கும் அரசியல் துணிச்சல் யாருக்கும் இருக்கவில்லை.

இன்றைய ஜனாதிபதியின் பேச்சுக்கள், தமிழ் மக்களுக்கிடையே அதிருப்திகளை தோற்றுவிக்கின்றன. அதனால் அரசாங்கத்திற்கு எதிரானவர்கள் என்றே காட்டிக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில், தமது கடந்தகால செயற்பாடுகளை மக்கள் மறந்திருப்பார்கள் என்ற நம்பிக்கையில் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தை ஒரு பிடி பிடித்தார்கள்.

அதிலும் 'ரெலோ' அமைப்பு "அவன் இவன்" என்ற ஏக வசனத்தில் பேசி தனது தீவிரமான "தமிழர் பற்றுணர்ச்சியை" பறைசாற்றியது.

இப்போதும் அரச படைகளோடு நின்றுகொண்டு, அரசாங்கம் வழங்கியுள்ள ஆயுதங்களை கையில் வைத்துக்கொண்டு, பாதுகாப்பு அமைச்சிடம் நிதியுதவியும் பெற்றுக்கொண்டு "ஏனைய தமிழ் அமைப்புக்கள் துரோகிகள்" என்ற பாணியில் ரெலோ மேடைகளில் பேசப்பட்டதுதான் மாபெரும் வேடிக்கை.



இவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியை எதிர்க்கிறார்களாம்.

ஆனால் அந்தக் கட்சியினால் நடத்தப்படும் அரசாங்கத்தின் ஆணைப்படி செயற்படும் படையினரோடு மட்டும் சேர்ந்து நிற்பார்களாம்.

ஜனாதிபதியை காரசாரமாகக் கண்டிப்பார்களாம்.

அதே ஜனாதிபதி ஆணையிடும் தளபதியாக உள்ள படையினரோடு ஒத்துழைப்பார்களாம்.

மற்றைய கட்சியை நோக்கி கைகாட்டி, "அவர்கள்தான் ஐக்கிய தேசியக் கட்சியின் கையாட்கள்" என்று கூறவேண்டியது,

பின்னர் மாதம் முடியும் போது புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் ஏற்படும் செலவுகளுக்கு என்று பாதுகாப்பு அமைச்சிடம் நிதி பெற்றுக்கொள்வது.

ஆக, யாரை ஏமாற்றப் பார்க்கிறார்கள்? தம்மையும் ஏமாற்றிக்கொண்டு மக்களையும் ஏமாற்றுகிறார்கள்.

ஐக்கிய தேசியக் கட்சி அரசு மீது நம்பிக்கையில்லை.

ஜனாதிபதி மீதும் நம்பிக்கை இல்லை.

அப்படியானால் இவர்கள் படையினரோடு நின்று என்ன சாதிக்கப் போகிறார்கள்?

படையினர் விடுவித்த பகுதிகளில், படையினர் உள்ள பகுதிகளில் மட்டுமே தரித்திருக்கும் தமது அணிகளை சொந்த பலத்தில் புலிகளை நோக்கி போரிட அனுப்புவார்களா?

ஓட்டும் வேண்டாம், உறவும் வேண்டாம் என்றுவிட்டு எதிரணிகளோடு இணைந்து அரசாங்கத்திற்கு எதிராக அரசியல் போராட்டம் நடத்த தயாராக இருக்கிறார்களா?

படையினர் வாபஸ்பெறும் பகுதிகளில் இருந்து, அவர்களுக்கு முன்னரே வாபஸ் பெற்றுவிடும் பலத்தில் இருந்துகொண்டு- அதாவது அரச படையினரது பலத்தில் சார்ந்திருந்துகொண்டு மேடைகளிலும், அறிக்கைகளிலும் வெற்று முழக்கங்கள்- அரச எதிர்ப்பாளர்களாகக் காட்டும் முயற்சிகள்.

புலிகள் பலத்தோடு இருக்கிறார்கள். அவர்களை எதிர்த்துச் செயற்பட சில தந்திரோபாயங்கள் அவசியம் என்று சொல்லலாம்.

அப்படியானால் அதனை நேர்மையாக- உண்மையாக மக்களிடம், நேரடியாகச் சொல்லவேண்டும்.

அதைவிடுத்து "அவர்கள் தான் கையாட்கள். நாங்கள் படு சுத்தம்" என்ற பாணியில் பேசுவது அரசியல் ஏமாற்று.

உள்ளூராட்சி தேர்தலில் சகல தமிழ் கட்சிகளின் பிரசுரங்களிலும் ஆளும்கட்சி எதிர்ப்பு இருந்தது.

ஆனால் தாம் அரச படையினரோடு நிற்பது ஏன்? அரச உதவி பெறுவது ஏன்? தாம் அனைவரும் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தை முன்னர் ஆதரித்தது ஏன்? இப்போது தமது நிலைப்பாடு என்ன? இனிமேல் எவ்வாறு செயற்படப் போகிறார்கள்? அரசாங்கம் செல்லும் போக்கு தவறானதா? அதற்கு எதிராக என்ன செய்யப் போகிறார்கள்? போன்ற விளக்கங்கள் எதுவும் காணப்படவில்லை.

வெற்று முழக்கங்களும், வெறுமனே கண்டிக்கும் வாக்கியங்களும் மட்டுமே போதுமானவையல்ல. வாக்காளர்களை திருப்திப்படுத்த அதுவே போதுமானது என்று நினைத்திருக்கலாம்.

ஆனால், மறைந்த ஜனாதிபதி பிரேமதாசா இருந்திருந்தால் இவ்வாறான போக்குகளுக்கு இடம் ஏற்பட்டிருக்காது.

அரசியல் தலைமைத்துவம் வடக்கு-கிழக்கில் வங்குரோத்து நிலைக்கு உள்ளானதை ஆளும்கட்சி பயன்படுத்தியிருக்கக்கூடும். ■

# பிரபாவைப் பிடிக்க இரகசியப் படை அவலை நினைத்து உரலை இடித்த கதை



பிரபாகரன்

பிரபாகரனை பிடிப்பதற்காக இந்தியாவில் இருந்து ஒரு படை வந்துவிட்டதாக அரச சார்பு பத்திரிகைச் செய்திகள் கட்டிவிட்ட கதை அத்தனை சுவையானதல்ல. சுவாரசியமனதும் அல்ல.

இவ்வாறான வதந்திகளும், பிரச்சாரங்களும் அரச தரப்பினரோ, அல்லது அவற்றின் பின்னணியில் உள்ளவர்களோ நினைப்பதற்கு மாறான விளைவுகளையே உருவாக்கிவிடுகின்றன.

"ராஜீவ் காந்தி கொலையாளிகளை இலங்கை சென்று பிடித்துவர வேண்டும்" என்று டில்லியில் ஒரு குழுவினர் கோரிக்கை விட்டனர்.

அதனை அறிந்துகொண்டு கற்பனைச் சக்திக்கு மிக அதிகமாக வேலை கொடுத்து ஒரு செய்தியை இங்கே உருவாக்கி விட்டார்கள். முக்கிய செய்தியாக முதல் பக்கத்தில் அதனை வெளியிடவைத்து திருப்திப்பட்டார்கள்.

யாரும் நம்பியதாகவே தெரியவில்லை. தமது கற்பனை வளத்துக்கு முன்பக்கத்தில் இடம் கிடைத்ததை நினைத்து சம்பந்தப்பட்டவர்கள் மட்டுமே சந்தோசப்பட்டிருப்பார்கள்.

இவ்வாறான பிரச்சார முறைகள் ஒரு தோற்றப்பாட்டை உருவாக்கப் போகின்றன.

"பிரபாகரன் யாராலும் நெருங்க முடியாதவர். சுலபத்தில் வெல்லப்பட முடியாதவர்" என்றே மக்கள் கருதும் நிலை ஏற்படும்.

இந்தியப்படை 'பிரபாகரன் மடிந்துவிட்டார்' என்றது. அது பொய் என்றாகியது.

இப்போது பிரபாகரனை பிடிக்க இரகசியப்படை வந்திருக்கிறது என்றார்கள்.


பிரபா கைதாகி ஹெலிகாப்டரில் இந்தியாவுக்கு கொண்டு செல்லப்பட்டு விட்டதாகவும் ஒரு வதந்தி தெற்கே உலாவியது.

பின்னர் அனைத்தும் பொய்யான நிலையில் மக்கள் பேசிக்கொண்டது இதுதான்,

"அதுதானே பிரபாகரனையாவது பிடிப்பதாவது"

பிரபாகரனது பிறந்தநாள் எப்போது என்று பிரச்சாரம் செய்வதில் இருந்து, பிரபாகரனை அதிசய மனிதராக்கும் பிரச்சாரம் வரை அனைத்தையுமே தெற்கில் உள்ள சிலரே கவனித்துக் கொள்கின்றனர்.

அவலை நினைத்துக்கொண்டு உரலை இடிக்கிறார்கள். ■



# அதிரடி அய்யாத்துரை

எங்கை போனாலும் எங்கடை ஆட்களுக்கு போட்டிக்குணம் போகாது பாருங்கோ. கனடாவில எங்கடை ஆட்கள் சிலர் கடை போட்டு வியாபாரம் செய்கினம். நல்ல வியாபாரம் நடக்குது எண்டு தெரிஞ்சா அட.... நானும் ஒரு கடை போட்டா என்ன? எண்டு எங்கட ஆக்கள் வேறை சிலரும் யோசிப்பினம். உடனடியா வியாபாரம் நடக்கிற கடைக்கு பக்கத்திலை தாங்களும் ஒரு கடையைச் செருக, கடைசியாகப் பார்த்தா ரெண்டு கடையும் அவுட். வியாபாரமும் அவுட். எப்ப திருந்தப் போகினமோ?

வெளிநாடுகளிலை எங்கடை ஆட்கள் நிறையப் பத்திரிகைகள் வெளியிட்டு பத்திரிகைப் பெருக்கம் செய்யினம். என்ன ஒரு குறை எண்டால் பல பத்திரிகைகள் ஒரு வெளியீட்டோடை ஒளிச்சுக் கொள்ளுறதுதான். உருப்படியாய் வாற பத்திரிகைகள் எண்டு பார்த்தா ஒரு கை போதும் எண்ணிப் பார்க்கிறதுக்கு.

யாழ்ப்பாணத்திலை இருந்து கொழும்புக்கு வாற சின்னப் பிள்ளையளிட்டை ஒரு பாட்டுப் பாடுங்கோ எண்டு கேட்டா வம்புதான். அதுகள் ரெண்டு எழுத்தாற்றைப் பாட்டைப் பாட, பாடச் சொல்லிக் கேட்டவர் ஓடிப்போய் வீட்டுக்கதவைச் சாத்திப் போட்டு வெளியிலை கேட்டிருக்குமோ என்று பயந்துகொண்டிருக்க வேணும். மருமோனைப் பாடச்சொல்லக் கேட்ட மாமன் ஒருத்தர் சொன்னது என்ன தெரியுமோ? "இவன் பாடுவான். நான்தானே உள்ளுக்கை போய் இருக்கவேணும்"

வாக்குளை பழுதாக்கச் சொல்லி கூட்டான அணியினர் அனுப்பிவைச்ச பிரசுரங்களை கிழக்கிலை இருந்த பிரமுகர்கள் கையிலை வைச்சுக் கொண்டு யோசித்துக்கொண்டிருந்தவையாம். அதிலை சிலர் ஏற்கனவே ஒரு சில அணிகளுக்கு சார்பாய் பிரச்சாரங்களையும் ஆரம்பிச்சுப் போட்டினம். பிறகு எப்படி அவை பிரசுரங்களை அனுப்பிறது. அதுதான் யோசிச்சவை. பக்குவமாய் ஒளிச்சுப் போட்டினம் எண்டு கேள்வி.

வடக்கு-கிழக்கு சபையிலே புதியவர் நியமனமான பின்னர் களையெடுப்புக்கள் நடக்குதாம். கேட்க ஆளில்லை என்று வெள்ளைக் கொலரைத் தூக்கிவிட்டபடி திரிஞ்ச சிலர் இப்ப முழிபிதுங்கியபடி திரியினம் பாருங்கோ.

அந்தக்காலத்திலை கோடீஸ்வரன் வழக்கு அரசாங்கத்தை ஒரு கலக்கு கலக்கினது. இப்பவும் ஒரு குட்டிக் கோடீஸ்வரன் வெளிக்கிட்டிருக்கிறார். வடக்கு-கிழக்கிலுள்ள மாகாண அதிகாரிகள் பலரின் நிர்வாக தில்லுமுல்லுகளை நீதிமன்றத்தில் புட்டுப்புட்டு வைக்கப் போகிறாராம். நல்ல காரியம் தானே.

இராணுவத்தில் இருந்து விலக்கப்பட்ட கொத்தலாவலையர் கனடாவிலை உள்ள ரெண்டு எழுத்துக்காரார்களோடு சுற்றித்திரியிறதாய் தகவல். என்னத்தையெல்லாம் சொல்லித் தொலைக்கப் போகிறாரோ எண்டு இஞ்சையுள்ளவை யோசிக்கினமாம்.

இப்ப பாருங்கோ ஒரு புதுக்கவிதை. எழுதின யார் எண்டு கேப்பியள். பொன்மணி வைரமுத்து. காதல் என்றால் என்ன? சுருக்கமாய் பளீர் எண்டு சொல்லியிருக்கிறார்.

"எண்ணப் பரிமாறல்களின்
ஏதோ ஒரு நிறுத்தத்தில்
ஓர் இதயம் சறுக்கி
இன்னோர் இதயத்தில்
விழுந்துவிட நேர்கிறதே
அதுதான்
காதல்."

எத்தனை கன்னியமாய் சொல்லியிருக்கிறார் பாத்தியளோ?

## உலக ரவுண்டப்

### ஏந்திகள் அங்கும் உண்டு!

அமெரிக்காவில் பிச்சைக்காரர்கள் தொகை அதிகரித்து வருகிறது.

வீடில்லாதோர் தொகையும் உயர்ந்து வருகிறது.

சமீபத்தில் எடுக்கப்பட்ட புள்ளி விபரம் ஒன்றின் படி 70 இலட்சம் பேர் வீடில்லாமல் தவிக்கின்றனர்.




நம்ம தொழிலுக்கும் வெளிநாட்டவர்கள் வரலாம் என்று அரசாங்கம் சொல்லாதவரை நல்லது.

# மீண்டும் மூன்று 'நறுக்-நறுக்'!

## தென் கொரியாவில் 2 – ஜெர்மனியில் 1

அமெரிக்காவில் நடந்தது போலவே தென்கொரியாவிலும் ஒரு "நறுக்" விவகாரம் அங்குள்ள ஆண்களை நடுங்க வைத்துள்ளது.

அமெரிக்காவில் தனது கணவரது ஆண் உறுப்பை ஒரு பெண் கத்தியால் "நறுக்" பண்ணியிருந்தார்.

கணவரது கொடுமை தாங்காமல் அவர் 'நறுக்' பண்ணியதாக கூறிய நீதிபதி அப்பெண்ணை விடுதலை செய்திருந்தார்.

இப்போது மற்றும் ஒரு சம்பவம். தென்கொரியாவின் தலைநகரான சியோலில் இருந்து 220 கி.மீ தொலைவில் உள்ளது கிம்யோ நகரம்.

அங்குள்ள கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றின் பின்புறமாக உள்ள புதர் ஒன்றில் ஒரு ஆணின் பிணம் கண்டுபிடிக்கப் பட்டது. அந்த ஆணின் உறுப்பு துண்டிக்கப் பட்டிருந்தது.

இதேபோல் மற்றொரு சம்பவம். கடந்த ஜனவரி 26ம் திகதி தென்கொரிய சியோல் நகரில் கட்டிட தொழிலாளி ஒருவர் ஆண் உறுப்பு துண்டிக்கப்பட்ட நிலையில் கிடந்தார். மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்படும் போது அவர் இறந்து விட்டார்.

இந்த இரண்டு "நறுக்" விவகாரங் களும் தென்கொரியாவில் ஆண்களை பீதிடைய வைத்துள்ளது.

"நறுக்" விவகாரம் ஜெர்மனியிலும் ஒரு கலக்குக் கலக்கியிருக்கிறது.

பத்திரிகைச் செய்திகள் எங்கும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.

ஜெர்மனியில் உள்ள பிராங்பர்ட் நகரில் 50 வயதான பெண் ஒருவர் தனியே வசித்து வந்தார்.

அவரது வீட்டின் அருகே உள்ள 56 வயதான ஹன்ஸ் ஜோவின் என்பவர் தகாத ஆசையோடு அவரை நெருங்கி யிருக்கிறார்.

அவ்வளவு தான். 50 வயதான ஹெயிடா மேரி சிப்சி என்ற அந்த பெண் மணிக்கு வந்தது கோபம். கத்தியை எடுத்து ஒரே "நறுக்". பின்னர் ஆண் உறுப்பை எடுத்து நாற்காலியில் வைத்து தீயிட்டுக் கொளுத்தி விட்டார்.

வழக்கு ஜெர்மன் நீதிமன்றத்துக்கு வந்தது.

ஆண் உறுப்பை வெட்டியதற்காக ஹெயிடா மேரிக்கு மூன்று ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

பெரிய குற்றத்திற்கு சிறிய தண்டைன ஏன்? இதனால் மேலும் இது போன்ற குற்றங்கள் பெருகும் என்று ஆண்கள் பலர் சீற்றம் தெரிவிக்கின்றனர்.

ஆனால் நீதிபதி தனது தீர்ப்பில் "பயம் காரணமாவே ஹெயிடா மேரி இக்குற்றத்தை செய்துள்ளார். திட்டமிட்டு நடந்த குற்றமல்ல. எனவே தான் மூன்று ஆண்டுகள் தண்டனை வழங்கப்படுகிறது" என்று கூறியுள்ளார்.

அமெரிக்கப் பெண்ணின் பாதையில் நடக்கும் "நறுக்" விவகாரங்கள் எங்கு போய் முடியுமோ?

## யுத்தநிலத்தின் உற்பத்தி! புன்னகை சிந்தும் பூஞ்சிட்டு!!

யூகோஸ்லாவியாவில் உள்நாட்டு யுத்தம் தொடர் கதையாகி விட்டது. இதயமற்ற சேர்பியத் துருப்புகள் பல்லாயிரக்கணக்கான குரோஷியப் பெண்களைக் கற்பழித்த கதைகள் உலகச் செய்தித்தாள்கள் அனைத்திலும் இடம் பிடித்திருந்தன. இத்தகைய வகை தொகையற்ற கற்பழிப்புகளினால் பல ஆயிரம் வேண்டப்படாத குழந்தைகளும் பிறந்துள்ளன. அவ்வாறு பிறந்த அழகான ஆண்குழந்தை ஒன்றையே இங்கே காண்கிறோம். கள்ளங்கபடமற்ற இந்த 6 மாதக் குழந்தை இப்பொழுது ஒரு அமெரிக்கக் குடும்பத்துடன் ஒட்டிக் கொண்டது. போர் கொடுமைகளை மட்டுமல்ல, குழந்தைகளையும் உருவாக்குகிறது. யுத்தப் புழுதியில் உருவாகும் பூஞ்செடிகளாய் பிறக்கும் குழந்தைகள் அநாதைகள் என்று கைவிடப்படுகையில் எதிர் காலம் கருகிப் போகின்றது.



# விமானக் காட்சியில் திடீர் விபரீதம்!

## தவறவிடாமல் 'கிளிக்' செய்தார் படப்பிடிப்பாளர்

இது நடந்தது 1989ம் ஆண்டு ஜூன் மாதம் 8ம் திகதி.

பாரிஸ் நகரில் பேபோர்கெட் விமான நிலையத்தில் விமானங்களின் அற்புதமான திறனைக் காட்ட ஒரு கண்காட்சி.

அதனைக்காண திரண்டிருந்தனர் ஆயிரமாயிரம் மக்கள்.

மேலே எழுந்து, கரணமடித்து பின்னர் செங்குத்தாக கீழே இறங்கி, பின் உயர எழுந்து விமானங்கள் சாகசம் செய்ய பார்வையாளர்கள் திறந்த வாய் மூடாமல், விழிகள் அசைக்காமல் மெய்மறந்து இரசித்துக் கொண்டிருந்தனர்.

அப்போதுதான் அந்த திடீர் விபரீதம் நேர்ந்தது.

அது ஒரு 'மிக் 29' ரக போர் விமானம். ரசியாவின் தயாரிப்பு.

மேலே 580 அடி உயரத்திற்கு சென்று செங்குத்தாக கீழே வந்தது.

மீண்டும் வேகமாக மேலே எழும்ப வேண்டிய நேரத்தில் இயந்திரத்தில் திடீர் கோளாறு.

விமானி எவ்வளவோ முயன்றும் விமானம் தரை நோக்கி செல்வதைத் தடுக்க முடியவில்லை.

தரையிலே மோதிய விமானம் பெரிய சத்தத்தோடு வெடித்து தீம்பிழம்பாகியது.


விமானி புத்திசாலி. விமானம் மோதுவதை தடுக்க முடியாது என்று தெரிந்து கொண்டு, பாரசூட்டின் உதவியோடு வெளியே பாய்ந்து விட்டார்.

எல்லாமே விரைவாக நடந்துவிட்டன. விமானி தரையில் விழும்போதே விமானமும் தரையில் மோதி தீம்பிழம்பாகியது.

அத்தனை பரபரப்பிலும் சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த படப்பிடிப்பாளர் சி.கிளன்ற்ஸ் அந்த விபரீத காட்சியை தனது கமராவுக்குள் உள்வாங்கிக்கொண்டார்.

கமரா கதை சொல்லுகிறது. நேரில் காணமுடியாதவர்களுக்கும் நேர்ந்த பயங்கரத்தைக் காட்டுகிறது.

அன்று நடந்த பயங்கரம் இன்றும் பட வழியாக கண் முன்னால் தெரிகிறது.



இடது மேல்: வெளியே பாய்கிறார் விமானி. வலது: தரைநோக்கி ஒரு புறம் விமானம். மறுபுறம் விமானி. கீழே: தரையில் மோதி எரியும் விமானம். தரையில் விழுந்து தப்பும் விமானி.

## அந்தோ பரிதாபம்



படத்தில் இருப்பவர் சாதாரண மனிதரல்ல. இந்திய மத்திய உள்துறை அமைச்சராக இருந்தவர். மிக முக்கிய பொறுப்பு அது. சீக்கிய மதத்தைச் சேர்ந்தவர். பெயர் பூட்டாசிங். அன்று பொற்கோயில் இராணுவ நடவடிக்கைக்கு இவரும் உடந்தையாக இருந்தார் என்று கூறி சீக்கிய மதபீடம் இவரை மதத்தில் இருந்து வெளியேற்றியது.

இப்போது மன்னிப்புக் கேட்டார் முன்னாள் மந்திரி. மன்னிக்க வேண்டுமானால் டில்லியில் உள்ள எமது மத ஆலயத்தில் பக்தர்களின் பாதச் செருப்புக்களைத் துடைக்கவேண்டும் முன்னாள் மந்திரி.

சம்மதமா? என்று கேட்டது மத மேலிடம்.

"சம்மதம். அன்று நடந்தது. ஆலயத்திற்குள் ஆமி புகுந்தது. அதற்கு இன்று என் இதயம் துடிக்குது. என் கரம் செருப்பு துடைக்குது" என்று சொல்லாத குறையாக செருப்புத் துடைக்கிறார் முன்னாள் மந்திரி. மந்திரியாக இருந்தபோது அவர் செருப்பு துடைக்க எத்தனை பேர் இருந்திருப்பார்கள்? அந்தோ பரிதாபம்.

## சட்ட விரோதமா? சவுக்கடி நிச்சயம்!

### தொடையிலும் தோலுரியும் பிரம்படி!!

மலேசியாவில் வேலை தேடிச் செல்லும் வெளிநாட்டவர்கள் சட்டவிரோதமாக அங்கு தங்கியிருப்பதுண்டு.

அதனைத் தடுக்க மலேசியா அரசு கடும் நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்துள்ளது.

இதுவரை 20 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் அங்கு சட்டவிரோதமாக தங்கியுள்ளனர். அவர்களை வெளியேற்ற மேற்கொண்ட முயற்சிகள் பலன் அளிக்கவில்லை.

ஆகவே, மலேசிய உள்துறை அமைச்சகம் புதிய அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

சட்ட விரோதமாக மலேசியாவில் தங்கியிருப்போர், அவர்களுக்கு உதவி செய்வோர் ஆகியோரைக் கண்டுபிடிக்குமாறு பொலிசாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

அவ்வாறு கண்டுபிடிக்கப்படும் நபர்களுக்கு சவுக்கடி வழங்கப்படும். பின்னர் தொடையில் தோலுரிபடும் அளவுக்கு பிரம்பால் தடியடி நடத்தப்படும்.

மனித உரிமைகள் அமைப்பைச் சேர்ந்த பலர் சவுக்கடி தரும் மலேசிய அரசின் முடிவை எதிர்த்துள்ளனர்.

## மற்றொரு பிரசவ சாதனை!

### 9 நாள் இடைவெளியில் 4 குழுந்தைகள்!!

நான்கு குழந்தைகளை ஒரே நேரத்தில் பெற்றெடுத்த மகராசிகள் இருக்கிறார்கள். ஆனால் கனடாவில் உள்ள ஒரு மகராசி 9 நாள் இடைவெளியில் 4 குழந்தைகளைப் பெற்றெடுத்து புதிய உலக சாதனை படைத்துள்ளார்.

கனடாவில் உள்ள சசகாட்டுன் என்ற நகரில் ரோயல் யூனிவசிட்டி என்னும் மருத்துவமனையில் 28 வயது கர்ப்பிணி ஒருவர் சேர்க்கப்பட்டார்.

கடந்த நவம்பர் மாதம் 21ம் திகதி ஒரு ஆண் குழந்தை பிறந்தது. பின்பு நவம்பர் 29ம் திகதி அதே பெண்ணுக்கு பெண் குழுந்தை ஒன்று பிறந்தது. மீண்டும் மறுநாள் ஒரு பெண் குழந்தையும், ஒரு ஆண் குழந்தையும் பிறந்தது. நான்கு குழந்தைகளும் 2 முதல் 2.5 பவுண்ட் எடையில் இருந்தனர் என்று மருத்துவர்கள் தெரிவித்தனர். ஒன்றுக்கு மேற்பட்ட குழந்தைகள் எனினும் ஒரே நாளில்தான் பிறக்கும். இவ்வாறு 9 நாள் இடைவெளியில் 4 குழந்தைகள் பிறந்தது இதுவே முதற்தடவை என்று கூறப்படுகிறது.

## அங்குலிமாலா சரிதம்!

அஹின்ஸக என்ற அப்பாவிச்சிறுவன் சகல நற்பண்புகளும் நிரம்பிய புத்திசாலியாகக் காணப்பட்டான். படிப்பிலும் அவன் சாதுரியம் மிக்கவனாக விளங்கினான். குரு பக்தி, கீழ்ப்படிவு என்பன அவனிடமிருந்த சிறப்பான குணாம்சங்கள்.

அஹின்ஸகவுக்கு கல்வி புகட்டிய ஆசிரியர்களும் அவன்மீது பேரன்பு கொண்டிருந்தனர். ஆனால் அஹின்சகவின் நன்னடத்தை, நல்லறிவு, இதனால் அவன் பெற்றிருந்த நன்மதிப்பு என்பவற்றின் மீது அவனது சக மாணவர்கள் பொறாமை கொண்டனர். இதனையடுத்து அஹின்ஸக மீது அன்பும், மரியாதையும் கொண்டிருந்த ஆசிரியர்களிடம் அஹின்சக பற்றி அவதூறான தகவல்களை தெரிவித்தனர்.

இதன்காரணமாக நாளடைவில் அஹின்சக மீது அவனது குரு கோபமும் அவநம்பிக்கையும் கொள்ளலானார். அஹின்சகவை நயவஞ்சகமாகக் கண்டிக்கவும் அவனது குரு முடிவு செய்தார்.

அஹின்சகவின் குருபக்தியை அவனது ஆசிரியர் நன்கு அறிவார். எனவே அஹின்சகவை தன்னிடம் அழைத்து " நீ என்மீது உண்மையிலேயே பக்தி கொண்டிருந்தால், நூறு கைவிரல்களை வெட்டி வந்து அவற்றை என்னிடம் ஒரு மாலையாகத் தரவேண்டும் என்று தெரிவித்தார்.

இதனையடுத்து தனது குருவின் உத்தரவை ஏற்றுக்கொண்டவனாக, மனிதர்களின் கைவிரல்களை வெட்டும் காரியத்தை நன்மாணாக்கனாக இருந்த அஹின்ஸக ஆரம்பிக்கலானான்.

கொலையும், கொடூரமுமாக அஹின்ஸகவின் கைவிரல் வெட்டும்படலம் தொடர்ந்தது. நூறாவது கைவிரலாக தனது தாயாரின் கைவிரலை வெட்டுவதற்கு அஹின்ஸக தயாரானான். அவ்வேளையிலேயே புத்தபகவான் அஹின்ஸக முன் தோன்றி அவனது மூர்க்கக் குணத்துக்கு முற்றுப்புள்ளி வைத்தார். அத்துடன் அவனை ஒரு பௌத்த சந்நியாசியாகவும் மாற்றினார்.

நன்மாணாக்கனாக இருந்த அஹின்ஸக சந்தர்ப்ப சூழ்நிலைகளினாலேயே மனித விரல்களை வெட்டி 'அங்குலிமாலா' என்ற கொடூரமான பெயரையும் பெறலானான்.

எனவே 'அங்குலிமாலா'வின் சரிதம், புத்தபகவானால் புனர்வாழ்வு பெற்றுத் திருந்திய ஒரு கொலைஞனைப் பற்றியதாகவே, புத்த சமயக் கதைகளில் இடம்பெற்றுள்ளது.

# அங்குலிமாலா பற்றி பேசுவோர் புத்தரின் போதனைகளை நிலைநிறுத்தவேண்டும்!

### அலசுவது – இராஜதந்திரி

இந்த 'அங்குலிமாலா'வின் கதையை மையமாக வைத்தே அண்மையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே. பிரபாகரனை நோக்கி பேச்சுவார்த்தைகளுக்கு வரும்படி அழைப்பு விடுத்திருந்தார்.

"அங்குலிமாலா ஒரு கொலைஞனாக இருந்து பின்னர் ஒரு நல்லவனாகச் சீர்திருந்தியதுபோல பிரபாகரனும் போரிடுவதைக் கைவிட்டு, பேச்சுவார்த்தைகளில் பங்குபற்ற முன்வரவேண்டும்," என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டிருந்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க 'அங்குலிமாலா'வின் கதையை மேற்கோள் காட்டி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தலைவர் திரு. வே.பிரபாகரனை பேச்சுவார்த்தைகளுக்கு வரும்படி அழைத்திருந்தார்.

திரு.வே.பிரபாகரன் சிலகாலத்துக்கு முன்னர் பத்திரிகையொன்றுக்கு வழங்கிய பேட்டியொன்றில் தாம் ஓர் ஆயுதபாணியாக மாறுவதற்கு, தென்னிலங்கையில் 1950ம் ஆண்டில் இடம்பெற்ற இனக்கலவரத்தில் தமிழரான ஆலய பூசகர் ஒருவர் தீயிடப்பட்டுக் கொலை செய்யப்பட்ட விதம் பற்றிக் கேள்வியுற்ற கதையும் ஒரு முக்கிய காரணமாக அமைந்திருந்தது எனக் குறிப்பிட்டிருந்தார்.

திரு.பிரபாகரன் தாம் ஓர் ஆயுதபாணியாக மாறுவதற்கு ஆலய பூசகர் ஒருவர் கொலையுண்டது பற்றிய கதையும் முக்கிய காரணமாக இருந்தது என்று குறிப்பிட்டிருந்தார். திரு.பிரபாகரன் மட்டுமல்ல வடக்கே ஆயுதக் குழுக்களாகத் தோற்றம் பெற்ற பல்வேறு தமிழ் அமைப்புக்களைச் சேர்ந்த தமிழ் போராளிகள் பலரும் 1983ம் ஆண்டில் இனக்கலவரத்தின் கொடூரம், மற்றும் தமது சொந்த வாழ்வில் கல்வி, சமூக, அரசியல், பொருளாதார ரீதியாக ஏற்பட்ட பாதிப்புக்களையடுத்தே ஆயுதபாணிகளாக மாறியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ் பேசும் மக்களின் பாதுகாப்பு, சுயநிர்ணய உரிமை, பிரதேச சுயாட்சி என்பவற்றை வென்றெடுப்பதற்கான ஒரு போராட்டம் என்றே தமிழீழ விடுதலைப் புலிகள் உட்பட அனைத்து தமிழ் போராட்ட அமைப்புக்களும் தமது நடவடிக்கைகள் குறித்து ஆரம்பத்தில் அறிவித்திருந்தன.

பூட்டான் தேசத்தின் தலைநகரான திம்புவில் இலங்கை அரசுக்கும் இலங்கையின் தமிழ் அரசியல் குழுக்களுக்கும் இடையே இந்தியாவின் மத்தியஸ்தத்துடன் 1984ம் ஆண்டு இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளின்போது கூட தமிழ் அரசியல் குழுக்கள் தமது வேற்றுமைகளை மறந்து ஒன்றாகச் செயல்பட்டிருந்தன.

ஈரோஸ் இயக்க முக்கியஸ்தராக இருந்த வே.பாலகுமார், ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்க செயலதிபராக இருந்த கே.பத்மநாபா, டெலோ இயக்கத்தலைவராக இருந்த ஸ்ரீ சபாரத்தினம், தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தலைவர் வே.பிரபாகரன் ஆகியோர் திம்பு பேச்சுக்களையடுத்து ஒன்றாக கைகோர்த்து நின்று தமது ஒற்றுமையை வெளியிட்டிருந்தனர்.

ஆனால் இந்த ஒற்றுமை மிகச் சில காலமே நீடித்திருந்தது. தமிழ் போராட்ட இயக்கங்களுக்கிடையே ஏற்பட்ட மோதல்கள் இயக்கத் தலைவர்களையும், கொன்றுவிட்டிருந்ததுடன், பல நூற்றுக்கணக்கான தமிழ்ப் போராளிகளையும் இயக்கங்களுக்கிடையேயான முரண்பாடுகள் பலியெடுத்திருந்தன.

இதுதவிர வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் வாழும் அப்பாவித் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களும் பல்வேறு வகையான கொடுமைகளுக்கும் முகங் கொடுத்தவர்களாகவே காணப்பட்டனர்.

எனவே தமிழ் பேசும் மக்களின் நியாயமான உரிமைகளை வென்றெடுப்பதற்கும், அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்குமான போராட்டமாக அறிவிக்கப்பட்டிருந்த வடக்கு-கிழக்கின் ஆயுதப் போராட்டம், இன்று பல்வேறு இழப்புக்களையும் அடைந்ததாகவே காணப்படுகின்றது.

வடக்கு-கிழக்கின் தமிழ்பேசும் மக்கள் ஆயுதப் போராட்டத்தை ஆரம்பிப்பதற்கு தென்னிலங்கையில் பேரினவாத சக்திகளினால் காலத்துக்குக் காலம் மேற்கொள்ளப்பட்ட இன அடக்குமுறையே முக்கிய காரணமாக இருந்தது.

ஆனால் கடந்த பத்து வருடகாலத்தில் அரச படையினரின் யுத்த நடவடிக்கைகள் காரணமாக ஏற்பட்ட இழப்புக்களுடன், தமிழ் போராட்டக் குழுக்களின் கெடுபிடிகளால் ஏற்பட்ட பாதிப்புக்களும் பாரதூரமானவையாகவே இருக்கக் காணப்படுகின்றன.

தமிழ் போராட்ட அமைப்புக்களுக்கிடையிலான முரண்பாடுகள் மற்றும் தீவிரவாதிகளுக்கும், மிதவாதிகளுக்கு மிடையிலான பிளவுகள் என்பன வடக்கு-கிழக்கு நிலைமையை மேலும் சிக்கலாக்கிவிட்டுள்ளன.

வடக்கு-கிழக்கின் தமிழ் அரசியல் அமைப்புகளுக்கிடையில் ஒற்றுமையற்ற நிலை காணப்படுகின்றது. தமிழீழ விடுதலைப்புலிகள் முற்று முழுதாக ஓர் ஆயுதப் போராட்டக் குழுவாக இருந்து வருகின்றனர்.

இதேவேளை ஆயுதமேந்திய தீவிரவாதக் குழுக்களாக முன்பு இயங்கிய தமிழ் அமைப்புக்கள், அரசியல் ரீதியாக இயங்குகின்றபோதிலும் தம்மிடையே முரண்பட்ட போக்கினைக் கொண்டிருக்கக் காணப்படுகின்றன.

வவுனியாவிலும், கிழக்கிலும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை சில தமிழ் அரசியல் கட்சிகள் பகிஷ்கரித்திருந்தன. ஆனால் வேறு தமிழ் கட்சிகள் இந்த உள்ளூராட்சித் தேர்தல்களில் குதித்திருந்தன.

வவுனியாவிலும், கிழக்கிலும் புலிகளின் நடமாட்டங்கள் பெருமளவு கட்டுப்படுத்தப் பட்டுள்ளதையே இப் பிரதேசங்களின் உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் புலப்படுத்துவனவாக இருக்கின்றன.

ஆனால் வடக்கே நிலவும் புலிகளின் ஆதிக்கம் அரசுக்கு ஒரு சவாலாக இருக்கக் காணப்படுகின்றது.

வடக்கு-கிழக்கில் அரசாங்கம் தேர்தல்களை நடத்தலாம். அத்துடன் தனது நிர்வாகத்தையும் மேற்கொள்ளலாம். ஆனால் இருந்த போதிலும் ஜனாதிபதியின் பெரும்பான்மையினர், சிறுபான்மையினர் குறித்த கண்ணோட்டங்கள் சமரசப் பேச்சுக்களுக்கான சூழ்நிலைகளை எவ்வகையிலும் உருவாக்கமாட்டாது என்று குறிப்பிட்டிருந்தார்.

வடக்கு-கிழக்கு பிரச்னையின் அடிப்படையே இலங்கையின் பெரும்பான்மை, சிறுபான்மை இனங்களுக்கிடையிலான வேறுபாடுகளை மையமாகக் கொண்டதாக இருக்கின்றது.

ஆயுதப் போராட்டத்தில் குதித்துள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் மட்டுமல்ல, தென்னிலங்கையில் இருந்து இயங்கிவரும் ஏனைய தமிழ் அரசியல் கட்சிகள்கூட வடக்கு-கிழக்கின் அடிப்படை அரசியல் பிரச்னைகள் குறித்து அரசாங்கத்துடன் ஓர் இணக்கத்துக்கு வராதவையாகவே காணப்படுகின்றன.

இந்நிலையில் அரசாங்கம் தமிழீழ விடுதலைப்புலிகள், மற்றும் ஏனைய தமிழ்க்கட்சிகளுடன் விரிவான பேச்சுவார்த்தைகளை நடத்த வேண்டியது மிகவும் இன்றியமையாததாகின்றது.

மேற்கோள்காட்டி திரு.வே.பிரபாரனைப் பேச்சுவார்த்தைக்கு வரும்படி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்திருந்தார்.

ஆனால் மறுபுறத்தே அங்குலி மாலாவுக்கு புனர்வாழ்வளித்த புத்த பகவானின் போதனைகளை தமது அரசாங்கம் எவ்வளவுதூரம் பின்பற்றுகின்றது என்பதை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க செயல் ரீதியாக நிரூபிக்க வேண்டியவராகக் காணப்படுகின்றார்.

புத்த பகவான் ஒருபோதும் யுத்தத்தை ஏற்றுக்கொண்டதில்லை. ஏழை, எளிய மக்கள் மீதும், வறுமை, முதுமை, பிணி, பீடைகளினால் துன்பப்படும் மக்கள் மீதும் புத்த பகவான் கருணை கொண்டிருந்தார்.

அவரது போதனைகள் தார்மீகம் நிறைந்த ஓர் உன்னத வாழ்க்கை முறையையே வலியுறுத்தி நிற்கின்றது.

ஆனால் இலங்கையில் இன்று நடப்பவற்றை அவதானிக்கும்போது எந்தவொரு விடயத்திலும், காரியத்திலும் புத்த பகவானின் போதனைகளின் பிரதிபலிப்பைக் காணமுடியாதிருக்கின்றது.



வடக்கு-கிழக்கில் தீர்க்கப்படவேண்டிய பிரச்னைகள் நிறையவே உண்டென்பதனையே தமிழீழ விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு புலப்படுத்துவதாக இருக்கின்றது.

இந்நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினரும் அரச தரப்பினரும் காலத்தைப் போக்காது பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்து வடக்கு-கிழக்குப் பிரச்னைக்கான அரசியல் தீர்வுக்கு வழிவகுக்க வேண்டியது மிகவும் இன்றியமையாததாகின்றது.

தமிழீழ விடுதலைப்புலிகளை பேச்சுவார்த்தைகளுக்கு வரும்படி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அழைப்புக்களை விடுத்தவண்ணமிருக்கின்றார்.

இதேவேளை தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் திரு.அன்டன் பாலசிங்கம் அண்மையில் யாழ்ப்பாணத்தில் வைத்து நடத்திய பத்திரிகையாளர் மகாநாடொன்றில் புலிகளும் பேச்சுக்களுக்குத் தயாராகவே இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

ஆனால் ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க இலங்கையின் பெரும்பான்மை, சிறுபான்மை இனங்கள் குறித்து வெளியிட்டு வரும் கருத்துக் கண்ணோட்டங்கள், "வெண்ணெய் திரண்டு வரும்போது தாளி உடைந்து போன' கதையாகவே இருக்கக் காணப்படுகின்றன.

புலிகளின் அரசியல் ஆலோசகரான திரு.அன்டன் பாலசிங்கம், யாழ்ப்பாணத்தில் வைத்துக் கருத்து வெளியிடுகையில் பேச்சுவார்த்தையில் தமது தரப்பினருக்குள்ள ஆர்வத்தை வெளியிட்டிருந்தார்.



புத்த பகவானால் புனர்வாழ்வு பெற்று மேன்மையடைந்த அங்குலிமாலா பற்றி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டிருந்தார்.

ஆனால் அங்குலிமாலாவை மாற்றியமைத்த புத்த பகவானின் போதனைகள், வழிகாட்டல்களை இலங்கையின் பெரும்பான்மை பௌத்த மதத்தவர்கள் எவ்வளவுதூரம் பேணுகின்றனர் என்பது கேள்விக்குரியதாகவே இருக்கின்றது.

புத்த பகவான் இலங்கையரோ அல்லது ஒரு சிங்களவரோ அல்லர். அத்துடன் அவரது போதனைகள் ஒரு மொழி சார்ந்ததாகவோ அல்லது இனம் சார்ந்ததாகவோ, பிரதேசம் சார்ந்ததாகவோ, உயர்வு-தாழ்வு என்ற வேறுபாடுகள் சார்ந்ததாகவோ காணப்படவில்லை.

மானிடர்களிடையே ஜீவகாருன்யம், அன்பு, சாந்தி, சமாதானம் ஆகியனவற்றை வலியுறுத்துவதாகவே புத்த பகவானின் போதனைகள் காணப்படுகின்றன.

வேள்விக்காகக் கொண்டு செல்லப்பட்ட ஆட்டுமந்தைக் கூட்டமொன்றையே காப்பாற்றி ஜீவ காருண்யத்தின் மேன்மையை புத்த பகவான் உலகுக்கு எடுத்தியம்பினார் என்று புத்த சமயக் கதை ஒன்று கூறுகின்றது.

அங்குலிமாலாவுக்கு புனர்வாழ்வழித்த புத்த பகவான் இனம், மதம், என்ற குறுகிய வட்டத்துக்குள்ளிருக்கவில்லை. அவர் மானிட குலத்தின் குறுகிய வேறுபாடுகள் அனைத்துக்கும் 'அப்பாற்பட்டவராக இருக்கக் காணப்பட்டார்.

அங்குலிமாலாவின் சரிதத்தை

இலங்கையின் பெரும்பான்மை, சிறுபான்மையினங்கள் பற்றி ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க தனது மனம் போன போக்கில் பேசிவருகின்றார்.

ஆனால் இலங்கையில் இனரீதியிலான கலப்புக்கள் தொன்றுதொட்டே இடம்பெற்று வரக் காணப்படுகின்றன.

இந்திய இளவரசன் விஜயன் இலங்கைக்கு காலடி எடுத்து வைத்தது முதற்கொண்டு பிரிட்டிஷ் ஆட்சி இலங்கையில் முடிவடையும்வரை இலங்கை பூகோளரீதியாக பல்வேறு இன,மதச் செல்வாக்கிற்குட்பட்டே இருக்கக் காணப்பட்டது.

இலங்கை மீது இந்தியா ஆதிகாலத்தில் மேற்கொண்ட படையெடுப்புக்கள், மற்றும் ஐரோப்பியர்களின் வருகை, அரபு நாட்டு வர்த்தகர்களின் தொடர்புகள் ஆகியன இலங்கையில் வெவ்வேறு இனங்கள், மதங்கள் தோன்றுவதற்கு வழி வகுத்திருந்தன.

இந்நிலையில் பல்லின, பல மத செல்வாக்கிற்குட்பட்டுள்ள இலங்கையில் அனைத்துத் தரப்பினரதும் உரிமைகள், உணர்வுகள், மற்றும் பாதுகாப்பு என்பனவற்றை உறுதி செய்யவேண்டியது ஆட்சியாளர்களின் தலையாய கடமையாக இருக்கின்றது.

இன்று உலகில் வல்லரசுப் போட்டி என்பது முடக்கமடைந்திருக்கக் காணப்படுகின்றது. இருநாடுகள் ஒன்றுடன் ஒன்று போரிடும் சூழ்நிலைகள் மிக, மிக அரிதாகவே இருக்கக் காணப்படுகின்றன.

இந்நிலையில் உலக நாடுகளில் இனங்களுக்கிடையிலான விழிப்புணர்வே இன்று முனைப்படைந்திருக்கக் காணப்படுகின்றது.

இரு நாடுகள் ஒன்றுடன் ஒன்று போரிட்டநிலை மாறி, ஒரு நாட்டினுள் நிலவும் பிரச்னையைத் தீர்க்க பலநாடுகள் ஒன்று சேர்ந்து பணியாற்றி வரும் நிலைமையே தற்போது காணப்படுகின்றது. ஐ.நா.அமைதிப்படையின் பங்களிப்பும் இப்பணியையே எடுத்துக்காட்டுவதாக இருக்கின்றது.

## சமரச முயற்சிகளின் முதற்கட்டமாக இராணுவ, பொருளாதார அழுத்தங்கள் நீங்கப்படவேண்டும்

இந்நிலையில் உலக அரங்கில் இன்று சர்ச்சைக்குரிய பிரதேசங்களில் அமைதி காக்கும் பணியில் ஈடுபட்டுள்ளோர் அப்பிரதேசங்களில் நிலவும் இராணுவ, பொருளாதாரக் கெடுபிடிகளைத் தளர்த்துவதிலேயே தீவிர கவனஞ்செலுத்தி வருகின்றனர். இத்தகைய கெடுபிடிகளை தளர்த்துவதன் மூலமே எந்தவொரு சமரச முயற்சிகளையும் மேற்கொள்ள முடியும் என்று அவர்கள் கருதுகின்றனர்.

எனவே இலங்கையிலும் அரச படையினரும், தமிழீழ விடுதலைப் புலிகளும் வடக்கு-கிழக்குப் பிரச்னைக்கு தீர்வு காண்பதில் உண்மையிலேயே ஆர்வங் கொண்டிருந்தால், இருசாராரும் முதலில் வடக்கு-கிழக்கின் இராணுவ, பொருளாதாரக் கெடுபிடிகளுக்கே முடிவு கட்டவேண்டியது மிகவும் இன்றியமையாததாகின்றது.

இதன்மூலமே அவர்களால் ஆரோக்கியமான அரசியல் தீர்வுக்கும் ஒரு காத்திரமான அரங்கை அமைத்துக்கொள்ள முடியும். ■

அமெரிக்க நிபுணரின் ஆலோசனைகள்

# பேரழகு பெறுவதற்கு வேறெங்கும் போகவேண்டாம்! உங்கள் கையருகில் உண்டு அழகு சாதனங்கள்!!



“இரசாயனக் கலவைகளைக் கொண்டு முக அலங்காரம், உடல் அழகு ஆகியவற்றை மேம்படுத்துவதை விட சாதாரணமான இயற்கைச் சாதனங்களால் வசீகரம் பெற முடியும்.” இவ்வாறு கூறுபவர் ஒரு இந்திய மருத்துவரோ- கீழைத்தேய விற்பந்நரோ அல்ல. அமெரிக்க அழகுக்கலை நிபுணரான பண்டேதான் இவ்வாறு கூறுகிறார். நியூயோர்க் நகரில் பிரபலமான மொடல் அழகி செறில் ரியெக்ஸ் மற்றும் ஹோலிவூட் நடிகை ஃபாறா ஃபாசெற் போன்றோர் பண்டேயின் வாடிக்கையாளர்கள்.

“இரசாயனக் கலவைகள் முகத்தில் தேவையற்ற சிதைவுகளை ஏற்படுத்துகின்றன. முகத்திலுள்ள உரோமக் கண்களினூடாக அவை உள்ளே இழுக்கப்பட்டு வேண்டாத தீமைகளையே ஏற்படுத்துகின்றன. சருமத்தின் உள்ளே இயல்பாகச் சுரக்கும் வியர்வை போன்றவற்றுடன் இரசாயனக் கலவைகள் சேரும்போது பல மாற்றங்கள் உள்ளே ஏற்படுகின்றன.

“இதனால் உள்ளேயிருந்து துவாரக் கண்களினூடாக வெளியேற வேண்டிய கழிவுப் பொருட்களும் வெளியேற முடியாதபடி அடைப்புகளும் ஏற்படுகின்றன.” இவ்வாறு பண்டே கூறுகிறார்:

முகத்தில் மாறாத இளமைத் தோற்றத்தையும் பொலிவையும் தரவல்ல சில எளிய முறைகளைத் தருகிறார்:

- பல வகையான முகக்களிம்புகளைப் பூசுவதை விடுத்து ஒவ்வொரு நாளும் கட்டியான பசுத் தயிரை முகத்திலும் கழுத்திலும் அழுத்தமாகத் தேய்த்துக் கொள்ளுங்கள். 10 நிமிடங்கள் பொறுத்து இளஞ்சூடான நீரால் கழுவி சுத்தமான துணியால் ஈரத்தை ஒற்றி எடுங்கள். இதனால் மயிர்க்கால்களுடன் கூடிய மிக நுணுக்கமான துவாரங்களில் ஒட்டிக் கொண்டிருக்கும் அழுக்குகள் அகன்று விடும். முகமும் குளுகுளு என்றிருக்கும்.
- அரைத் தேக்கரண்டி மக்காச் சோளன் மாவை சுத்தமான தண்ணீரில் கலந்து முகத்தில் பூசி, அது உலர்ந்த சிறிது நேரத்தில் வெந்நீரால் கழுவ அழுக்குகள் நீங்கி புதுப் பொலிவு உண்டாகும். நுண்ணிய துவாரங்களில் உள்ள அடைப்புகள் இதனாலும் நீங்கும்.
- முட்டை மஞ்சள் கருவுடன் பசுத்தயிரையும் ஒரு தேக்கரண்டி சுத்தமான தேனையும் சேர்த்து தடிப்பான களிம்புபோல் நன்றாகக் குழைத்துக் கொள்ளவும். இதனை முகத்தில் ஒரு காப்புப்போல் பூசிக்கொள்ளவும். கழுத்திலும் இதனைத் தடவிக்கொள்ளலாம். பசையைப் போல் இக்கலவை சருமத்தில் ஒட்டிக் கொள்ளும்.

15 நிமிடங்களின் பின்னர் வெந்நீரால் கழுவி உலர்ந்த துணியால் ஒற்றி விடவும். உங்கள் சருமம் பூப்போல் மெதுமையாக இருப்பதைக் காண்பீர்கள். பிரகாசமும் தெளிவும் உடனடிப் பலன்களாகத் தென்படும்.

“இந்த முறைகளில் ஒன்றையேனும் ஒரு வாரம் வரை தவறாது தினசரி கடைப் பிடியுங்கள். உங்கள் முகத்தில் ஏற்படும் மாற்றங்களை நிச்சயம் அவதானிக்கலாம்.” என்கிறார் பண்டே.



## தலைமயிர் கருமை பெற இதோ ஒரு அருமையான முறை!

தலைமுடி செம்பட்டையாக அல்லது நல்ல கருமை இன்றி இருக்கின்றதா? இதோ ஒரு எண்ணை. இதைத் தயார் செய்து பாவியுங்கள். ஒரு மாதத்தில் முடி கருமை பெறும். கன்னங் கரேல் என்று மாறிவிடும். சொடுகு என்பனவும் இல்லாதொழியும்.

**தேவையான பொருட்கள்:**

தேங்காய் எண்ணெய்- 1/2 போத்தல்
நல்லெண்ணெய்- 1/4 போத்தல்
டாபர் அம்லா(இந்திய எண்ணை)-கொஞ்சம்
சின்ன வெங்காயம்-1/4 கிலோ. (250கிராம்)
கருஞ்சீரகம்- 50 கிராம்
குப்பை மேனி இலை -ஒரு பிடியளவு
கையான்தகரை இலை- ஒரு பிடியளவு
பொன்னாங்காணி- ஒரு கட்டு
கருவேப்பிலை- ஒரு கட்டு
பச்சை மஞ்சள்- 1 துண்டு
லாமிச்சைவேர்- சிறிது
பிள்ளைக் கற்றாளை - 1 துண்டு
தேங்காய்- 1 பாதி

தேங்காயைத் துருவிப் பிழிந்து பால் எடுத்துக் கொள்ளவும். சின்ன வெங்காயத்தைச் சிறு துண்டுகளாக நறுக்கிக் கொள்ளவும். குப்பை மேனி, கையான்தகரை, பொன்னாங் காணி, கருவேப்பிலை, பச்சை மஞ்சள் இவற்றை அரைத்து எடுத்துக்கொள்ளவும். அரைத்த சாற்றையும் தேங்காய்ப்பாலையும் சேர்த்து அடுப்பில் வைத்து காய்ச்சவும். இது கொதித்து வரும்போது நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய் இரண்டையும் விடவும். இவை கொதிக்க ஆரம்பிக்க, சின்ன வெங்காயம், கருஞ்சீரகம், லாமிச்சை வேர் என்பவற்றை இடவும். பிள்ளைக்கற்றாளையை வழித்து கூளை விடவும். நன்றாகக் கொதித்து, பால் எண்ணையாக வரும்வரை காய்ச்சவும். நன்றாகக் கொதித்ததும் அடுப்பில் இருந்து இறக்கி ஆறவிடவும். ஆறிய பின்னர் வடிகட்டி போத்தலில் விட்டு சிறிதளவு இந்திய எண்ணையான டாபர் அம்லாவை விட்டு கலக்கவும். (இல்லை என்றாலும் பரவாயில்லை) இப்போது பாவனைக்கு ரெடி. அறுபதாம் பச்சை சேர்க்கலாம். ஆனால் ஒரு கெட்ட மணம் தரும் என்பதால்



வெளியில் போகும் பெண்கள் தவிர்த்துக்கொள்ளலாம். பாதிப்பில்லாத வாசனையை விரும்பியவர்கள் சேர்த்துக் கொள்ளலாம்.

(தகவல் தருபவர் –சிங்கள வைத்தியரிடம் தயாரித்து பயன்பெற்ற:
**செல்வி ஹாமதி சுந்தரலிங்கம்-வத்தளை.)**


## நீங்களும் தைக்கலாம்


### உருப்படிகள் வெட்டுதலும் தைத்தலும் (Patterns Cutting& Tailoring)

குழந்தைக்குக் கையில்லாச் சட்டை

(3 அல்லது 4 வயது பிள்ளைக்கு)

தேவையான துணி: நீளம் 18"x32" அகலம்.





1. சட்டை பார்வைக்கு முன்னும் பின்னும் ஒரே மாதிரியாய் இருப்பதால், முன் பாகம் அல்லது பின் பாகம் மட்டும் கத்தரிப்பது போதும். பிறகு மற்றொரு பாகமும் அதே மாதிரி கத்தரித்துக் கொள்ளலாம்.
2. 16"x18" துணியை நீட்டுவசத்தில் மடித்துப் படத்தில் குறிப்பிட்ட பிரகாரம் குறுக்காக 2 அங்குல அளவும் நெடுக்காக 4 1/2 அங்குல அளவும் மார்கிங் சோக்கால் பிரித்து, அளவை வரைந்து கொள்ள வேண்டும்.
3. கழுத்து: Aயிலிருந்து இறங்கும் ஒரு கட்டத்தில் பாதி அளவு அதாவது, Aயிலிருந்து Eவரைக்கும் 1 1/4 அங்குலம், Fஐ 1/4 அங்குலம் முதல் கட்டத்தைத் தள்ளி, அதாவது 2 1/4 அங்குலத்தில் அமைக்க. Hஆனது Bயிலிருந்து அமையும் ஒரு கட்டத்தின் அளவு; அதாவது, Bயிலிருந்து 2 அங்குல அளவு.
4. புஜ வாட்டம் (Shoulder slope): புஜம் ABயிலிருந்து 1/2 அங்குலம் தாழ்ந்து Hவரையும் அமையும்.
5. பிறகு படத்தில் குறிப்பிட்ட பிரகாரம் கழுத்து EGF, புஜம் FH,கை HJ முதலியவைகளைக் கோடிட்டுச் சேர்த்து, ஒரு கத்தரியால் துணியைக் கோடு ஒழுங்காக வெட்டுக.
6. மேற்கூறியவாறு ஒரு பக்கம் வெட்டியதும் இந்தத் துண்டைக் கொண்டு மறுபக்கமும் வெட்டலாம்.

குறிப்பு: படத்தில் நீட்டுப் புள்ளியிட்ட அடையாளம் மடிப்பைக் குறிக்கிறது.

## எதிலும் பாதி ஆணும், பெண்ணும்! பெணகளின் சிறகை பறியாதிருப்பீர்!!

‘அன்பு’ என்கின்ற விழிப்புணர்வு இயக்கத்திற்கு எழுத்தாளர் சிவசங்கரி தலைவராக இருக்கிறார்.

பெண்கள் குறித்து சமூகத்தில் உள்ள தாழ்வான, அலட்சியமான கருத்துக்களை களைந்தெறிய தொலைக்காட்சி, திரைப் படங்கள், வானொலி மூலமாக பிரசாரம் செய்ய நினைத்தார்கள்.

பெண்ணாலும் முடியும். குடும்பத்தை, சமூகத்தை காக்கும், வளர்க்கும் மனுஷியாக பெண்ணாலும் இயங்க முடியும் என்பதை உரத்துச் சொல்ல முயன்றார்கள்.

ஆணுக்கு பெண் எதிரியல்ல. சனத் தொகையில் சரிபாதி உள்ள பெண் சமையலறையிலும் படுக்கையறையிலும் மட்டும் ஒடுங்கிப் போகும் ஜடமல்ல. பெண்ணை மதிக்கவும், மரியாதை கொடுக்கவும் சமுதாயம் முன்வரவேண்டும்.

ஆணும்-பெண்ணும் இணைந்து பொறுப்புக்கள் சுமக்கும் போது அற்புதங்கள் விளையும். அதனை புரியவைக்க ஒரு பாடல் வேண்டும்.

சிவசங்கரி, கவிஞர் வைரமுத்துவிடம் ஒரு பாடல் எழுதித் தருமாறு கேட்டார். வைரமுத்து எழுதிக்கொடுத்த பாடல் வரிகள் அருகே-



**“எத்தனை யுகங்கள்; எத்தனை யுகங்கள்
எங்கே போயின எங்கள் முகங்கள்
முகமும் அற்று, முகவரி அற்று
முடிந்து போயின ஆயிரம் யுகங்கள்
இல்லம் அலுவல் இரண்டிலும் நொந்து
இரட்டைச் சுமைக்கு ஆளானோம்.**

**எத்தனை யுகங்கள் எத்தனை யுகங்கள்;
ஆணின் தேவை தீர்த்து வைக்கவே
அடிக்கடி நாங்கள் தாயானோம்.**

**எத்தனை யுகங்கள் எத்தனை யுகங்கள்;
எத்தனை காலம் உறங்கிவிட்டோம்.
இப்போதாவது சிறை உடைப்போம்.
பெண்கள் ஜாதி உலகில் பாதி என்பதை
உணர்த்த குரல் கொடுப்போம்.**

**நாணம் சுமந்த பெண்கள் எழுந்து
வானம் சுமக்கும் காலம் இது
ஆடை நகைகள் அணிந்தது போக
ஆயுதம் அணியும் காலமிது.**

**சிவனும் பாதி பார்வதி பாதி
கற்பனை பாடிய கானம் அது.
ஆணும் பெண்ணும் எதிலும் பாதி
அறிவியல் சொல்லிய வேதமிது
பெண்களின் சிறகை பறியா
திருந்தால் வானம் அவர்களின்
-எல்லையன்றோ.**

**துதித்திடும் வழக்கம் வேண்டாம்
இங்கே மதித்திடும் வழக்கம் வேண்டுமன்றோ.**

**ஆணும்-பெண்ணும்
ஆணையிட்டழைத்தால் வானம்
பூமியில் வந்து வணங்காதோ.
எத்தனை யுகங்கள் எத்தனை யுகங்கள்;
இன்றே தோன்றின
எங்கள் முகங்கள்.”**

■


பரிசுத் திட்ட கூப்பன் இல-3

## தினமுரசு-அருள் ஜுவல்லர்ஸ் இணைந்து வழங்கும் தங்க நகைப் பரிசுத் திட்டம்

தங்க நகைப் பரிசுத் திட்டத்தில் பங்குபற்றி வெற்றியீட்டும் அதிஷ்டசாலிகளில் முதல் அதிஷ்டசாலிக்கு தங்க நகை காத்திருக்கிறது.

ஏனைய பத்து அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.

1. மகளிர் மட்டுமே பங்குகொள்ள முடியும்.
2. இல 1 முதல் 20 வரையான பரிசுத்திட்ட கூப்பன்களைச் சேகரித்து வையுங்கள்.
3. சேகரித்து வைத்துள்ள கூப்பன்களைப் பின்னர் நாம் குறிப்பிடும் திகதிக்கு முன்பாக அனுப்பிவைக்கலாம்.


## சமைப்போம் சுவைப்போம்

தொகுத்துத் தருவது - சுகந்தினி

### காரட் தக்காளி சூப்

**தேவையானவை:**

காரட்- 250 கிராம்
தக்காளிப்பழம்- 250 கிராம்
பெரிய வெங்காயம்-1
வெண்ணெய் அல்லது மாஜரின்-50 கிராம்
மிளகுத்தூள்- 1/4 தே.கரண்டி
உப்பு- தேவையான அளவு
சீனி- 1 தே.கரண்டி
கோதுமை மாவு- 2 தே.கரண்டி
தண்ணீர்- 2 கோப்பை

**செய்முறை:**

1. தக்காளிப்பழத்தைக் கொதிக்கும் தண்ணீரில் 5 நிமிடம்வரை போடவும். பின்னர் தோலுரித்துப் பொடியாக நறுக்கிக்கொள்ளவும்.
2. வெங்காயத்தைப் பொடியாக நறுக்கிக் கொள்ளவும். காரட்டை வில்லைகளாக நறுக்கிக்கொள்ளவும்.
3. வாணலியில் வெண்ணெய்யை அல்லது மாஜரீன் போட்டு, நறுக்கிய வெங்காயத்தை இரண்டு நிமிடங்கள்வரை வதக்கவும்.
4. பிறகு காரட் வில்லைகளைப் போட்டு இரண்டு நிமிடங்கள் வதக்கவும். கோதுமை மாவையும் சேர்க்கவும்.
5. நறுக்கிய தக்காளித் துண்டுகள், மிளகுப் பொடி, உப்பு, சீனி, தண்ணீர் முதலிய வற்றைச் சேர்த்துக் கலக்கவும். 10 நிமிடங்கள் வரை கொதிக்க விடவும்.
6. சூப் வடிகட்டியின் மூலம் வெந்த காய்களை வடிகட்டவும்.
7. தேவையானால் மேலே, ஒரு தேக்கரண்டி க்றீம் (Fresh Cream) ஊற்றிப் பரிமாறவும்.
8. சூப்பை சூடாக பரிமாறவும்.

### பச்சை சோஸ்

**தேவையானவை:**

பச்சைத் தக்காளி (தக்காளிக்காய்)-1/2கிலோ
பச்சை மிளகாய்- 6
வெங்காயம்- 1
உப்பு-தேவையான அளவு.

**செய்முறை:**

1. பச்சைத் தக்காளி, பச்சை மிளகாய், வெங்காயம் மூன்றையும் ஒரு கோப்பை தண்ணீர் விட்டு வேகவைக்கவும்.
2. வெந்தபின் சூப் வடிகட்டியில் போட்டு வடிகட்டி சாறு எடுத்துக்கொள்ளவும். (Soup stainer)ஐ உபயோகிக்கவும்.

# 80 இறாத்தல் இறைச்சியை ஒரே பிடி!

## விழுங்கி விழுங்கி சாய்ந்த மலை




ஆஜன்ரைனா நாட்டின் போணஸ் எயார்ஸ் நகரைச் சேர்ந்த பப்லோ டி கேஸஸ் ஒரு சாப்பாட்டு ராமன். எந்த உணவுப் பண்டத்தையும் எந்த நேரத்திலும் புசிக்கத் தயங்கமாட்டார். வயது முப்பத்தாறு. ஆனால் எடை 510 இறாத்தல்.

80 இறாத்தல் எடையுள்ள பன்றிக்குட்டியை வெட்டி அத்தனை இறைச்சியையும் கறி சமைத்து முழுவதையும் தான் மட்டுமே உண்டார். இரண்டு மணித்தியாலத்தில் எலும்புத் துண்டுகளைத் தவிர முழுவதையும் உண்டு முடித்தார். உணவும் முடிந்த வேளை அவருடைய உயிரும் பிரிந்தது.

கால் நடைக்கண்காட்சி ஒன்றுக்கு தனது நண்பர்களுடன் பப்லோ சென்றிருந்தார். ஆடு, மாடு, கோழி, முயல் போன்ற பிராணிகளின் காட்சி மையங்களை ஏனையோர் பார்த்துவர, பப்லோ பன்றிகளுக்கான காட்சிச்சாலையினை வலம் வந்துகொண்டிருந்தார்.

பன்றி இறைச்சியினை உண்பதில் பப்லோவுக்குப் பிரியம் அதிகம். ஆகவே கொழுத்த பன்றிக் குட்டிகளை வாயில் நீர் ஊறப் பார்த்துக் கொண்டிருந்தார். இதனை அவதானித்த பப்லோவின் நண்பரான எடுவாராடே றொஸ்ட்ரோ அருகிலுள்ள உணவு விடுதிக்கு அழைத்துச் சென்று பன்றி இறைச்சி உணவினை வாங்கிக்கொடுத்தார். வயிறு கொள்ளுமட்டும் உண்டார். ஆனாலும் முழுத் திருப்தி கிடைக்கவில்லை.

எடுவாராடோ, பப்லோவின் உள்ளக்கிடக்கையினை விசாரித்தபோது, "எனக்கு வெறுமனே இந்த உணவினைச் சாப்பிடுவதால் மட்டும் திருப்தி ஏற்படப்போவதில்லை. காட்சிப் பண்ணையில் ஒரு அழகான- கொழுத்த பன்றிக்குட்டியைப் பார்த்தேன். அதனை வாங்கி முழுமையாகச் சமைத்து அத்தனை கறியையும் நான் உண்ணவேண்டும். அப்போதான் என் அவா அடங்கும்" என்றார். கூடியிருந்த நண்பர்கள் பப்லோவின் கதையைக் கேட்டு பலமாகச் சிரித்தார்கள். ஆனால் எடுவாராடோவுக்கு உண்மை தெரியும். அதனால் அமைதியாக இருந்துவிட்டார்.


அடுத்த நாளும் பப்லோ அமைதியற்றிருந்தார். இதனைக் கண்டு பல நண்பர்கள் பப்லோவிடம் பந்தயம் கட்டினர். "அதே பன்றிக்குட்டியை விலை கொடுத்து வாங்கி முழுமையாகக் கறி சமைத்துத் தந்தால், முழுவதையும் உண்டால் உனக்கு சிறந்த வெகுமதி தருவோம்" என்றார்கள். பப்லோ சம்மதித்தார்.

அதே பன்றிக்குட்டியினை அவர்கள் விலை கொடுத்து வாங்கிவிட்டார்கள். ஒரு நாளைக் குறிப்பிட்டு அக்குட்டியை வெட்டி கறியும் சமைக்கப்பட்டது. மொத்தம் 80 இறாத்தல் கறி தேறியது. பப்லோ தயாரானார். எடுவராடோ தடுக்க முயன்றார். ஏனைய நண்பர்கள் ஆரம்பத்தில் கொடுத்த உற்சாகத்தில் பப்லோ சாப்பிடத் தொடங்கினார். ஆனால் கால்வாசிக் கறி உண்டு முடித்ததும் எடுவராடோவுடன் சேர்ந்து ஏனைய நண்பர்களும் பப்வோவை, உண்பதை நிறுத்தும்படி, கேட்டனர். ஆனால், பந்தயத்தில் குறிப்பிட்டபடி தான் சாதனை நிலைநாட்டப் போவதாக பப்லோ அடம் பிடித்தார். குறிப்பிட்டபடி இரண்டு மணி நேரத்தில் அத்தனை இறைச்சியையும் உண்டு முடித்தார். எலும்புகள் மட்டுமே எஞ்சியிருந்தன.

பப்லோவால் மூச்சுவிட முடியவில்லை. சில நிமிடங்களில் உடல் முழுவதும் வியர்வை கொட்ட ஆரம்பித்தது. பொத்தென விழுந்தார். மயங்கிவிட்டார். அம்பியுலன்ஸ் வரவழைக்கப்பட்டு மருத்துவமனைக்குக் கொண்டு செல்வதற்கிடையில் பப்லோவின் உயிர் பிரிந்துவிட்டது.

பிரேத பரிசோதனை செய்த டாக்டர் டொமிங்கோ கோமஸ், "இந்த முட்டாளின் வயிற்றின் உட்புறம் வெடித்துவிட்டது. உணவு அரைவாசி உண்ணும்போதே செமிபாட்டுக்கான கருவிகள் இயங்க மறுத்துவிட்டன. எனது 28 ஆண்டு மருத்துவ வரலாற்றில் இத்தகைய 'சாப்பாட்டுராமனை' கண்டதில்லை" என்று கூறினார்.

## ஆடிப் பிழைக்கும் அதிசயப் பிறவி!




ஒரு கை இல்லை. இரு கால்களும் இல்லை. இன்று அவர் ஒரு டிஸ்கோ நடனக் கலைஞர்.

பெயர்- ஜெரோம் கோல்மன்.

நான் ஒரு நடிகன். என்னுடைய நடனத்தைப் பார்க்க பலர் கூடுகிறார்கள். மகிழ்ச்சி அடைகிறார்கள். கை நிறையப் பணம் தந்து மேலும் மேலும் உற்சாக மூட்டுகிறார்கள். இவ்வாறு கூறுகிறார் 34 வயதான ஜெரோம்.

பிறக்கும் போதே குறைபாட்டுடன் பிறந்தபோதும் நம்பிக்கை இழக்கவில்லை.

ஹொலிவூட் திரையுலகை நாடிச் சென்றார்.

நடிகராகும் ஆசை நிறைவேறியது. "ரிட்டேர்ன் ஒப் த லிவ்விங் டெட்" (வாழும் இறந்தவர்களின் வருகை) என்ற படத்தில் நடிக்கும் வாய்ப்புக் கிடைத்தது.

என்றாலும், வாய்ப்புக்கள் தொடர்ந்து வரவில்லை. பொழுதுபோக்க 'வெனிஸ் கடற்கரையில் சுற்றினார். எல்லோரும் வேடிக்கை பார்த்தனர்.

தன்னை எல்லோரும் வேடிக்கை பார்ப்பதை அவதானித்த ஜெரோம் தன்னைப் பார்ப்போரை மகிழ்விக்க வேடிக்கையாக ஆடத் தொடங்கினார். அந்த வேடிக்கை விளையாட்டு இன்று அவருக்கு வருமானத்தைத் தேடித்தரும் நிரந்தரத் தொழிலாகிவிட்டது.

## தகவல் பெட்டி

## கருவிலே பிறந்தது ஒன்றாக உருவிலே வளர்ந்தது வேறாக!



'அண்ணன் தம்பி என்றாலும் வாயும் வயிறும் வேறுதானே' என்பார்கள். ஒட்டிப்பிறந்த அல்லது ஒன்றாகப் பிறந்த இரட்டையரானாலும் வாயும் வயிறும் வேறுதான். ஆனால் பிரிட்டனைச் சேர்ந்த ஹென்றி-மல்கம் என்னும் இரட்டையர்கள் உயரத்திலும் வேறு வேறுதான்.

ஒருவர் பெயர்- ஹென்றி-பல்லான்.

மற்றவர் பெயர்- மல்கம்.

ஹென்றி பல்லான்- அதிக பட்சமாக வளரமுடிந்த உயரம் 3 அடி.

மல்கத்தின் உயரம் 6 அடி. ஒன்றாகப் பிறந்ததுபோதும் உயரத்தில் ஒன்றாக வளர முடியவில்லையே என்று 3 அடி பல்லான் கவலைப்பட்டாலும் ஒரு விசயத்தில் உயரத்தில் இருக்கிறார்.

ஆம், பல்லான் வாங்கும் ஊதியம் 6 அடி ஹென்றியை விட அதிகம். காரணம்- பல்லான் ஒரு திரைப்பட நடிகர். குறைந்த உயரம் அவரை ஒரு நடிகராக்கிவிட்டது. வருமானமும் கொடுக்கிறது. உயரக் குறைவு என்ற கவலையை ஊதியப் பெருக்கம் உடைத்துப் போட்டுவிட்டது.

# சினி விசிட்


மோகனா

'வீட்ல விசேஷங்க...
அறிமுகப்படுத்திய பாக்யராஜ்...
"சினிமாவில் கதாநாயகியாக நடிப்ப...
அதுவும் பாக்யராஜ் ச...
இயக்குநர்களின் படங்களில் நடிப்பது...
நினைத்துப் பார்க்க...
குழந்தைக்கு தாயாக மட்டுமல்ல; ...
நடிக்கச் சொல்லி அவ...
நடித்திருப்பேன்" எ...
இனிவரும் படங்களில் இளமையான ...
என் அழகையும், திறமையையும் ...

## அவருக்கு காதல்...

சத்தர் ஆர்ட் பிலிம் பட நிறுவனத்தி... படம் 'வீட்டுக்குள்ளே திருவிழா'.

முழுக்க, முழுக்க நகைச்சுவை... எடுக்கப்படும் படம்.

நாயகன்-ஆனந்த் பாபு. அவருக்கு... ரோகிணி, வினோதினி, சங்கவி, புதுமு... நான்கு பேரும் விரட்டி விரட்டி... வெற்றி யாருக்கு என்பதே கதை.

"ராசா உன்னை ரசிக்கையில் உன...' என்ற பாடல் உட்பட அனைத்துப் பா... எழுதியுள்ளார். இசை தேவா.

## எதிர்பார்ப்போடு வள...

இந்து பாடல்கள் - ஆறு சண்டைக்காட்சிக... வேகமாக வளர்ந்துவரும் படம் 'ஆனை...'. மீண்டும் ஒரு முறை போலீஸ் அதிகாரி... இனிமையான விசயம்.

'புலன் விசாரணை', 'கப்டன் பிரபாகர...' 'ஆனைராஜு' போன்றும் பேசப்படும் பட... எதிர்பார்க்கிறார்கள்.

விஜயகாந்தின் அம்மாவாக நடிக்கிறார்... மனைவியாக ஆமினி. நிழல்கள் ரவிக்கு... பாத்திரம்.

கௌதமி டாக்டரா... பாடலிலும் புகுந்து விளை... டே...' என்னும் ஆங்கில... பாடல் தொடங்குகிறது.

கதை-திரைக்கதை ... இயக்குநர் கே.என்.ரா... எனக்கென்ன' என்ற பட... உள்ளார்.

## தேடி வந்த வாய்ப்பு!

சினிமாவில் நடிக்கவேண்டும் என்று ஆசையோடு அலைபவர்களுக்கு கிடைக்காத வாய்ப்பு சினிமா ஆசை இல்லாதவர்களுக்கு கிடைத்துவிடுவதுண்டு.

அப்படித்தான் நடந்தது ராஜேஸ்வருக்கு. ராஜேஸ்வர் இலங்கையைச் சேர்ந்தவர். அமெரிக்காவில் நிரந்தரமாக வசிப்பவர். ரேவதியின் கணவர் சுரேஷ் மேனனின் நண்பர். அதனால் 'புதிய முகம்' படத்தில் நடித்தார். இப்போது சுரேஷ் மேனனின் 'பாசமலர்கள்' படம் திரைக்கு வந்துவிட்டது. அதிலும் ராஜேஸ்வர் ஒரு தொழில் அதிபராக நடித்துள்ளார்.

## ரோஜாவின் விருப்பம்

உங்களுக்கு எந்த மாதிரியாக நடிக்கப் பிடிக்கும்? என்று ரோஜாவிடம் கேட்டால் உடனே அவர் சொல்வது.

"வேகமாக வசனம் பேசி, ரொம்ப குறு குறுப்பாக உள்ள மாதிரியான துடிப்பான வேடங்கள் பிடிக்கும்.

கவர்ச்சியாகவும், ஆக்சன் படங்களிலும் நடிக்கவும் பிடிக்கும்."

"கவர்ச்சி என்பதற்கு ஒரு லிமிட்டே கிடையாது. அது இயக்குநர்கள் சொல்வது போல் உருவாகும்." என்றும் சொல்கிறார் ரோஜா.


ராஜேஸ்வர்

## சில காட்சிகள் மட்டும்

பிரபு நடிக்கும் 'டுயட்' படத்தில் கஸ்தூரியும் நடிக்கிறார். நடிகை கஸ்தூரியாகவே சில காட்சிகளில் வந்து தலை காட்டுவார். "பிரபு நடிப்பதாலும், பாலசந்தர் இயக்குவதாலும் ஒப்புக்கொண்டேன்" என்கிறார் கஸ்தூரி.


ரஞ்சிதா

## பாடகராகும் பட்டியலில்

'எல்லாமே என் ராசாதான்' படத்தில் நகைச்சுவை நடிகர் வடிவேலு இரண்டு பாடல்கள் பாடினார். இப்போது மற்றொரு நகைச்சுவை நடிகரும் பாடப் போகிறார். அவர் சின்னி ஜெயந்த். "சின்ன புள்ள" படத்தில் சௌந்தர்யன் இசையில் இரண்டு பாடல்களைப் பாடப்போகிறார் சின்னி ஜெயந்த்.

## வசனம் எழுதும் வை.கோ.

கலைஞர் கருணாநிதி படங்களுக்கு வசனம் எழுதும் போது அவருக்கு போட்டியாக உள்ள வை.கோபால்சாமி வசனம் எழுதிவிட்டால் எப்படி? எழுதப்போகிறார்!

அவர் வசனம் எழுதும் படத்தில் நடிக்க முன்னணி கதாநாயகர்கள் மறுத்துவிட்டார்கள். முன்னாள் முதல்வரையும், இந்நாள் முதல்வரையும் பகைத்துக்கொள்ள அவர்கள் தயாராக இல்லை.

## எங்களையும் சேருங்கள்!

'அமைதிப்படை' வசூலில் அதிரடி சாதனை நிகழ்த்தியிருப்பதால் சத்யராஜ்-மணிவண்ணன் கூட்டணிக்கு மதிப்பு ஏறியிருக்கிறது.

"எம்.ஜி.ஆர்-நீலகண்டன், சிவாஜி-பீம்சிங், இப்போது சத்யராஜ்-மணிவண்ணன் என்பதையும் சேர்த்துக்கொள்ளுங்கள்" என்கிறார் மணிவண்ணன்.

இந்தக் கூட்டணியின் அடுத்த படமான 'தோழர் பாண்டியன்'இல் சத்யராஜுக்கு முரட்டுத்தனமான ஆட்டோ சாரதி வேசம். தீபாவளிக்கு குரு பாரதிராஜாவின் படம் 'கிழக்குச்சீமையிலே' வசூலில் முதலிடம்.

பொங்கல் படங்களில் சிஷ்யன் மணிவண்ணன் படம் வசூலில் முதலிடம்.


ஷாமிலி

## மினி சினி

- ★ மணிரத்தினம் அடுத்து இயக்கவுள்ள மலையாளப் படத்தில் துணை இயக்குநராகப் பணியாற்ற மணிரத்தினத்திடம் சம்மதம் பெற்றுள்ளாராம் ரேவதி.
- ★ சுகாசினி இயக்கும் 'இந்திரா' படத்தில் கதாநாயகியாக அறிமுகமாகிறார் அனுஹாசன். இவர் கமலின் அண்ணன் சந்திரஹாசனின் மகளாவார். சந்திரஹாசன் கமலின் நூறாவது படமான 'ராஜபார்வை'யில் நடித்துள்ளார்.
- ★ விக்னேஷ்-சங்கவி ஜோடியாக நடிக்க புதிய இயக்குநர் டி.ஆர். விஜயன் இயக்கும் படமொன்றின் படப்பிடிப்பு அண்மையில் ஆரம்பமானது. ஜே.கே.என். பிலிம்ஸ் என்னும் படநிறுவனம் தயாரிக்கும் இப்படத்திற்கு 'மண்ணுக்கு மரியாதை' என்று பெயரிட்டுள்ளனர்.
- ★ 'மனசுக்குள் மத்தாப்பு', 'புதுவசந்தம்' போன்ற படங்களுக்கு இசையமைத்தவர் எஸ்.ஏ. ராஜ்குமார். இவர் 'இது தொடர்கதை' என்னும் படத்திற்கு இசையமைப்பதுடன் வில்லனாக அறிமுகமாகிறார்.
- ★ 'கரகாட்டக்காரன்', 'கும்பக்கரை தங்கையா' உட்பட 30 படங்களை இயக்கியுள்ள கங்கை அமரன், 130ற்கும் மேற்பட்ட படங்களுக்கு இசையமைத்துள்ளார். தற்போது இவர் இயக்கி இசையமைக்கும் இரண்டு புதிய படங்கள் உருவாகின்றன. இவர் இயக்கும் படமொன்றிற்கு இசையமைப்பது இதுவே முதல் முறையாகும்.
- ★ தெலுங்கில் சிரஞ்சீவி நடித்து தமிழில் மொழிமாற்றப்பட்டுத் திரைக்கு வெளிவரத் தயாராகவுள்ள படம் 'மெக்கானிக் மாப்ளே'. இப்படத்தில் சிரஞ்சீவிக்கு ஜோடியாக விஜயசாந்தி நடித்துள்ளார்.
- ★ பெரிய திரையில் பல சாதனைகளைப் படைத்து பல விருதுகளைப் பெற்ற பாலுமகேந்திரா முதன் முறையாக தொலைக்காட்சித் தொடர் ஒன்றை இயக்கவுள்ளார்.
- ★ முதன் முறையாக நடிகர் தியாகராஜன் கதை, திரைக்கதை எழுத பிரசாந்த் கதாநாயகனாக நடிக்கும் படம் 'ஆணழகன்'. நகைச்சுவைக்கு முக்கியத்துவம் கொடுத்து எடுக்கப்படவுள்ள இப்படத்தை நாலாட்டு பட இயக்குநர் டி.கே. ராஜேந்திரன் இயக்கவுள்ளார்.
- ★ பாக்கியராஜின் 'முந்தானை முடிச்சு' படத்தில் அறிமுகமாகி தற்போது மலையாளத்தில் முதலிடத்தில் இருப்பவர் ஊர்வசி. இவர் விரைவில் மலையாளப் படமொன்றைத் தயாரிக்க இருக்கிறார்.

அடு...
ரஜனி...
முடிவடை...
பொன்...
சின்னனி...
நிலவிற...
அது ரஜ...
விசித்...
போன்ற...
ரஜனி-...
சிசைகள...
னைக்க...
"காத்து...
"ஆமா...
"அடிப...
ரஜனி...
'மெது...
அரிசி...
பார்த்துவி...
இக்கா...
இரசிகர்...
பலத்த...
பெறும்...
இயக்குந...
கிரு ஷ்ண...





முகப்பிலே புன்னகையோடு மாதுரி டிக்ஷித், சிவரஞ்சனி

## காதோடு சொல்லுகிறோம்

★ மீன் நடிகை தெலுங்கில மட்டுமே அதிகம் கவர்ச்சியாக நடிப்பேன் என்கிறார். அங்குள்ள இரசிகர்கள் வேறு மாதிரியோம். அது என்ன மாதிரி!

★ இராவண நாயகிக்கு குதிரைச்சவாரி என்றால் கொள்ளைப் பிரியமாம். குதிரையில் இருந்து எதிரிகளைப் பந்தாடும் வேடம் இருந்தால் தாருங்கள் என்று தயாரிப்பாளர்களைத் துரத்துகிறாராம்.

★ ரஞ்சித நடிகை உயரராஜ் ஜோடியாக அடுத்த படத்திலும் நடிக்கப் போகிறார். "என்ன மாயம் செய்தாரோ" என்று சகல்ய நடிகை புலம்புகிறாராம்.

★ கஸ்தூர நடிகைக்கு சான்ஸ் தருவதாக கூறி சில ஹீரோக்கள் ஏமாற்றி விட்டார்களாம். அவர்களை நம்பி அழைப்புக்கு சென்சாய்த்ததை நினைத்து வருத்தப்படுகிறாராம்.

★ சூப்பர் நடிகரோடு நடிக்கும் சந்தோசத்தில் மெய்மறந்து இருக்கிறார் மடிப்பு நடிகை. புதிய படம் ஒன்றில் வலத்தப் பழம் ஸ்டைலில் பாட்டு ஒன்றுக்கு ஆடப் போகிறாராம். அதன்பின் இரசிகர்கள் கிறங்கப் போகிறார்கள் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்.


★ அறிமுகமான இருவருடங்களில் தமிழக அரசின் விருதுபெற்ற நடிகைக்கும் அமைச்சர் ஒருவருக்கும் படு நெருக்கமாம். விருது கிடைத்த இரகசியமும் அதுதானாம். கோடம்பாக்கம் வட்டாரத்தில் பேசிக் கொள்கிறார்கள்.

★ தமிழ் நாட்டில் பிறந்து தற்போது இந்தியில் கொடிகட்டிப் பறக்கும் நாயகி ஒருவர் ஆரம்பகாலத்தில் நடித்த நீலமான படங்கள் துபாய் போன்ற நாடுகளில் பிரபலமாம். தற்போது எதிராக இருப்பதால் சம்பந்தப்பட்ட படத்தின் பிலிமை 50 இலட்சம் கொடுத்து வாங்கிக் கொண்டாராம் அந்த நடிகை.

★ 'கௌ' நடிகை இனி சொந்தக் குரலில் பேசி நடிக்கப் போகிறாராம். அவரது குரலே ஒரு மாதிரி. பேசி நடித்தால் உள்ள மார்கெட்டும் அவுட் என்கிறார்கள்.

★ ஆவாரம்பூ நடிகை காத்திருந்து காத்திருந்து வாய்ப்பு வராமல் வெறுத்துப் போனாராம். இப்போது அமெரிக்க மாப்பிள்ளையை கைபிடித்து விட்டார். அங்கே போய் செட்டிலாகத் திட்டமாம்.

★ 'கா' நடிகருக்கும் சகல நடிகருக்கும் ஏற்பட்டுள்ள திடீர் நெருக்கத்தால் 'கா' நடிகர் வீட்டில் சின்ன சின்ன சகமுசா...



சரத்குமார் படம்-நம்ம அண்ணாச்சி

## பெயர் பழையது—படம் புதியது

எஸ்.ஏ. சந்திரசேகர் பத்து வருடங்களுக்கு முன் இயக்கிய படுதோல்விப் படம் "இதயம் பேசுகிறது." இப்போது அதே பெயரில் புதிய படம் ஒன்று தயாராகிறது. சரத்குமார் கதாநாயகனாக நடிக்கிறார். படத்தை தயாரிப்பது சரத்குமாரின் மனேஜர் சுந்தரமூர்த்தி.

## அமோகமான கவர்ச்சி!

"சிவப்பேரி பாண்டி" படப்பிடிப்புக்கள் படு வேகமாய் நடந்துவருகின்றன. சில்க் சுமிதா பங்குகொள்ளும் நடனக்காட்சி ஒன்று அமோகமான கவர்ச்சியோடு படமாக்கப்பட்டுள்ளது. இப்போதெல்லாம் சில்க் மிகத் தாராளமாகவே நடித்து தன் போட்டியாளர்களைக் கதிகலங்க வைக்கிறார்.



சில்க் சுமிதா





## 'வா-மகளே-வா!'

நீண்ட இடைவெளிக்குப் பிறகு விசு மீண்டும் ஒரு படத்தை இயக்கப் போகிறார். 'வா மகளே வா' என்று பெயரிடப்பட்டுள்ளது. நாயகி குஷ்பூ. ரேகாவுக்கு ஒரு வித்தியாசமான பாத்திரம் உண்டாம். ஏ.வி.எம். பட நிறுவனம் தயாரிக்கும் படம் ஒன்றையும் விசு இயக்கப் போவதாக தகவல்.

## முதல் கட்டம் முடிந்தது கட்ட அமர்க்களம்!

...நடித்துவரும் 'வீரா' படத்தின் முதல்கட்ட படப்பிடிப்புக்கள் ...டன.

...ப பகுதியில் உள்ள ராஜமுந்திரியில எழில் கொஞ்சும் கிராமப்புறப் ...தல்கட்டப் படப்பிடிப்புக்கள் நடந்து முடிந்துள்ளன.

...வரில் இருந்தவரை எங்கோ பார்த்தது போல் இருக்க, உற்றுப் பார்த்தால் அட ...ன். அவரோடு விவேக்கும் பெண் வேசத்தில் இருந்தார்.

...மடக்கி கலாட்டா செய்ய ரஜனியும் நண்பர்களும் பெண் வேசத்தில் வருவது ...ம் படமாக்கப்பட்டது.

...கோயிதாத்துவரும் பெண் வேடத்தில் சந்தைக்குப் போகின்றனர். புடவைத்தலைப்பால் ...ந்துக்கொண்டு செல்கின்றனர்.

...டயில் காற்று அடித்துக் கொண்டிருக்கிறார் வடிவேலு.

...க்கிறீங்களா?" என்று நாணிக் கோணிக் கேட்கிறார் ரஜனி.

...வழிகிறார் வடிவேலு.

...ங்க"

...ல, வேகமாக் அடிக்கிறார் வடிவேலு.

...அடிங்க." என்று சொல்லிவிட்டு ரஜனி போக, அசந்துபோய் நிற்கிறார் வடிவேலு.

...தில் மூட்டை தூக்கிக் கொண்டிருந்த தொழிலாளர்கள் இவர்கள் மூவரும் வருவதைப் ...ரிந்து மூட்டையுடன் விழுகிறார்கள்.



## ஞாயிறு விஷேசம்

"ஞாயிற்றுக்கிழமைகளில் எங்கள் குடும்பத்தைச் சேர்ந்த எல்லோரும் வீட்டில் ஒன்றாகச் சேர்ந்திருப்போம்.

ஒரே நேரத்தில் இருபது முப்பது பேர் இருந்து சாப்பிடுகிற அளவுக்கு பெரிய மேசை (டைனிங் டேபிள்) வீட்டில் இருக்கிறது. ஞாயிற்றுக்கிழமைகளில் இந்த மேசையைச் சுற்றி ஒரே கொண்டாட்டமாக இருக்கும்." இப்படிச் சொல்லியிருப்பவர் யார் தெரியுமோ? பிரபுதேவாதான்.

## 'மகாநதி'க்கு அடுத்து?

தற்போது சினிமா விமர்சகர்களால் பெரிதும் பாராட்டப்பட்டு ஓடிக்கொண்டிருக்கும் படம் 'மகாநதி.'

இதனை அடுத்து சங்கிலி முருகன் தயாரிக்க, பாலுமகேந்திரா இயக்கும் புதிய படத்தில் கமல் நடிக்கப் போகிறார்.

12 வருடங்களுக்குப் பின் கமலும் பாலு மகேந்திராவும் இணைகிறார்கள்.

இசை-இளையராஜாவே.

மகாநதி பற்றி கமல் சொல்வது: "ஒரு நல்ல படத்தை எடுத்துவிட்ட உணர்வு ஏற்பட்டுள்ளது."

இந்தப் படத்திற்கு முதலீடு செய்தவரின் முகத்தில் புன்னகையைப் பார்க்க ஆசைப்படுகிறேன் என்றும் சொல்கிறார் கமல்.

## வீரா- படம் பற்றிய மேலதிகச் செய்திகளும் படங்களும் அடுத்த சினிவிசிட்டில்.

பிரசாத்

## டிஸ்கோவுக்கு பிடிக்காத நாள்

தெலுங்கு - இந்திப் படங்களில் தொடர்ச்சியாக நடித்து வருகிறார் டிஸ்கோ சாந்தி.

உங்களுக்கு பிடிக்காத நாள் எதுவென்று கேட்டால்,

"என் பிறந்த நாள்" என்கிறார். "ஏன்?" என்று கேட்டால், "அன்று என் வயது ஒன்று கூடிவிடுமே" என்று சிரிக்கிறார்.

## நாசருக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு!

'கலியுகம்' படத்தின் மூலம் பிரபலமாகி உத்தம புருஷன், பிரம்மா, சத்தியன் போன்ற படங்களை இயக்கியவர் கே. சுபாஷ்.

சத்யராஜ் இரு வேடத்தில் நடிக்க சுபாஷ் இயக்கிய 'பங்காளி' மட்டுமே காலை வாரிவிட்ட படம். ஏனையவை வெற்றிப் படங்கள் என்பதால் சுபாசுக்கு பெயர் இருக்கிறது.

இப்போது கே. சுபாஷ் இயக்கத்தில் உருவாகப் போகும் படம் 'பவித்ரா'.

நாசர்-ராதிகா ஜோடி சேர்ந்து நடிக்கிறார்கள். இசை ஏ.ஆர்.ரகுமான். பாடல்கள் வைரமுத்து.

வில்லன் நடிகராக இருந்த நாசருக்கு மற்றொரு கதாநாயக வாய்ப்பு 'பவித்ரா' மூலமும் கிடைத்துள்ளது.

பாப்பா முரசு சிறுகதை

# மாமாவைக் குழப்பிய ஆயிரம் ரூபாய்

"அம்மா மாமா வந்திட்டார். மாமா வந்திட்டார்," எனத் துள்ளியபடியே தனது தாயார் காமாட்சி முன்பு போய் நின்றான் சிறீதரன்.

அவனுக்கு ஏற்கனவே அம்மா சொல்லியிருந்தாள், "நாளை உன் மாமா பத்தாயிரம் ரூபாய் பணத்தை எடுத்துக்கொண்டு பட்டணத்தில் ஒரு வீடு வாங்க வருகிறார். அவரிடம் அன்பாகவும் பிரியமாகவும் இருந்து நடந்து கொண்டால், உனக்கும் நிறையக் காசு தருவார்," என்று. சிறீதரனின் சந்தோஷத்திற்குக் காரணம் இதுதான்.

மாமா ஓட்டோவை விட்டு இறங்கி ஐம்பது ரூபாய் நோட்டை டிரைவருக்குக் கொடுத்து விட்டு, "மீதியை நீயே வைத்துக்கொள்."



என்றது சிறீதரனுக்கும் அவனது தங்கை சரளாவுக்கும் வியப்பாக இருந்தது.

"மாமாவுக்கு நல்ல மனசு," என்றபடியே, "வாங்க மாமா" என்றவாறே ஓடிப்போய் அவரது கால்களை அணைத்துக்கொண்டான் சிறீதரன். சரளாவும் மாமா கையிலிருந்த பையை வாங்கிக்கொண்டாள்.

குழந்தைகள் தன்மீது காட்டும் அன்பு உண்மையானது என நம்பினார் மாமா.

"மேலே வாங்க, அத்தை உங்களுக்காகப் பெரிய உருண்டையும், முறுக்கும் கொடுத்தனுப்பியிருக்கிறாள். தருகிறேன்," என்ற மாமாவை மாடிக்கு அழைத்துப் போனார்கள்.

"படி தவறி விழப் போகிறீர்கள். பார்த்து வாருங்கள்," என்றாள் காமாட்சி.

நால்வருடைய முகத்திலும் புன்னகை முத்துக்கள் உதிர்ந்தன.

"சரளா! மாமாவுக்குக் கை, கால் அலம்ப தண்ணீர் கொண்டு வந்துகொடு. சிறீதரா ஃபானை கொஞ்சம் வேகமாக்கு." என்று குழந்தைகளுக்கு உத்தரவு போட்டுவிட்டு "வீட்டில் அனைவரும் சௌக்கியமா?" என்று நலம் விசாரித்தாள் காமாட்சி. கூடவே கோப்பியும் கொடுத்தாள்.

ஒரு மணிநேரம் கழித்து மாமா, "சற்றுக் கண்ணயர்கிறேன்," என்றபடி படுத்தார். சிறீதரனின் கண்கள் மாமா அணைத்துக் கொண்டிருந்த கைப்பை மேலேயே இருந்தது. அவர் அதை ஒரு ஆணியில் மாட்டி விட்டுக் கட்டிலில் சாய்ந்தார். ரயிலில் வந்த அலைச்சல் அவரை அயரத் தூங்க வைத்துவிட்டது.

மணி பதினொன்று இருக்கும். மாமா எழுந்தார். குளிக்கப் போனார். திரும்பி வந்து சாப்பிட்டார். பிறகு பணப்பையை எடுத்துப் பணத்தை எண்ணலானார். திக்கென்றது அவருக்கு. தான் கொண்டுவந்த பணத்தில் ஆயிரம் ரூபாய் குறைந்தது. எப்படிக் குறையும்? யாரையும் கேட்க முடியாமல் திணறினார் மாமா.

காமாட்சி, "நன்றாக எண்ணிப் பாருங்கள்... எப்படிப் பணம் குறையும்?" என்று கேட்டாலும் சிறீதரன் மீது சந்தேகம் அவளுக்கு.

"அண்ணா! நன்றாக எண்ணிப் பாருங்கள். ஏதாவது செலவு செய்தீர்களா? யோசித்துப் பாருங்கள்," என்றாள் காமாட்சி.

"நான் பாங்கில் இருந்து எடுத்த பணத்தை அப்படியே கொண்டு வந்தேன். வழியில் ஏதும் செலவு செய்யவில்லை. பணம் எப்படிக் குறையும் என்று தெரியவில்லையே," என்று சிறீதரனையும், சரளாவையும் மாமா ஒரு மாதிரிப் பார்த்தார்.

இருவரும் நடுங்கிப் போனார்கள்.

மாமா இடிந்துபோய் தலையில் கை வைத்துக்கொண்டு உட்கார்ந்து விட்டார். காமாட்சிக்கு அவரை எப்படிச் சமாதானப் படுத்துவதென்றே தெரியவில்லை.

வந்த காரியம் முடியாமல் ஏமாற்றத்துடன் ஊர் திரும்பிக்கொண்டிருந்த மாமாவிடம் ஓடி வந்தான் சிறீதரன்.

"மாமா ஆயிரம் ரூபாய் குறைகிறது என்பதற்காக வந்த காரியத்தை முடிக்காமல் ஊர் திரும்புவது அம்மாவுக்குக் கவலையாக இருக்கிறதாம். அம்மா கோயிலுக்குப் போய்விட்டு மாலைதான் வருவாவாம். இதை உங்களிடம் கொடுக்கச் சொல்லிவிட்டுப் போனார்கள்," என்றபடியே ஒரு பொட்டலத்தை நீட்டினான் சிறீதரன்.

மாமா ஆவலோடு வாங்கி அதைப் பிரித்துப் பார்த்தார். அதில் நூறு பத்து ரூபாய் நோட்டுக்களும், ஒரு கடிதமும் இருந்தது. கடிதத்தைப் படித்தார் மாமா,

"அண்ணா! நீ வீடு வாங்கப் பணம் கொண்டு வந்தாய். அதில் ஆயிரம் ரூபாய் காணாமல் போய்விட்டது எனக்கு மிகவும் வருத்தமாக இருக்கிறது. நீ, என்னையும், என் பிள்ளைகளையும் சந்தேகிப்பதை உன் முகம் காட்டிக்கொடுத்துவிட்டது. என் குழந்தைகள் மாமா என்கின்ற முறையில் உன்னிடம் உரிமையோடு பழகியதை நீ வேறு அர்த்தத்தில் எடுத்துக் கொண்டாய். என் காதுத் தோட்டை அடகு வைத்து ஆயிரம் ரூபாய் பெற்று இத்துடன் வைத்துள்ளேன். நீ நம்ப வேண்டும் என்பதற்காக இத்துடன் அடகு வைத்த பற்றுச் சீட்டையும் வைத்துள்ளேன். அதை சிறீதரனிடம் கொடுத்துவிடவும்.

"நான் நேரில் கொடுத்தால், நீ அதை வாங்கிக்கொள்ள மறுப்பாய் என்று எனக்குத் தெரியும். அதனால் நான் சிறீதரனிடம் அதைக் கொடுத்தனுப்பியுள்ளேன். இப்பணத்தை நீ எனக்குத் திருப்பித் தரவேண்டியதில்லை. ஊருக்குப் புறப்படுவதற்குள் நான் வரத் தாமதமானால், உனக்கு எங்கள் மீது சந்தேகம் இல்லை என்பதற்கு அறிகுறியாக நான் செய்து வைத்திருக்கும் சாப்பாட்டைச் சாப்பிட்டு விட்டுச் செல்லவும். இப்படிக்கு உன் அன்புத் தங்கை காமாட்சி."

மாலை காமாட்சி வீடு திரும்பியபோது வெறும் சாப்பாட்டுப் பாத்திரங்கள் இருந்தன. இரண்டு நாட்களுக்குப் பிறகு மாமாவிடமிருந்து கடிதம் வந்தது.

"நீ கொடுத்த ஆயிரம் ரூபாய் என் கண்களைத் திறந்தது. மறந்ததையும் நினைவு படுத்திற்று. நான் அங்கு வரும்போது ஆயிரம் ரூபாயை என் மனைவி -அதுதான் உன் அண்ணி எடுத்துக்கொண்டது இங்கு வந்தபிறகு தான் தெரிந்தது. இத்துடன் உள்ள ஆயிரம் ரூபாயில் உனது தோட்டை மீட்டுக்கொள்ளவும். சிறீதரனுக்கும், சரளாவுக்கும் இத்துடன் ஒரு பரிசும் உள்ளது. அதை அவர்களிடம் கொடுத்துவிடவும். அவசரப்பட்டு முடிவெடுக்கக் கூடாது என்பதை நன்கு புரிந்து கொண்டேன். இப்படிக்கு உன் அன்புள்ள அண்ணா," என்று கடிதத்தில் இருந்தது.

## அறிவோம் மனதில் பதிவோம்



தென்கிழக்கு ஆசியாவில் பறவைக்கூடு சூப் மிகவும் பிரபலம். 'சுவிப்ட்' என்ற ஒரு வகைக் குருவி தனது எச்சில் மூலம் கூடு கட்டும். இந்தக்கூடு புரதச்சத்து நிறைந்தது. கொழுப்புச் சத்து குறைந்தது என்று கூறப்படுவதால் மேல்நாட்டினர் இந்தக் கூட்டு சூப்பை மிகவும் விரும்பி உண்கின்றனர்.




மனிதனின் மேல் பல்வரிசையில் உள்ள முதலாவது அரைக்கும் பல்தான் பற்களிலேயே மிகப்பெரியது. இதற்கு மூன்று வேர்கள் இருக்கும். இதனை ஆங்கிலத்தில் 'மோலா' என அழைப்பார்கள்.



உலகிலேயே மிகப்பெரிய மர உருளை ஜெர்மனியில் ஹீடல்பேர்க் என்ற இடத்தில் தயாரிக்கப்பட்டது. திராட்சை ரசம் அடைத்து வைக்கத் தயாரிக்கப்பட்ட இதன் கொள்ளளவு ஒரு இலட்சத்து 85 ஆயிரத்து 431 லீட்டர் ஆகும். 1751ம் அண்டு இந்த உருளை தயாரிக்கப்பட்டது.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 12.03.1994.

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 31**
**தினமுரசு வாரமலர்**
**88/14, சோமாதேவி பிளேஸ்**
**கிருலப்பனை,**
**கொழும்பு-05.**

### வர்ணம் தீட்டும் போட்டி இல. 28

பரிசுக்குரியவர்
கே.விதுரன்
டிக்மன்றோட்-கொழும்பு-05.

### பாராட்டுக்குரியவர்கள்

எம்.எம்.எவ்.ரிஸ்கா-கொட்டாரமுல்ல.

யூ.எல். பரீனா
அக்கரைப்பற்று-01.

எஸ். சரண்யா
கல்முனை-02.

வரதராஜா கவிவேந்தன்
புனித சவேரியார் மகாவித்தியாலயம்
திருகோணமலை.

எஸ்.பளீள்தீன்-அநுராதபுரம்.

பேரின்பராஜா தவரஞ்சன்
செட்டிபாளையம் ம.வி.

செல்வன்.வி.திலக்ஷன்
நிக்கபொத.

எம்.எப்.எம். றிஸ்மீன்
மத்திய மகா வித்தியாலயம்
காத்தான்குடி-06.

வீ. கௌரிதாசன்
புனித சூசையப்பார் கல்லூரி
திருகோணமலை.

வி. சசிகலா
அல்-ஹிலால் மத்திய கல்லூரி
நீர்கொழும்பு.

றோஜன் ஆர்
பாத்திமா பாலிகா ம.வி
புத்தளம்.

செல்வி.ஜூலியற் நிஷாந்தினி ஆரியரட்னம்
மன்னார்.

செல்வி. மாணிக்கவாசகர் ஜாமினி
கொலப்பத்தனை.

முஹம்மட் மர்சூக்
மருதானை.

இ.எல். தோமஸ்
ஹட்டன்.


சி. பிரவீன் குமார்
ஹைலன்ட்ஸ் ம.மா.வித்தியாலயம்
ஹட்டன்.

றிஸ்வானா றிஸ்வான்
அல்-ஹிரா மகா வித்தியாயலம்
கொட்டார முல்லை.

## மூளைக்கு வேலை

### உடன் பதில் காணவும்

ரெஜிதா படிப்பில் கெட்டிக்காரி. வீட்டில் படித்துக்கொண்டிருந்தபோது மின்சாரத்தடை ஏற்பட்டு விளக்கு அணைந்தது. அதனால் இரண்டு மெழுகுவர்த்திகளைப் பற்றவைத்துக்கொண்டு படித்தாள். இரண்டு மெழுகுவர்த்திகளும் ஒரே நீளமுள்ளவை. ஆனால் ஒன்று ஒல்லியானது. இன்னொன்று தடிப்பானது. 6 மணிநேரம் எரியக்கூடிய தடிப்பான மெழுகுவர்த்தியைவிட ஒல்லி மெழுகுவர்த்தி ஒரு மணிநேரம் குறைவாகவே எரியும். ரெஜிதா படித்து முடித்து மெழுகுவர்த்திகளை அணைத்தபோது



தடிப்பான மெழுகுவர்த்தி ஒல்லியானதைவிட இரண்டு மடங்கு நீளமாக இருந்தது. அப்படியானால் ரெஜிதா எவ்வளவு நேரம் படித்தாள்?

விடை


## அர்த்தம் ஒன்றுதான்

'ABLE WAS I ERE I SAW ELBA'

என்பது மாவீரன் நெப்போலியன் சொன்ன புகழ்மிகு வாசகம்.
இந்த வாசகத்தைத் தலைகீழாக வாசித்தாலும் அதே அர்த்தம்தான் வருகிறது.

**ஹேனமுல்லை ஹிஸான் றஸீஸ்.**

## தந்திர விளையாட்டு!




ஒரு மேசை மீது வெள்ளைத்தாளை வையுங்கள். அதன்மீது உருளை வடிவக் கண்ணாடி டம்ளரை வையுங்கள். இப்போது பார்வையாளர்களிடம் 'இது ஒரு புதுவகையான கண்ணாடி டம்ளர். இதை நாணயத்தின் மீது கவிழ்த்து வைத்தால் நாணயம் மறைந்துவிடும்' என்று கூறுங்கள். அப்படியே அந்தக் கண்ணாடி டம்ளரை மேசையுடன் ஒட்டினால் போலவே நகர்த்தி நாணயத்தின்மீது வையுங்கள். டம்ளரின் அமைப்பைத் திருப்பவோ, மாற்றவோ கூடாது. இப்போது நாணயம் மறைந்து விடும். பிறகு அதேபோல டம்ளரை எடுத்துப் பழைய இடத்தில் வைத்ததும் நாணயம் தெரியும்.

நீங்கள் செய்யவேண்டிய தந்திரம் இதுதான்:

கண்ணாடி டம்ளரைக் கவிழ்த்து வைக்கும் முன் அதன் வாயை அளந்து அதே அளவில் மேசையில் உள்ள வெள்ளைத் தாளைப் போன்ற தாளை வட்டமாக வெட்டி நன்றாக ஒட்டி விடுங்கள். பார்ப்பவர்களுக்கு அந்தத் தாள் தெரியாது. கண்ணாடி டம்ளர் கவிழ்த்து வைக்கப்பட்டிருப்பது போலதான் தெரியும்.

## ஸ்போர்ட்ஸ்

# எமது பலம் துடுப்பாட்டத்தில்! இன்னும் சீராக ஆட வேண்டும்!!

### அர்ஜுன் ரணதுங்கா மனம் திறந்து....

இலங்கை கிரிக்கெட் அணித்தலைவர் அர்ஜுன் ரணதுங்கா கிரிக்கெட் விமர்சகர்களால் புகழப்படுகிறவர்களில் ஒருவர்.

இடதுகை ஆட்டக்காரர். துடுப்பாட்டத்தில் ஆச்சரியங்களை நிகழ்த்க் கூடியவர்.


இலங்கையின் கிரிக்கெட் அணியை பிரகாசிக்கச் செய்ய புதிய உத்திகளைக் கையாளத் திட்டமிட்டுள்ளார் அர்ஜுன ரணதுங்கா.

அரசியல் வேறுபாட்டால் ஒருமுறை காயப்படுத்தப்பட்ட போதும் மீண்டும் 'கப்டனாகி' சிறந்த கப்டனாக நிலைத்து நிற்கிறார்.

அர்ஜுன ரணதுங்காவிடம் 'ஸ்போர்ட்ஸ் ஸ்டார்' நிருபர் எழுப்பிய கேள்விகளுக்கு அவர் கொடுத்த பதில்கள்:

கே. இலங்கை கிரிக்கெட் பற்றிய தங்கள் மதிப்பீடு என்ன?

ப: நான் 1982ன் பின்னரே ஈடுபடத் தொடங்கினேன். எங்கள் முழுப் பலமும் துடுப்பாட்டத்தில் தான் தங்கியிருக்கிறது என்று கருதுகிறேன். இருப்பினும் சில இளம் சுழல் பந்து வீச்சாளர்கள் முன்னணிக்கு வந்து கொண்டிருக் கிறார்கள். முரளிதரன், கல்ப்பகே, வர்ணவீர ஆகியோரைக் குறிப்பிடலாம். சுழல் பந்து வீச்சாளர் மட்டுமல்ல விக்ரமசிங்க போன்ற வேகப் பந்து வீச்சாளர்களும் உள்ளனர். கடந்த இரு வருடங்களில் அவர் குறிப்பிடத்தக்க அளவு முன்னேறி யிருக்கிறார். மித வேகப் பந்து வீச்சாளர் களாக பல இளைஞர்கள் கடுமையான பயிற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். இவர்களுக்கு போதுமான பயிற்சி அளிக்க முன்வந்துள்ள MRF நிறுவனத்தையும் குறிப்பிட வேண்டும்.



ப: கடந்த ஒரு வருடத்தில் நன்றாகவே நாங்கள் ஆடியிருக்கிறோம். ரெஸ்ட் ஆட்டங்களிலும் சரி, ஒரு நாள் ஆட்டங் களிலும் சரி, ஓரளவு செய்திருக்கிறோம். இருப்பினும் அண்மையில் நாங்கள் ஒரு காலகட்டத்தில் சிரமப்பட வேண்டிய தாயிற்று. இது விரைவில் மறைந்துவிடும் என்பது எனது கணிப்பு.

கே: இலங்கை கிரிக்கெட்டின் பலம் எதில் தங்கியிருக்கிறது என்று கருதுகிறீர்கள்?

கே: உங்கள் குழு சுழல் பந்து வீச்சாளர்கள் எத்தகைய திறமை படைத்தவர்கள்?

ப: எமது விளையாட்டுகளில் பிரதானமாக முரளிதரனைச் சிறப்பாகக் குறிப்பிட முடியும். எந்த மைதானத்துக்கும் ஏற்ற வாறு அவர் பந்தைச் சுழற்றக் கூடியவர். 5 நாள் விளையாட்டுகளில் தொடர்ந்து பல சந்தர்ப்பங்கள் வருவதனால் அவ்விளையாட்டுகளில் சிறப்பாகப் பயன்படுவார். கல்பகேயும் குறிப்பிடத்தக்க அளவு முன்னேறியுள்ளார்.

கே: உங்கள் களத்தடுப்பு முறை எவ்வாறு உள்ளது?

ப: இத்துறையிலும் முன்னேற்றம் கண்டு வருகிறோம். மொத்தத்தில் இத்துறையில் நாங்கள் சிறப்பாக இருக்க முடியாமல் திணறியிருக்கிறோம்.

கே: வேறு குறைபாடுகளுமுண்டா?

ப: எங்கள் நிலை ஒரே சீராக இருப்பதில்லை. ஒரு ஆட்டத்தில் உச்சத் திறமை வெளிப்படும். மற்றோர் ஆட்டத்தின் போது நிலை வித்தியாசப்படும். இதனைச் சீர்படுத்தும் பணியில் இறங்கியுள்ளோம்.

கே: களத்தடுப்பு அம்சத்தைப் பொறுத்தவரை, முன்னாள் விக்கெற் கீப்பர் ரஞ்சித் பெர்ண்டோ, உங்கள் குழுவில் மாற்றத் தினை ஏற்படுத்தினார் என்று கருதப் படுகிறதே?

ப: இதற்கு ரஞ்சித்துடன் துலிப் மென்டி சுக்கும் மதிப்பளித்தாக வேண்டும். ஒவ்வொரு நாளும் நீண்ட பொழுது களத்தடுப்பிலீடுபட்டு பெரும் உதவி யினைப் புரிந்தவர்கள் அவர்களே!

கே: களத்தடுப்பு எவ்வளவு தூரம் பிரதானமானது?

ப: உண்மையில் இதுவே மிக முக்கியமான தாகும் என்று கருதுகிறேன். எம்மைப் பொறுத்தவரை பந்து வீச்சில் சில சங்கடங்கள் இருப்பதனால் களத்தடுப்பின் மூலம் 30 முதல் 40 ஓட்டங்களைக் கட்டுப்படுத்த முடியும். இதனால் எங்களுக்கு சாதகம் ஏற்பட வாய்ப்புள்ளது.

கே: இலங்கையில் பலவீனமான பல விளையாட்டுக் குழுக்கள் உள்ளமை யினால், இலங்கை கிரிக்கெட்டின் சாதகங்கள் மற்றும் பிரச்சினைகள் எவ்வாறு உள்ளன?

ப: எமது நாடு குடிமக்கள் தொகை குறைந்த சிறிய நாடு. விளையாட்டினைப் பயில்வதற்கு அதிக அவகாசம் தேவைப்பட்டது. காலம் பிந்தியே களத்தில் இறங்கிய போதும் இரண்டாவது நிலையிலுள்ள இளைஞர்களைக் கொண்ட இரண்டாவது அணியினைத் தயார் செய்து வருகிறோம். ஒருவர் பிரிந்தால் அவருடைய இடத்தை நிரப்புவதற்கேற்ற மற்றொருவரைத் தேடுவதில் சிரமப் படுகிறோம்.

கே: நீங்கள் களத்தில் இணையும் போது எவ்வாறான நிலை இருந்தது?

ப: வித்தியாசமாக இருந்தது. றோய் டயஸ் மற்றும் ரஞ்சன் மடுகல்ல போன்றவர் களுடைய இடத்தைப் பிடிக்க அரவிந் தாவும் குருசிங்கவும் பெரும் பிரயத்தனம் செய்ததை நான் அறிவேன். இன்று முற்றிலும் வித்தியாசமான நிலையினையே காண்கிறேன். இன்று போட்டி அதிகமில்லை.

## தேன் கிண்ணம்



### சின்னச் சின்ன

முன்னேற முன்னேற
முயன்று
தோற்றுப்போன
புறா
மண்ணில்
மூர்ச்சித்து
விழுந்தது
'சமாதானம்'

□

வாய்பிளந்த
கல்லறைக்குள்
மல்லாக்க
விழுந்து
எப்போதோ
காணாமல்
போனது
'சுதந்திரம்'

□

நிமிட நேரம்
வந்த
வனிதை
அவனிடம்
நினைவுச்சின்னமாய்
தந்துவிட்டுப் போனாள்
'எயிட்ஸ்'

□

பிரபஞ்ச
மூலைகளில்
இதற்காக
தேடலின்
தீவிரம்
நடாத்தப்படுகிறது
'மனிதம்'

□

-கிண்ணியா சபறுள்ளா-



### மறந்துவிட்ட காதலிக்கு

இனியவளே...
நீ முகம்
திருப்பிக் கொண்டதும்
மலை நிழல்
படியத் தொடங்கிய
அந்த-வசந்தகால
நினைவுகள்
இடிமின் புயல்களாய்
தடம் பதிக்க
தொடங்கிவிட்டன.
மாதா கோயில்
மணிக்கூண்டை
சுற்றும் புழுக்களைப்
போல்
உன் மனதை
சுற்றிவந்த-என்
எண்ணங்கள்
இன்று
வீதியோர நெரிசலில்...
விழுந்து கிடக்கின்றது.
இனியவளே...
நடந்தவை "மறுபடியும்"
நிகழ முடியாதா...?
இன்னும் நேர்த்தியாக..
இன்னும் இனிமையாக.

திதக்ஷலா-திருமலை.

### நினைவுகள் சுமந்த நெஞ்சம்!

அன்புள்ள அத்தானுக்கு ஆசையாய் எழுதும் மடல்!
இன்பமாய் வாழ்வாரம்பம் என்று மகிழ்ந்தேனே!
துன்பமுடன் பிரிந்தீர் தூரதேசம் சென்றீரே!
இன்னுமின்னும் தாங்காது எழுதும் மடல் இது!

இனிய நினைவுகள் சுமந்த நெஞ்சமே!
இனியும் பிரிவுத் துயரம் தாங்காது!
இனிய கனவுகள் காணும் கண்களே
இனியுந் தன் இமை இரண்டும் மூடாது!

தனியே இருந்து காண்பது சுகமெனில்!
தணியக் கூறுங்கள் எந்தன் ஆசையை!
தணியத் தணியத் தணலாய் எரியுது!
தனியே இருந்திடில் தாரமும் ஏனோ?

தூரம் பிரிந்ததால் துயரம் வாட்டுது!
ஊரார் பேசுறார் உள்ளம் கலங்குது!
வீரம் பேசுவீர் 'விசா'வும் எங்கே?
விரைவாய் அனுப்புங்கள் வேளைக்கே வந்து சேர!

மூடிக் கிடக்குது கொழும்பில் தூதரகம்!
கூடிக் களித்திட வழியைக் காணோம்!
பாடிச் சிரித்திட பார்த்து மகிழ்ந்திட
கூடிய சீக்கிரம் கூப்பிடுவீர் என்னை!

-முகில்வண்ணன்-

### மௌனம்...!

உதடுகளை
பூட்டிவிட்டு
மனசு நடத்தும்
இந்த மகா நாட்டிற்கு
வார்த்தைகளெல்லாம்
பலியாகிக் கிடக்கும்.

•

மௌன மரத்தின்
கிளைகளில்கூட-
அசுர வலிமையுண்டு...!

•

மௌனம்
ஆழமானது.
அதற்குள்-
அக்கினியும்
எரியும்...
அகில் புகையும்
பரவும்...!

•

விழிகள்-
உரசிக்கொள்ளும் போது-
மௌனம்கூட,
மௌனமாகும்.
விழிகள் அங்கே
உதடாய் துடிக்கும்.


•

காதலின் மௌனம்
அற்புதமானது.
அதை மொழிபெயர்க்க
இதயம் மட்டும்
இயங்க வேண்டும்.
உணர்வுகள் மட்டும்
பேச வேண்டும்.

•

முழங்காலில்
முகம் புதைத்து
அல்லது
மல்லாந்து படுத்து
வானத்தை-
வெறித்துப்பார்
மௌனம்-
அங்கே மகத்துவமாகும்.

ஒட்டமாவடி-அறபாத்.



### பிரிவின் மத்தியில் ஒரு இதயம்

விழியிரண்டும்
மூடவில்லை-என்
வேதனைகள்
தீரவில்லை
இள நெஞ்சம்
படும் பாடு
தளரவில்லை.

நட்புக்கள்
பல இருந்து
நாளெல்லாம்
பொன்னாக
இனித்தது
இளமைக் காலம்.

இப்போது-அதன்
வேதனை
அங்கலாய்க்கிறது.

கண்டு களித்த
முகங்களெல்லாம்
கண் முன்னே
நிழலாடுகிறது.

தற்போதுள்ள
உறவுகளோ
தபாற்காரன்
மூலம் தான்.

தத்தளிக்கும்
மடல் காண
தவித்து நிற்கும்
இந்த மனம்.

சோகச் சுமைகளை
நெஞ்சிலே
தினம் தினம்
சுமந்த வண்ணம்
கனவில் பாதி...
நினைவில் பாதி....
கடந்த கால நினைவு
சிறகடிக்கும்.

கடந்தவற்றை
மறப்பதற்கு-மனமோ
நாளும் தயங்கி நிற்கும்.

இனியொரு பிறவியிலே
இவ்விதயம்
பிரிவுக்கு
ஒருபோதும்
பிரியப் படக்
கூடாது.

பத்தன் சகாதேவன்
பொத்துவில்-03.

## இந்த வாரம் உங்கள் பலன்

### (06.03.94 முதல் 12.03.94 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| கும்பம் | - சூரியன், சனி, செவ்வாய், புதன் |
| மீனம் | - வெள்ளி |
| இடபம் | - கேது |
| துலாம் | - வியாழன் |
| விருட்சிகம் | - இராகு |

சந்திரன் தனு, மகரம், கும்பம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சாரம் செய்வார்

### மீனம்:

(புரட்டாதி, நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | செய்தொழில் நட்டம், மனப்போராட்டம். | பி.ப 2 மணி |
| திங்கள்- | தனலாபம், காரியானுகூலம். | காலை 9 மணி |
| செவ்வாய்- | செய்தொழில் பிரச்சனை, மனக்கவலை. | பகல் 12 மணி |
| புதன்- | பெரியோர் உதவி, முயற்சி பலிதம். | காலை 8 மணி |
| வியாழன்- | மறைமுக எதிர்ப்பு, உயர்ச்சித்தடை. | பி.ப 2 மணி |
| வெள்ளி- | வீண் மனஸ்தாபம், பணக்கஷ்டம். | காலை 7 மணி |
| சனி- | அந்நியர் உதவி, செலவு மிகுதி. | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 1

### மேடம்:

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | மன மகிழ்ச்சி, பிரயாணம். | பி.ப 3 மணி |
| திங்கள்- | செய்தொழில் விருத்தி, முன்னேற்றம். | பி.ப 1 மணி |
| செவ்வாய்- | பணரவு, காரிய சித்தி. | பகல் 11 மணி |
| புதன்- | கடன் தொல்லை நீங்கும், கௌரவம். | பகல் 12 மணி |
| வியாழன்- | அந்நியர் உதவி, தொழில் முன்னேற்றம். | காலை 7 மணி |
| வெள்ளி- | உறவினர் பகை, வீண் மனஸ்தாபம். | காலை 8 மணி |
| சனி- | புதிய ஸ்தானம், மன மாற்றம். | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 4

### இடபம்:

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | வீண்தொல்லை நீங்கும், மன மகிழ்ச்சி. | பி.ப 2 மணி |
| திங்கள்- | காரியானுகூலம், கௌரவம். | பி.ப 4 மணி |
| செவ்வாய்- | தொழில் பேறு, முன்னேற்றம். | பகல் 12 மணி |
| புதன்- | பதவிகளில் மாற்றம், பணவரவு. | காலை 7 மணி |
| வியாழன்- | உயர்ந்த நிலை, முயற்சிகளில் சித்தி. | காலை 9 மணி |
| வெள்ளி- | பணத்தட்டுப்பாடு, எதிர்பாரா உதவி. | பி.ப 3 மணி |
| சனி- | முயற்சி பலிதம், செலவு மிகுதி. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 3

### மிதுனம்:

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | துயர் நீங்கும், உயர்ச்சி. | காலை 7 மணி |
| திங்கள்- | மறைமுக எதிர்ப்பு, செய்தொழில் முன்னேற்றம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | பணவரவு, கௌரவம். | பி.ப 1 மணி |
| புதன்- | வீண் முயற்சி, செலவு அதிகம். | காலை 9 மணி |
| வியாழன்- | மன மகிழ்ச்சி, கௌரவம். | காலை 8 மணி |
| வெள்ளி- | பணத் தட்டுப்பாடு, உயர்ந்த நிலை. | காலை 7 மணி |
| சனி- | இடமாற்றம், தொழில் கஷ்டம். | பி.ப 2 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்- 5

### கும்பம்:

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், புரட்டாதி)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | மனக்குழப்பம் தீரும், சுபகாரிய நன்மை. | பகல் 12 மணி |
| திங்கள்- | வெளியிடப் பயணம், காரிய நன்மை. | பி.ப 1 மணி |
| செவ்வாய்- | செய்தொழில் விருத்தி, பணவரவு. | காலை 7 மணி |
| புதன்- | உயர்ந்த நிலை, பிள்ளைகளால் கவலை. | காலை 9 மணி |
| வியாழன்- | அந்நியர் உதவி, முன்னேற்றம். | பி.ப 2 மணி |
| வெள்ளி- | தன இலாபம், கடன்பயம் நீங்கும். | பி.ப 3 மணி |
| சனி- | முயற்சி மேன்மை, மகிழ்ச்சி. | பி.ப 1 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 9

### கர்க்கடகம்:

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் நிலை விருத்தி, கௌரவம். | காலை 6 மணி |
| திங்கள- | பணவரவு, காரியானுகூலம். | பி.ப 1 மணி |
| செவ்வாய்- | பெரியோர் உதவி அரச சன்மானம். | காலை 9 மணி |
| புதன்- | தன இலாபம், பிரயாணம். | காலை 7 மணி |
| வியாழன்- | வீண் மனஸ்தாபம், உயர்ச்சி தடை | பி.ப 2 மணி |
| வெள்ளி- | செய்தொழில் நட்டம், மனக்கவலை. | காலை 9 மணி |
| சனி- | செலவு மிகுதி, அந்நியர் சகவாசம். | காலை 8 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 2

### மகரம்:

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டது முன்னரை)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | பணவரவு, காரியசித்தி. | காலை 7 மணி |
| திங்கள்- | மனமகிழ்ச்சி, தொழில் மேன்மை. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | செய்தொழில் நட்டம், செலவு மிகுதி. | காலை 10 மணி |
| புதன்- | தன்னம்பிக்கை, நிலையற்ற தன்மை. | பி.ப 1 மணி |
| வியாழன்- | வாக்கு வசீகரம், அரச சன்மானம். | பகல் 11 மணி |
| வெள்ளி- | பெரியோர் நட்பு, தொழில் முன்னேற்றம். | காலை 7 மணி |
| சனி- | பணக்கஷ்டம், செலவு மிகுதி. | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம் -2

### சிம்மம்:

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | பயனற்ற செயல், உயர்ந்த நிலை. | காலை 7 மணி |
| திங்கள்- | இடமாற்றம், மனக்கவலை. | பகல் 11 மணி |
| செவ்வாய்- | தெய்வ நம்பிக்கை, கௌரவம். | பி.ப 2 மணி |
| புதன்- | பெரியோர் நட்பு, பணவரவு. | பி.ப 3 மணி |
| வியாழன்- | வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | காலை 9 மணி |
| வெள்ளி- | அந்நியர் தொல்லை, வீண் பழிகேட்டல். | காலை 10 மணி |
| சனி- | துயர் நீங்கும், குடும்ப மகிழ்ச்சி | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 7

### தனு:

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | உயர்ச்சிநிலை, முன்னேற்றம். | பி.ப 3 மணி |
| திங்கள்- | கௌரவம், செய்தொழில் மேன்மை. | காலை 7 மணி |
| செவ்வாய்- | வீண் மனஸ்தாபம், தொழில் மந்தம். | பி.ப 2 மணி |
| புதன்- | உறவினர் பகை, மனப் போராட்டம். | காலை 8 மணி |
| வியாழன்- | உயர்ந்த நிலை, பணவரவு. | பி.ப 3 மணி |
| வெள்ளி- | தன இலாபம், கௌரவம். | காலை 9 மணி |
| சனி- | மனமகிழ்ச்சி, வெளியிட வாசம். | பி.ப 1 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம் -4

### விருட்சிகம்:

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | வீண்தொல்லை, கவலை அதிகம். | பி.ப 2 மணி |
| திங்கள்- | செய்தொழில் விருத்தி, மனநிறைவு. | பி.ப 1 மணி |
| செவ்வாய்- | கௌரவம், பிரயாண மிகுதி. | காலை 7 மணி |
| புதன்- | காரிய சித்தி, முன்னேற்றம். | பி.ப 1 மணி |
| வியாழன்- | பெரியோர் நட்பு, நற்சிறப்பு. | காலை 7 மணி |
| வெள்ளி- | பயனற்ற செயல், மனக் கவலை. | காலை 9 மணி |
| சனி- | பணவரவு, காரியானுகூலம். | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-9

### துலாம்:

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | மனப் பயம், வீண் பிரயாசம். | காலை 8 மணி |
| திங்கள்- | பயனுள்ள செயல், முயற்சி மேன்மை. | காலை 9 மணி |
| செவ்வாய்- | குடும்பப் பற்று, பிள்ளைகளால் தொல்லை. | பகல் 12 மணி |
| புதன்- | செய்தொழில் மேன்மை, புகழ். | காலை 7 மணி |
| வியாழன்- | கடன் பயம், மனக்கவலை. | காலை 6 மணி |
| வெள்ளி- | அந்நியர் நட்பு, பிரயாண மிகுதி. | பி.ப 2 மணி |
| சனி- | உயர்ந்த நிலை, கௌரவம். | பி.ப 3 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 8

### கன்னி:


(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | பிரயாச மிகுதி, உயர்ச்சி நிலை. | பகல் 12 மணி |
| திங்கள்- | பண இலாபம், செய்தொழில் விருத்தி. | காலை 9 மணி |
| செவ்வாய்- | துயர் அதிகம், பணத்தட்டுப்பாடு. | பி.ப 2 மணி |
| புதன்- | தெய்வ நம்பிக்கை, கடன்படல். | காலை 10 மணி |
| வியாழன்- | அதிகார விருத்தி, முன்னேற்றம். | பி.ப 1 மணி |
| வெள்ளி- | வீண் வாக்குவாதம், குடும்பப் பகை. | பி.ப 3 மணி |
| சனி- | செய்கரும வெற்றி, மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்- 5

# மருத்துவ ✚ விந்தைகள்

## படுக்கையில் நகரும் நாட்கள்



## பருத்த உடல் தரும் பெருத்த தொல்லைகள்

**பா**ற் மக்கௌலிஃப் படுத்த படுக்கையிலேயே தன் பொழுதைக் கழிக்கிறார். எழுந்து நடமாட முடியாது. அது மட்டுமல்லாமல் படுக்கையிலிருந்து அப்புறம் இப்புறமென அசையவும் முடியாது. படுக்கையில் முதுகுப்புறம் படும்படி படுக்கவும் முடியாது. ஒரே பக்கமாகச் சரிந்தே 24 மணி நேரமும் கிடக்கவேண்டியுள்ளது.

38 வயதான பாற்றின் எடை 448 இறாத்தல். தர்ம ஸ்தாபனங்களின் பராமரிப்பில், இங்கிலாந்திலுள்ள ஷெஃபீல்டில் தனிமையில் வாழ்கிறார்.

வேளாவேளைக்கு உணவு வந்து சேரும். சாப்பிட்டுவிட்டு தொலைக்காட்சி பார்ப்பதும் வானொலி கேட்பதும்தான் அவர் பொழுதுபோக்கு.

**திடீரென்று ஒரு நாள் வயிற்றுவலி. மருத்துவ மனைக்கு வந்தேயாக வேண்டும் என்றார் மருத்துவர். அறைக்கு வெளியேவர வேண்டுமானால் ஜன்னல்களை உடைக்க வேண்டும் என்ற நிலை.......**

குறிப்பிட்ட சினேகிதிகளோ உறவினர்களோ கிடையாது. உதவிக் கரம் நீட்டும் தர்ம நிறுவனங்கள்,யாரையாவது இவருடன் பேச்சுத் துணைக்கு அனுப்பி வைப்பார்கள். தவிர, காலையிலும் மாலையிலும் ஒரு தாதி வந்து பாற்றைக் கவனித்து வருகிறார். தாதியின் உதவியுடன்தான் இவர் அன்றாடக் கடன்களை படுக்கையிலிருந்த வண்ணம் முடித்தாக வேண்டும்.

இடைவேளைகளில் ஏதாவதானால் தன்னைச் சுற்றியுள்ள போர்வைகளனைத்தும் ஈரமாகிவிடும். தாதி வந்து சுத்தம் செய்யும்வரை நரக வேதனைதான்.

பாற் எந்த ஆடையையும் அணிய முடியாது. போர்வைகளை உடல் முழுவதும் சுற்றிக்கொண்டு படுத்தேயிருப்பார்.

கடந்த வருடம் ஒரு நாள் நள்ளிரவு வேளையில் தாங்க முடியாத வயிற்று நோவால் அவதியுற்றார். பலமணி நேரம் அவர் கத்தியும் அயலிலுள்ள எவருக்கும் அவர் குரல் கேட்கவில்லை. பாதுகாப்புக்காகவும் குளிர்புகாமலும் இருக்க யன்னல்கள்கூட மிகவும் இறுக்கமாக அடைக்கப்பட்டிருந்தன. அடுத்த நாள் காலையில் வந்த தாதி நிலமையினை உணர்ந்து மருத்துவரை அழைத்தார்.

வந்து பார்த்த மருத்துவர் எப்படியும் பாற்றை மருத்துவமனை கொண்டு செல்லவேண்டும் என்றார். ஆனால் அறைக்குள்ளிருந்து பாற்றை வெளியே கொண்டுவர முடியவில்லை.

தீ அணைப்புப் படையினர் யன்னல் கதவினை உடைத்தே அவரை வெளியே கொண்டுவர வேண்டியதாயிற்று. இவரை அம்பியுலன்ஸ் வண்டியிலேற்றுவதற்கு 6 பேர் தேவைப்பட்டதாம்.

"நான் யன்னலுக்கூடாக வெளியே எடுக்கப்படுவதை நூற்றுக் கணக்கானோர் வேடிக்கை பார்த்தனர். உடல் உபாதையுடன் இது எனக்கு மிக்க மனவேதனையைத் தந்தது. அத்துடன் தொலைக்காட்சியினர் இக்காட்சியைப் படம் பிடித்து ஒளிபரப்பியும் விட்டனர்" என்கிறார் பாற்.

பாற்றின் கதை தொலைக்காட்சியில் இடம் பெற்றமையினால் நன்மையும் ஏற்பட்டுள்ளது. இவருடைய உடலின் எடையினை குறைத்து, சாதாரண அளவுக்கு அவரைக் கொண்டுவர சில தனிப்பட்டவர்களும் சில நிறுவனங்களும் முன்வந்துள்ளன. இது வெற்றி பெறுமானால் தான் விரைவில் சாதாரண பெண்மணி போலாகி விடுவார் என்று மகிழ்வுடன் காணப்படுகிறார்.


அண்மையில் பாற்றின் உதவிக்கு நிதி சேகரிக்கும் பொருட்டு விருந்து வைபவமும் இடம்பெற்றது. பல புதிய நண்பர்கள் கிடைத்துள்ளனர். வெகுமதிகளும் குவிந்துள்ளன.

பாற்றின் துன்பகரமான சூழ் நிலையினைப் பயன்படுத்தி 8 தடவைகள் திருடர்கள் தங்கள் கைவரிசையினைக் காட்டியுள்ளனர். இவரிடமிருந்த "ஸ்டீரியோ றெக்கோடர்', தொலைக்காட்சிப் பெட்டி போன்றவற்றை, தன் கண் எதிரேயே திருடர்கள் களவாடிச்செல்லும்போது, எதையுமே பொருட்படுத்தாமல் தான் வாய்மூடி மௌனியாக இருந்ததை நினைத்து அடிக்கடி கவலைப்படுகிறார்.

தனக்கு அளிக்கப்படவிருக்கும் சிகிச்சை மற்றும் தேகப்பயிற்சி மூலம் விரைவில் சாதாரண பெண்மணியைப் போலாகிவிடுவார் என்று மகிழ்ச்சியுடன் காணப்படுகிறார். "40 வயதில்தான் வாழ்க்கை தொடங்குகிறது என்பார்கள். எனக்கு 40 வயதில்தான் சிறப்பான வாழ்க்கை ஏற்படப் போகிறது" என்று குதூகலத்துடன் கூறுகிறார் பாற். ✚

## போதை மருந்தில் இல்லை பேதம்

## மனிதனும்–குரங்கும் ஒரே மாதிரி!



**போ**தை மருந்துகள் மனிதர்களை எவ்வாறு பாதிக்கின்றன என்பதனை பல விஞ்ஞானிகள் பல தடவைகள் ஆராய்ந்து அறிந்துவிட்டனர். இதில் புதிதாக வேறு எதுவும் காணவேண்டிய அவசியமில்லை. இவை மனிதனைப் பாதிக்கும் முறையினைக் கண்டுபிடித்தது மட்டுமல்லாமல் அதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு எத்தகைய மருத்துவ உதவி அளிக்கப்படவேண்டும் என்பதும் எப்போதோ தீர்மானிக்கப்பட்டாயிற்று.

ஆனால் குரங்குகளை வைத்து இதே ஆராய்ச்சியினைத் தொடர்வதற்கு மேலும் 5 வருடத் திட்டம் ஒன்றினை அமெரிக்க சமஷ்டி அரசாங்கம் வகுத்து, அதற்கென 20 இலட்சம் டொலர் செலவிடவும் ஒதுக்கியிருக்கிறது.

இத்தகையதோர் ஆராய்ச்சித்திட்டம் இன்றுள்ள நிலையில் அவசியமற்றது. அத்துடன் இவ்வாராய்ச்சிகளுக்கு குரங்குகளை சித்திரவதை செய்வது கொடுமையானது என்றெல்லாம் பல எதிர்ப்புக்குரல்கள் எழுந்துள்ளன.

'கொக்கேன்' என்ற பொருளின் புகையினை சிகறட் புகைத்தல் போல்– உள்ளே இழுப்பதனால் மனிதனின் இருதயத்துடன் தொடர்புடைய நாளங்கள் வெகுவாகப் பாதிப்படைகின்றன. இதே புகையினை உட்கொள்வதற்கு இப்பொழுது பல குரங்குகளைப் பயிற்றுவித்து வருகின்றனர். இவை இப்புகையை உட்கொள்ளப் பழகினால் இப்பழக்கத்தை விட்டொழிக்க முடியாமல் பரிதவிக்கின்றன. இருப்பினும் தொடர்ந்து மீண்டும் மீண்டும் அவற்றுக்கு இதே 'சித்திரவதை' தொடர்கிறது. இதனை பிராணிகளின் நலன் விரும்பும் பல சங்கங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றன.

அரசாங்கத்தின் ஊதாரித்தனமான செலவினங்களையிட்டு ஆராய்ந்துவரும் வரியிறுப்போர் சங்க ஆராய்ச்சியாளரான சீன் சட்டன் என்பவர் "இந்தப் புகையினை மனிதர் உட்கொண்டாலும் குரங்கு உட்கொண்டாலும் சித்தம் தடுமாறி இறுதியில் குறுகிய கால எல்லைக்குள் உயிர் விடவேண்டித்தானிருக்கும் என்பதில் சந்தேகமேயில்லை. தொடர்ந்தும் இத்துறையில் பணத்தை வீணடிப்பதில் அர்த்தமே இல்லை" என்கிறார்.

"கொக்கேன் மனிதனின் நுரையீரல், இருதயம், மூளை ஆகியவற்றை மட்டுமல்லாமல் முழு உடம்பையுமே பாதிக்கிறது. இது ஏற்கனவே பல ஆராய்ச்சிகளில் நிரூபிக்கப்பட்ட முடிவு. மென்மேலும் இந்த ஆய்வினைத் தொடர்வதால் புதிதாக எதையும் கண்டுபிடிக்கப் போவதில்லை என்கிறார் டாக்டர் கப்ரியேல் நகாஸ். இவர் நியூ யோர்க் பல்கலைக்கழக மருத்துவ மையத்தின் பேராசிரியர்.

நியூயோர்க் பல்கலைக்கழக மருத்துவமைய நிறுவனத்துடன் இணைந்த சுற்றுச் சூழல் துறையே குரங்குகளை வைத்து இந்த ஆராய்ச்சியினைத் தொடர்ந்து நடத்துகிறது. இதன் தலைவர் றொனால்ட் வூட் இப்பொழுது பல திக்குகளிலுமிருந்து கிளம்பும் கண்டனக் குரல்களை எதிர்நோக்க முடியாமல் தடுமாறுகிறார்.

இந்தத் தேவையற்ற ஆராய்ச்சியில் செலவிடும் பணத்தை, போதை வஸ்துக்களால் பாதிப்புக்குள்ளான பலரைச் சீர்த்திருத்தி அவர்களுடைய மறுவாழ்வுக்கு உதவி புரியலாம் என்று பலர் கூறுகின்றனர்.

சுலிவான் கவுண்டி என்ற இடத்தில் போதைப் பொருள் பாவிப்போருக்கு சிகிச்சை அளிக்கும் நிலையம் ஒன்றுள்ளது. இதில் பணிபுரியும் மருத்துவ விற்பன்னரான அல்ஃபோன்சோ டிலா பறேறா என்பவர் "25 இலட்சம் டொலர் இருந்தால் போதைப் பொருளினால் பாதிப்படைந்த 139 பேரைக் காப்பாற்ற முடியும்." என்று கூறுகிறார்.

## மனச்சுமையை மரங்கள் தாங்கும்!

## ஆச்சரியமான தகவல்கள்



**ந**மது வீட்டுத் தோட்டத்தில் காணப்படும் மரம் செடிகொடிகள் நமது அன்றாடப் பிரச்சினைகளில் பங்கெடுக்கின்றன. நமது சுகத்திலும் துக்கத்திலும் அவை பெரும் பங்கினை வகுக்கின்றன. நமது மன உழைச்சலையும் அழுத்தங்களையும் இவற்றிடம் கூறி முறையிட்டால் அல்லது மானசீகமாவது உணர்த்தினால் அவை நமக்காக வருந்துகின்றன. நமது மன உழைச்சலை அவை ஏற்று உணர்வுபூர்வமாக நம்மை ஆறுதல்படுத்துகின்றன. அதேவேளை நமது வேதனைகளை ஏற்பதனால் அவை தங்கள் வளர்ச்சியில் பாதிப்படைந்து, செழுமையினை இழந்து இறுதியில் வாடிவிடுகின்றன.

நியூயோர்க்கைச் சேர்ந்த உளவள ஆய்வாளர் பல தாவரவியல் நிபுணர்களுடன் இணைந்து நடத்தியுள்ள ஆய்வில் பல உண்மைகளைக் கண்டு வெளிப்படுத்தியுள்ளார்.

"தாவரங்கள் மனிதனுக்கு அமைதியையும் ஓய்வையும் தருவன. எமது மனவாட்டங்களை அவை துடைக்கின்றன. களைப்படைந்த அல்லது மனவேதனை நிறைந்த ஒருவர் ஒரு பூங்காவில் சற்றுநேரம் உலாவினால்-அங்கு மலர்ந்த மலர்களைப் பார்த்தால், அவர் சோர்வு நீங்கி, கவலை மறந்தவராகிவிடுகிறார். இவ்வாறு கூறும் டாக்டர் பிரவுண், "தாவரங்களிலிருந்து ஒருவகை மின்காந்த அலைகள் வெளிப்படுகின்றன. அவற்றின் மூலம் நாம் விபரிக்க முடியாத மகிழ்ச்சியினை அடைய முடிகிறது.

"இதே வேளை நம்மிடமிருந்து வெளிப்படும் கோபம், துன்பம் மற்றும் அலட்சியப் போக்குகள் அதே தாவரங்களை அழிக்கும் சக்திபடைத்தவை" என்றும் கூறுகிறார்.

சதா சண்டைபோடும் குடும்பத்தவர்கள் வாழும் இடங்கள், அதிக ஓசை எழுப்பும் ஒலி பெருக்கிகளை சதா பாவிக்கும் இடங்கள், கோபக்காரர்கள் உள்ள வீடுகள் ஆகியவற்றில் வளர்க்கப்படும் செடிகொடிகள் ஆரோக்கியமாக வளர்வதில்லை என்று டாக்டர் பிரவுண் கூறுகிறார். இப்படியான இடங்களில் வளரும் செடிகளின் இலைகள் விரைவில் மஞ்சள் நிறமாகிவிடும். தண்ணீர் போதாதென்றோ பயளை போதாதென்றோ எண்ணி தண்ணீர் ஊற்றி, பயளை போட்டாலும் அவற்றின் அழிவினைத் தடுக்க முடியாமற்போய்விடும்.

"பச்சை செடிகளை உங்கள் இல்லத்தில் வைத்துப்பாருங்கள். உங்கள் வீட்டில் ஓயாத சண்டை நடக்கிறது. வானொலியிலும் தொலைக்காட்சியிலும் பலத்த சத்தத்துடன் இசையைப் போடுங்கள். உங்கள் குழந்தைகள் எப்போதும் அழுது புலம்புகின்றன என்று வைத்துக்கொள்ளுங்கள். இவற்றின் பிரதிபலிப்பினை தாவரங்கள் காட்டிவிடும். இத்தகைய சுமைகளை அவை தாங்கமாட்டா. விரைவில் அத்தனையும் செத்து மடிந்துவிடும்" என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

"ஒருவருடைய வீட்டில் மரஞ்செடி கொடிகள் செம்மையாகவும் செழிப்பாகவும் வளர்ச்சியடைகின்றன என்று கண்டால், அந்த வீட்டில் மகிழ்ச்சிக்குக் குறைவில்லை என்று அறிந்துகொள்ளலாம்" என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.



### முடி உதிர்வதை தடுக்க ஒரு வழி!

சில நெல்லிக்கனிகளை அரைத்துக் கொண்டு எலுமிச்சம் பழரசத்தை கலந்து தலையில் தேய்த்துக் கொண்டு வந்தால் மயிர் உதிர்தல் நின்று விடும். மயிர் நன்கு வளரும் கறுப்பு நிறம் படியும். நரை இராது. எலுமிச்சம்பழ விதைகளுடன் மிளகு கலந்து தண்ணீர் விட்டு அரைத்து முடி உதிர்ந்த இடத்தில் தேய்த்தாலும் சிறிது காலத்திற்குள்ளேயே மயிர் வளர ஆரம்பிக்கும்.

**அஜீரண வயிற்றுநோய்:**


உணவு உண்பதற்கு 1 மணி நேரத்திற்கு முன்னதாக வெந்நீரில் ஒரு எலுமிச்சம் பழத்தைப் பிழிந்து அருந்துதல் வேண்டும். இதை விட, உணவு உண்ட பின் வயிறு பாரமாய் இருத்தல், பொருமல் இவைகளுக்கும் இம்முறை சிறந்தது.

**மலச்சிக்கல்:**

எலுமிச்சம்பழத் தோலை நீக்கிவிட்டு தோலில் உள்ள வெள்ளைப் பொருளுடன், சதையுடன் கூடிய விதைகளைக் கூட நீக்காமல் அப்படியே ஒரு போத்தலில் தண்ணீர் விட்டு அதில் போட்டு மூடி இரவில் காற்றுப் படும்படியான இடத்தில் வைக்கவும். காலையில் போத்தலை எடுத்து நன்றாகக் குலுக்கி தண்ணீரை வடித்து, அப்படியே குடிக்கவும். இம்முறையைக் கையாண்டால் மலச்சிக்கலில் இருந்து நிவாரணம் கிட்டும்.

# கொலை விழும் நேரம்

எழுதுவது ரசிகன்






சிரிக்கத் தொடங்கிய நிரோசாவை தீர்க்கமாய் பார்த்தார் டி.ஐ.ஜி டென்சில்.

எதிர்பாராமல் நிகழ்ந்த அதிர்ச்சி. கண் முன்னே நடந்த கொலை. மெல்லிய மனதை இடியாய் தாக்கி, உடைத்துப் போட்டு விட்டது. அவகாசம் வேண்டும். தெளிவடைய சந்தர்ப்பம் வேண்டும்.

எச்சரிக்கை உணர்வோடு கொலையாளியால் துண்டிக்கப்பட்டிருந்த தொலைபேசி வயரை மீண்டும் இணைத்து சரி செய்து, ரிசீவரை தூக்கி காதில் வைத்துப் பார்த்து, அது உயிர் பெற்று விட்டதை அறிந்து, கான்ஸ்டபிள் டி.ஐ.ஜியை பார்த்து,

"ஓ.கே.சேர்"

டி.ஐ.ஜி. டென்சில் முகத்தில் நிரம்பியிருந்த யோசனையோடு, கான்ஸ்டபிளிடம் ரிசீவரை வாங்கி, மனதில் இருந்த டாக்டர் பொற்பதியின் இலக்கத்திற்கு டயல் செய்து,

"ஹலோ டாக்டர்! டென்சில் ஹியர் நீங்கள் அவசரமாய் வேண்டும். நோ. நோ இப்போதே, எவ்வளவு வேகமாய் முடியுமோ அவ்வளவு வேகமாய்.... பிளிஸ்"

என்று கூறி முகவரி சொல்லி ரிசீவரை வைத்தார்.

சிரித்துக்கொண்டிருந்த நிரோசாவை கவலையோடு பார்த்துக்கொண்டிருந்தார் பிரசாத்.

சிரித்துக்கொண்டிருந்த நிரோசா தன்னையே எல்லோரும் பார்ப்பது புரிந்து, சிரிப்பை நிறுத்தி, எல்லோர் முகத்தையும் ஒரு முறை பார்த்துவிட்டு, மார்பில் செருகப்பட்ட கத்தியோடு தரையில் கிடந்தவன் மீது விழிகளை நிலைக்கவைத்து,

திடீரென்று விம்மி, விம்மி அழத் தொடங்கினாள். பிரசாத் டி.ஐ.ஜியைப் பார்க்க,

"அழட்டும். உணர்ச்சிகளை உள்ளேயே அடக்கி மூடிக்கொண்டால் மனது இறுகிப் போகும். அழுவது மனது லேசாக உதவும். தெளிவாக உதவும். குறுக்கிடாதீர்கள். உணர்ச்சிகளை வெளியே கொட்டட்டும்".

என்றார் அழும் நிரோசாவை ஊடுருவிப்பார்த்தபடி பிரசாத்திடம்.

"நெஞ்சுக்குத் தெரியும் நிலவுக்குத் தெரியும்
நீயார் நான் யார் என்பது!
ஊருக்குள் இருக்கும் யாருக்குத் தெரியும்
உனை என் மனம் நினைப்பது!....."

—கவியரசு—

வயர்லெஸ் மூலமாக கொடுக்கப்பட்ட செய்தியால் ஆம்புலன்சும், ஒரு ஜீப் நிறைய பொலிசும் இன்ஸ்பெக்டர் சியோனும் வந்து சேர, பொலிஸ் கமராமேன் டி.ஐ.ஜி யின் உத்தரவுக்காக அவர் முகத்தைப்பார்க்க,

"மிஸ்டர் பிரசாத் நிரோசாவை அழைத்துப் போய் அறையில் ஓய்வாக இருக்க வையுங்கள். இப்போது எதுவும் கேட்க வேண்டாம்".

பிரசாத் நிரோசாவின் அருகில் போய்,

"எழுந்திரு நிரோசா. உன் அறைக்குப் போகலாம். வா".

அவள் அழுது கொண்டே புரியாமல் பார்க்க, குனிந்து புஜங்களில் கைவைத்து, ஒரு குழந்தையைத் தூக்குவது போல் அவளை தரை விட்டு எழவைக்க முயல, ஒரு பொம்மையைப் போல் உணர்ச்சியே இல்லாமல் எழுந்து, பிரசாத் கை பிடித்து அழைத்துச் செல்ல, மிரட்சியான விழிகளோடு சென்றாள் நிரோசா.

பொலிஸ் கமரா மேன் பக்கம் திரும்பிய டி.ஐ.ஜி. "ஆரம்பிக்கலாம்" என்பதாய் தலையசைக்க, உடல் கிடந்த முன்ஹோலை பல கோணங்களில் பதிவு செய்து கொள்ளத் தொடங்கியது கமரா.

மார்பில் செருகியிருந்த கத்தியை வெள்ளைத் துணிபோட்டு எடுத்து, இன்ஸ்பெக்டர் சியோனிடம் கொடுத்துவிட்டு சட்டைப் பொக்கற்றுக்குள் கைவிட்டு பார்க்க, பொக்கற் வெறுமையாகக் கிடந்தது.

ஏமாற்றமாய் காற்சட்டைப் பொக்கற்றில் கைவிட்டுப் பார்க்க அதுவும் வெறுமை. மறு பொக்கற்றில் தேட, ஐந்து நூறு ரூபாய் தாள்கள், இரண்டு பத்து ரூபாய் தாள்கள், கொஞ்சம் சில்லறை வெளியே வந்தது.

நூறு ரூபாய் தாள்கள் புத்தம் புதிய நோட்டுக்களாக இருந்தன.

தான் யார் என்ற தடயமே இல்லாமல் செத்துப்போய், இவன் யார் என்று அறிவதே பெரிய தலைவலியாகிவிட.... ச்...சே... மனதுக்குள் சலித்தபடி, நூறு ரூபாய் தாள்களை யோசனையாய் விரல்களால் புரட்ட, ஒரு தாளில் ஏதோ வித்தியாசமாய் உணர்ந்து, உற்றுப் பார்க்க,

பென்சிலால் மிக மெல்லிய இலக்கங்கள் சில எழுதப்பட்டிருக்க, உஷாராகி, இது கூட தடயமாகலாம் என்ற நம்பிக்கையில் கவனமாய் நோக்க, அது ஒரு தொலைபேசி இலக்கம் போல் இருந்தது.

நிச்சயமாக ஒரு முக்கியமான இலக்கம். இரகசியமாய் குறித்து வைக்கப்பட்டிருப்பதால் குற்றத்தின் வேரே இங்கிருந்து ஆரம்பமாகக் கூடும். செத்தவன் அம்பாக இருக்கலாம். ஏவியவன் இந்த இலக்கத்தில் பத்திரமாக இருக்கலாம். டி.ஐ.ஜி. டென்சில் யோசனையோடு மெல்ல எழுந்திருக்க, பிரசாத் பதட்டமாய் வந்து,

"டி.ஐ.ஜி. நிரோசாவின் அறை பூட்டப்பட்டிருக்கிறது. நிச்சயமாக நிரோசா பூட்டியிருக்க மாட்...."

என்று சொல்லி திடீரென்று நிறுத்தி மேசையில் தொலைபேசிக்கு அருகே கிடந்த சாவியை நோக்கி விரைந்து எடுக்கப் போக,

"நில்லுங்கள் பிரசாத். அதை கையால் தொடவேண்டாம்."

டி.ஐ.ஜி. இன்ஸ்பெக்டர் சியோனை பார்க்க, அவர் விரைந்து, தன் காற்சட்டைப் பொக்கற்றில் இருந்து கைக்குட்டையை எடுத்து, அதனைப்போட்டு சாவியை எடுக்க, பிரசாத்தைப் பார்த்து டி.ஐ.ஜி.

"வாருங்கள் பிரசாத். நிரோசாவின் அறையைக் காட்டுங்கள்."

அறையின் முன் நின்று, இப்போது சிரிக்காமல், அழாமல், வேடிக்கை பார்க்கும் குழந்தைபோல விழிகள் விரித்து நிரோசா நிற்க, இன்ஸ்பெக்டர் சியோன் கைக்குட்டையால் சாவியின் தலையில் பிடித்தபடி, துவாரத்தில் செருகி திருப்பி கதவு திறந்து, மீண்டும் சாவியை கைக்குட்டையில் பத்திரப்படுத்திக்கொள்ள,

டி.ஐ.ஜி. எச்சரிக்கை உணர்வோடு நிதானமாய் அறைக்குள் நுழைந்து, விழிகளால் நாற்புறமும் அலச, தரையில் நசுங்கிப் போய் கிடந்தது சிவப்பு ரோஜா.



காலால் நசிபட்டிருக்க வேண்டும். என்று நினைத்தபடி, அறையின் இடதுகோடியில் இருந்த பாத்ரூம் கதவு நோக்கிப் போய், இடுப்பில் இருந்து பிஸ்டல் எடுத்து, நிதானமாய் லோட் பண்ணி, தயார் நிலையில் வைத்துக்கொண்டு, மறுகரத்தால் கதவின் மேல் இருந்த கைப்பிடி திருப்பி, சடுதியான வேகத்தில் கதவு தள்ளி பிஸ்டல் நீட்ட, உள்ளே-

இங்கே யாருமே இல்லை என்று சொல்வது போல் இருந்தது பணக்காரத் தனமான பாத்ரூம்.

உள்ளே யாரோ இருந்திருக்கிறார்கள். என்று டி.ஐ.ஜி. டென்சிலின் பொலிஸ் மூளை சொல்லிக்கொண்டிருக்க,

பாத்ரூமை அங்குலம், அங்குலமாய் பார்வையால் தடவியபடி நகர்ந்த டி.ஐ.ஜி. டென்சிலின் விழிகள், பாத்ரூம் வெண்டிலேட்டர் மீது நிலைத்துநின்றன.

ஒரு ஆள் தாராளமாய் என் வழியே செல்லலாம் என்பது போல் இருந்தது வெண்டிலேட்டர். ஆனால் வெண்டிலேட்டர் ஜன்னல் மூடப்பட்டிருந்தது. கொழுக்கியைப் பார்த்தார். உள்ளே போடப்படாமல் இருந்தது. ஆகவே, இதன் வழியே ஒரு ஆள் வெளியே இறங்கி, இறங்கிய பின் வெண்டிலேட்டரை மூடிவிட்டு சென்றிருக்க வாய்ப்பு உண்டு.

"இன்ஸ்பெக்டர் சியோன்."

"யெஸ் சேர்."

"கைரேகை நிபுணருக்கு இங்கும் வேலை இருக்கிறது. வெண்டிலேட்டர் மீது உள்ள கைரேகைகளையும் எடுக்கச் சொல்லுங்கள்."

"யெஸ் சேர்."

வெளியே வந்து,

"மிஸ்டர் பிரசாத். ஹரிகரன் உங்கள் சகோதரர்தானே?"

என்று கேட்க,

அதுவரை பதட்டத்தில் ஹரிகரன் பற்றி மறந்து போனதை நினைத்து பதறியபடி,

"யெஸ். ஹரிகரனுக்கு என்ன.... என்ன நடந்தது இன்ஸ்பெ...டி.ஐ.ஜி.?"

"பதட்டப்படாதீர்கள் பிரசாத். நீங்கள் தைரியமாக இருக்கவேண்டிய நேரம் இது."

"அப்படியானால்.... நான்... ஓ.... மனோகர் சொன்ன செய்தி...?"

பிரசாத்தின் முகத்தில் பொய் இல்லை. மௌனமாய் தலையசைத்தார் டென்சில்.

நிரோசா கட்டிலில் மல்லாந்து படுத்தபடி, அங்கு நடப்பது எதிலுமே சம்மந்தம் இல்லாததுபோல், நெற்றி மேலே அதிகமாய் விலகியிருக்க, இளமை கொடுத்த அதிக திமிரில் மார்புகள் திரட்சியாய், அவள் விடும் மூச்சுக்கு ஏற்ப உயர்ந்து தணிந்து கொண்டிருக்க, மேலே சுற்றிக்கொள்ளும் அவசியம் இல்லாமல், ஏ.சி. இருக்க நான் எதற்கு என்று ஓய்ந்து கிடந்த மின்விசிறி மீது விழிகள் நிலைக்கவிட்டபடி கிடந்தாள்.

பிரசாத் கட்டிலருகே சென்று, போர்வை எடுத்து நிரோசா மீது போர்த்தியபடியே, கட்டுமீறிவரும் அழுகையை உள்ளே அடக்கிக்கொண்டிருக்க,

"டாக்டர் பொற்பதி வந்துவிட்டார்."

என்று இன்ஸ்பெக்டர் சியோன் டி.ஐ.ஜியிடம் கூறினார்.

"வரச் சொல்லுங்கள்."

டாக்டர் பொற்பதியிடம் நிரோசாவின் நிலை விளக்கி, அவர் பரிசோதித்து,

"அதிர்ச்சியில் குழம்பிப் போய் இருக்கிறாள். தூங்கவைக்க ஒரு ஊசி போடலாம். நன்றாக தூங்கி எழுந்திருக்கட்டும். பின்னர்தான்.."

"ஓ.கே. டாக்டர். மிஸ்டர் பிரசாத் நிரோசாவுக்கு கொலையானவன் யார் என்று தெரிந்திருக்கலாம் என்று நினைக்கிறேன். கொலையாளியையும் அவள் பாார்த்திருக்க வேண்டும். அதனால் நிரோசா தெளிவடைவது முக்கியம். இந்த விசாரணையின் முக்கிய பாதையை திறக்கும் சாவி நிரோசாவிடம்தான் இருக்கிறது."

கான்ஸ்டபிள் வந்து, சல்யூட் வழங்கி,

"சேர் உங்களுக்கு போன் வந்திருக்கிறது."

"யார்?"

"சொல்லவில்லை. முக்கிய விடயமாம். உங்களோடு மட்டும்தான்."

"பேசுவேன் என்று அடம்பிடிக்கிறானா? றாளா?"

"ஆண் குரல் தான் சேர்."

விரைந்துபோய், யோசனையோடு ரிசீவர் எடுத்து,

"ஹலோ"

"வணக்கம் ஐயா! டி.ஐ.ஜி. தானே?"

"தான். நீ யார்?"

"நான்.. நான்தான். பொய்சொல்ல விரும்பவில்லை. அதனால் கற்பனையாய் ஒரு பெயர் சொல்லப் பிரியமில்லை."

"நல்லது. என்ன வேண்டும்?"

"ஒரு உயிர். ஐ மீன் தற்போதைக்கு ஒரு உயிர்."

குரலை மாற்றிப் பேசி சிரமப்படுகிறான் என்று புரிந்தது. வாகன இரைச்சல் கேட்டது. பொதுத்தொலைபேசியில் பேசுகிறான் என்று தெரிந்து, செவிகளை தீட்டியதில்,

"லாபாய்...லாபாய்" என்று நடைபாதை வியாபாரியின் குரல் கேட்பது போல் இருந்தது. பேச்சை வளர்க்க நினைத்து,

"யாருடை உயிர்?"

"நிரோசாவின் உயிர்."

உறுதியாய் சொன்னான்.

"ஹரிகரனின் கதை முடிந்துவிட்டது. அந்த கதை முடித்தது யார் என்று நினைக்கிறீர்கள்?

"யார்?"

"அடியேன்தான்."

சிரித்தான். குரலுக்கும் சிரிப்புக்கும் சம்பந்தமே இல்லாததைக் கவனித்தார் டி.ஐ.ஜி.

"அது சரி டி.ஐ.ஜி. யார் அவன் அந்த முட்டாள்? எனக்கு முன்னால் இடையிலே புகுந்து, நிரோசாவின் மெல்லிய கழுத்தை நெரித்து, என்ன அவசரம் அவனுக்கு. எனக்கு ஒரு பழக்கம். என்ன பழக்கம் தெரியுமோ?"

"என்ன பழக்கம்?"

"நான் நினைத்ததை நானே முடிக்க வேண்டும். தோல்வியடைய விரும்புவதில்லை. விடுவதும் இல்லை. அதனால்தான்..."

அவர் பேச்சு திடீரென்று நின்றுபோனது. சில நொடிகள் தாமதித்து மறுமுனையில் ரிசீவர் வைக்கப்படும் சத்தம் கேட்டது.

அவசரமாய் ரிசீவரை வைத்துவிட்டு, இன்ஸ்பெக்டர் சியோனை அழைத்து,

"நகரில் நடைபாதை வியாபாரிகள் போவோர் வருவோரை கூவியழைத்துக் கொண்டிருப்பார்கள் பாருங்கள். அப்படியான இடங்களில் அருகில் பொதுத்தொலைபேசி உள்ள இடங்கள் எங்கெல்லாம் இருக்கின்றன என்ற விபரங்கள் உடனே வேண்டும்."

■

**பொ**துத் தொலைபேசியில் பேசிக் கொண்டிருக்க, திடீரென்று ஒரு கரம் நுழைந்து ரிசீவர் பறிக்க,

அதிர்ந்து திரும்பினான் அவன். பறித்த கரத்துக்குரியவர் நடுத்தர வயதில் இருந்தார். காதோர மயிர்கள் நரைத்து சிரித்தன. மீசையை சுத்தமாய் தொலைத்திருந்தார். கண்களுக்கு குளிர்ச்சியாக, மறைப்பாக கறுத்த கண்ணாடி அணிந்திருந்தார்.

அவனைப் பார்த்து நட்பும் இல்லாமல் அதிக பகையுமில்லாமல் புன்னகைத்தார்.

கையிலே மிக நிச்சயமாக ஒரே ஒரு குத்தில் உயிர் பறிக்கக்கூடிய பள பள என்று மின்னிக் கொண்டிருந்த கத்தி வைத்திருந்தார்.

"எதிர்க்க நினைத்தால் அடுத்த கொலை செய்ய நீ இருக்கமாட்டாய். நீயே கொலையாகி விடுவாய் நண்பா."

குரலில் கர கர தன்மை தெரிந்தது. கடுமையான தொனி புரிந்தது.

"டி.ஐ.ஜி. உன் மாமனா? மச்சானா? பொலிசை நம்பக்கூடாது நண்பனே. நீ நீளமாய் பேசினால் அவர்கள் மோப்பம் பிடித்து விடுவார்கள் நண்பா."

எதிர்த்துப் போராட வாய்ப்பில்லை என்று அவன் புரிந்து கொண்டான். அதனால் அவர் பேசுவதைக் கேட்டபடி நின்றான்.

வெளியே வானம் 'மூட்' வந்து கரிய போர்வைக்குள் பூமியை சிக்கவைத்துக் கொண்டிருந்தது.

ஒரு வெள்ளைக் கார் நிற்பது தெரிந்தது. அதிலே தான் இவர் வந்திருக்க வேண்டும் என்று நினைத்துக்கொண்டான்.

"பயப்படாதே நண்பா. கத்தி முனையில் நம் நட்பு மலர்ந்தாலும் தித்திப்பாய் இது தொடர்வதும், விடுவதும் உன் கையில் தான் இருக்கிறது. வா. காரில் போய்க்கொண்டே பேசலாம்."

கட்டுப்பட்டான். வேறு வழியில்லை. முதுகில் இருந்தது பை. உள்ளே இருக்கிறது ஆயுதம். ஆனால் உபயோகிக்க முடியாது. சந்தர்ப்பம் இல்லை.


காரின் அருகே செல்ல பின் கதவு திறந்தது.

"உள்ளே யாரோ இருக்கிறார்கள். இவர் தனி ஆள் அல்ல" நினைத்தான்.

உள்ளே போ நண்பா."

என்றார். உள்ளே போய் அமர்ந்து திரும்பியவன் அதிர்ந்து போனான்.

(இன்னும் வரும்)



## பேனா நண்பர் அரங்கம்



பெயர்: தா. ஜெயகுமார்
வயது: 23
முகவரி: NEUEN GASSE.1
3011, BERN, SWITZERLAND.
பொழுதுபோக்கு: இசைக்கருவி மீட்டல், பத்திரிகை வாசித்தல், கதை, கவிதை எழுதுதல், தொலைக்காட்சி பார்த்தல்.



பெயர்: பா. பாலேந்திரன்
வயது: 28
முகவரி: 102/1, A, முகத்துவாரம் வீதி, கொழும்பு-15.
பொழுதுபோக்கு: நாவல்கள் படித்தல், படங்கள் பார்த்தல், பொது அறிவு நூல்கள் படித்தல்.



பெயர்: எம்.ஏ.ஏ. ஜுனூத்
வயது: 20
முகவரி: 104, பிரதான வீதி, கொத்தாந்தீவு, புத்தளம்.
பொழுதுபோக்கு: பத்திரிகை, கதைப் புத்தகங்கள் வாசித்தல், வானொலி கேட்டல், பத்திரிகைகளுக்கு எழுதுதல்.



பெயர்: நஸ்மியா ரஹீம்
முகவரி: இல.14, ஹனபி மாவத்தை பேருவளை.
பொழுதுபோக்கு: வானொலி கேட்டல், பத்திரிகை வாசித்தல், தைத்தல்.

பெயர்: வி. தியாகராஜா
வயது: 15
முகவரி: சார்னியா குறூப், மாத்தன்னைத் தோட்டம், பதுளை போஸ்ட்.
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல், கிரிக்கெட் விளையாடுதல், தொலைக்காட்சி பார்த்தல்.

பெயர்: ஏ.எம்.ஏ. நஜீம்
வயது: 27
முகவரி: ரகுமா மன்ஸில், மீராபள்ளி றோட், காத்தான்குடி-05.
பொழுதுபோக்கு: சஞ்சிகை, பத்திரிகை, புத்தகம் வாசித்தல், தொலைக்காட்சி பார்த்தல்.

பெயர்: வி. கிரிஜா
வயது: 22
முகவரி: 37/7, மத்திய வீதி, உவர்மலை, திருகோணமலை.
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல், தொலைக்காட்சி பார்த்தல்.

பெயர்: நுசைபா முகம்மட்
வயது: 28
முகவரி: 75/1 A, சாந்த மரியா ஒழுங்கை, மட்டக்குளிய, கொழும்பு-15.
பொழுதுபோக்கு: புத்தகம் வாசித்தல், தொலைக்காட்சி பார்த்தல்.

## நோன்புகாலச் சிறுகதை

# உதயமாகும் வாழ்க்கைக் கோடுகள்...

ஹரீரா அனஸ்

எரிந்துகொண்டிருந்த விடிவிளக்கை அணைத்து சுவரோரத்தில் வைத்தாள் றிபாஸா. அறையினுள் வாப்பா இருமும் சத்தம் கேட்டது. "உம்மா றிபாஸா....இங்கை கொஞ்சம் வாம்மா...." ஈனமாய் மாறிவிட்ட வாப்பாவின் குரல்கேட்டு அறையின் பக்கம் போனாள். "உம்மா என்னாலை ஒண்ணுமே செய்ய முடியாமலிருக்கு மவள்... அந்த படிக்கத்தை கொஞ்சம் எடுத்துத் தந்திடம்மா..."

வாப்பாவிற்கு வரவர நோய் அதிகமாகிக்கொண்டே போகிறது. எவ்வளவோ மருந்து வாங்கியும் நோய் குறைந்தபாடே இல்லை. றிபாஸா முந்தானைத் தலைப்பை முகத்தில் பொத்தியபடி அழுதுகொண்டிருந்தாள்.

"உம்மா... றிபாஸா... எதுக்கும்மா இப்ப அழுவுறே?"

'லொக்... லொக்...' என்று இருமியபடியே வாப்பா துக்கம் தாழாமல் கேட்டார்.

"இல்லை வாப்பா ஒங்கடை நிலமையைக் காணேக்குள்ளை..." வாப்பாவின் நோய் உக்கிரம் அவ்வளவாய் இருந்ததை அவளால் சகிக்க முடியவில்லை.

தன் மகளின் நிலமையை அவர் எண்ணாத நாட்களே இல்லை. அவருக்குக் கவலை, தனக்குப் பின்னாலுள்ள காலத்தில் அவளின் வாழ்க்கை என்னவாவது என்பதுதான்.

சகோதரங்களுடன் கூடப்பிறக்காத குறை அவளுக்கு மனத்தில் பாரமாய் அழுத்தியது.

எத்தனை நாளைக்குத்தான் பக்கத்துவீட்டு நாஸிர் நானாவும் உதவி செய்வார்?

வாப்பாவின் சுகவீனத்தோடு றிபாஸாவினது படிப்பும் இடையில் நின்று போய்விட்டது.

கன்னிகையாய், கனிக் கொழுந்தாய், கட்டமைப்பாய் வளர்ந்திருக்கும் றிபாஸாவின் தாய் இறந்ததன் பின் அவளின் வாப்பாவோடு தனிமைப்படுத்தப்பட்டதான இந்த மண்குடிசை வாழ்க்கை இருண்ட நிறத்தோடுதான் நிகழ்ந்துகொண்டிருக்கிறது.

அவளின் தனிமையை எத்தனையோ பேர் பயன்படுத்த எண்ணினார்கள். முடியவில்லை. அவள் இறைவனுக்குப் பயந்தவள். இறைவனின் துணையோடு வாழ்பவள்.

•••

இறைவன் இயக்குபவன் மனிதன் இயங்குபவன். எப்போதுமே மற்றவர் நலனில் அக்கறை கொண்டவர் நியாஸ் ஹாஜியார். பத்தாவுக்கேற்ற பதிவிரதையானவள் அவர் மனைவி ஹபீலா. இருவரும் ஏழைகளின் வீடுகளுக்கு தேடிச்சென்று அவர்களின் நலனை விசாரித்து, அவர்களின் சுகதுக்கங்களில் பங்கெடுத்துக்கொள்வார்கள். அவ்வப்போது தேவையான உதவியும் செய்து விடுவார்கள். ஆனால் அவர்களின் பார்வைக்கு எட்டாத தூரத்தில் இருந்தது றிபாஸாவின் குடிசை. அவர்கள் என்ன செய்வார்கள்?

•••

"யா அல்லாஹ்! ஏன்ட நோயைப்பத்தி எனக்குக் கவலையே இல்லை ரஹ்மானே! ஏன்ட குஞ்சு...இந்த றிபாஸாக்குட்டியை மட்டும் ஒரு நல்லவன் கையிலை ஒப்படைச்சு வாழ்க்கையைக் குடுக்கிறதுக்காய் உதவி செய் ரஹ்மானே."

'இறைவன் மனிதனோடு இருக்கிறான். அவனின் பிரார்த்தனைகளை அங்கீகரிக்கிறான்.' வாப்பாவின் இந்த உருக்கமான துஆவைக்கேட்ட றிபாஸா சுவரின் அப்பால் நின்றபடி அழுதாள்.

'யா அல்லாஹ்! எனக்குக் கலியாணம் இல்லாட்டிலும் பரவாயில்லை. இந்த வாப்பாவின் நோய் துன்பத்தை இல்லாமலாக்கு நாயனே! எங்கடை வாப்பாவுக்கு சுகத்தைக் குடு நாயனே!" பெற்ற தந்தைக்காய் அவளின் பிரார்த்தனை இரங்கியது.

ஞாயிற்றுக்கிழமை நோன்பு. இஸ்லாத்தின் கடமைகளில் ஒன்றான நோன்பு. இம்முறை என்ன நடந்தாலும் எல்லா நோன்புகளையும் பிடித்து விடுவது என்று தன் மனதினில் தீர்மானித்துக் கொண்டாள். அல்லாஹ், நோன்பில் கேட்கும் எந்த துஆவையுமே நிராகரிப்பதில்லையே என எண்ணிக்கொண்டாள். ஆனால் தலை நோன்புக்கே 'சஹர்' செய்வதற்குக்கூட ஒன்றுமே சாப்பிட இல்லாத நிலமை. முதல் நோன்பை பசி நோன்பாகவே பிடித்தாள். தந்தையார் எவ்வளவோ சொல்லியும் எதுவுமே கேட்காமல் அல்லாஹ்விற்காகப் பிடித்தாள்.

"அல்லாஹு அக்பர்... அல்லாஹு அக்பர்...." மஃரிப் தொழுகைக்கான அதான் வானொலியில் ஒலிபரப்பாகியது. எல்லோரும், ஈச்சம்பழம், பற்றிஸ், பலகாரம், பழவகைகள் என்று நானாவித தின்பண்டங்களுடன் நோன்பு திறக்க ஆயத்தமாகும் நேரம். றிபாஸா ஒரு கோப்பை தண்ணீருடன் உட்கார்ந்தாள். அந்தத் தண்ணீரைப் பார்த்ததும்... "யா அல்லாஹ்..." என்று துக்கம் தாளாமல் முகத்தை மூடிக்கொண்டு விம்மி விம்மி அழுதாள்... 'பசி' ஒருபுறம் சாப்பிட எதுவுமில்லையே என்ற வெறுமை மறுபுறமாக தமது நிலமையின் மீது இறைவனிடம் முறையிடுவதாய் அழுதாள். அழுது வீங்கின கண்கள். சொரிந்த கண்ணீரின் சிலதுளிகள் அவள் முன் வைக்கப்பட்டிருந்த நீர்ப்பாத்திரத்தினுள் விழுந்து கலந்தன. பாங்கு சொல்லி இரண்டு அல்லது மூன்று நிமிடம் கழிந்திருக்கும் என எண்ணியவள் அவசர அவசரமாக முகத்தைத் துடைத்துக்கொண்டு 'பிஸ்மில்' சொல்லியவாறு குனிந்து தண்ணீர்க் கோப்பையை எடுக்கப் போனவள்-



அவள்முன் எதிர்பாராத விதமாக பிஸ்ரூன் நிற்பதைக் கண்டாள்.

"வந்து.... நீங்கள்...?" என்று தடுமாறியவள் உடனே தனது முந்தானையை எடுத்து தலையை மூடிக் கொண்டாள். "றிபாஸா நான் இங்கை வந்து இப்ப ஐஞ்சு நிமிஷம் மட்டிலை இருக்கும்."

அவள் கேவிக்கேவி அழுததெல்லாம் இவன் கண்டுவிட்டானே என எண்ணும்போது றிபாஸா வெட்கமடைந்தாள்.

"றிபாஸா இந்தாங்க நோன்பைத் திறவுங்க." பிஸ்ரூன், அவளின் குடிசையில் இருந்து மூன்றாவது வீடு. ஓரளவு வசதியான குடும்பம். அவனை அவளுக்கு நன்றாகவே தெரியும். அதனால் அவன் கொடுத்த பார்சலை அவள் வாங்கிக் கொண்டாள்.

அதிலிருந்து ஒரு ஈச்சம்பழத்தை எடுத்து தானும் நோன்பைத் திறந்து கொண்டு...

"ஆ.... றிபாஸா வாப்பா எங்கே...?"

"அவர் உள்ளுக்குள்ளை படுத்திருக்கிறார். சரியான இருமல் சுகமில்லை."

றிபாஸா சொல்ல அவன் அறைக்குள் போனான். அங்கே றிபாஸாவின் வாப்பா அழுதுகொண்டு அல்லாஹ்விடம் துஆக் கேட்டுக்கொண்டிருந்தார். திடீரென பிஸ்ரூனைக் கண்டதும் "வாங்க தம்பி.. வாங்க..." என வரவேற்றார். கண்களைத் துடைத்துக்கொண்டார்.

நோன்பு திறக்க வீட்டிற்குப் போகும்வழியில் இந்த ஏழைக் குடும்பத்திற்கு ஏதாவது கொடுத்துவிட்டுப் போவோம் என்று வந்ததில் இவர்களின் நிலமை எல்லாம் ஓரளவு விளங்கிக்கொண்டான் பிஸ்ரூன்.

•••

சுகநலம் விசாரிக்க கண்ணீரோடு தன் குடும்ப நிலமையைச் சொல்லி கேவிக் கேவி அழுதார், றிபாஸாவின் தந்தை. அழகான றிபாஸா– அவளோடு நோயினால் பரிதாப்படும் அவள் தந்தை. இவர்களின் வாழ்க்கைக்கு என்னாலான உதவிகளைச் செய்யவேண்டும், என்பதாய் பிஸ்ரூன் முடிவெடுத்துக்கொண்டான். சிந்தனையில் அவன் ஏழைகளுக்கு உதவிசெய்யும் நல்லெண்ணத்தைத் தந்த அல்லாஹ்விற்கு நன்றி செலுத்தினான்.

"பிஸ்ரூன் என்ன மகன் யோசிக்கிறீங்க...?" பெரியவர் அவனைக் கேட்டார்.

"ஒண்டுமில்லை" என்றவன்... அவரின் கையில் ஐநூறுரூபா நோட்டு ஒன்றை வைத்து "இதை செலவுக்கு வைச்சிருங்க... இனிமே றிபாஸாவை பட்டினி நோன்பு புடிக்காம சஹருக்கு ஏதாவது சாப்பிடச் சொல்லுங்க..." என்றவனின் கைகளைப் பற்றி வாஞ்சையோடு முத்தமிட்ட பெரியவர் தனது இரு கைகளையும் வானத்தின் பக்கம் ஏந்தி துஆச் செய்தார்.

பிஸ்ரூன் மனதினில் முடிவெடுத்துக் கொண்டான்.

- இந்தக் குடும்பத்திற்கு உதவியாய் இருப்பது.
- றிபாஸாவை தன் வாழ்க்கைத் துணைவியாக்குவது.

'இந்த விடயத்தை நாளை றிபாஸாவின் தந்தையிடம் கூறுவேன். அவர் மகிழ்ந்து போவார். றிபாஸாவின் வாழ்க்கை மலர்ந்து போகும். அவர்களின் துன்பத்திற்கெல்லாம் அல்லாஹ் இந்த நோன்பு மாதத்தில் விடிவை உதயமாக்கிவிட்டான்.'

"றிபாஸா நான் வீட்டுக்குப் போறன்." பிஸ்ரூன் சொல்லிவிட்டுப் போகும்போது அவளின் உள்ளத்திலும் இனம் புரியாத ஏக்கக் கீறுகள் தென்பட்டன. அடக்கிக் கொள்ள முடியாமல் இருந்தன.

நபி பெருமானார் கூறினார்கள் "ரமழான் மாதம் பிறருடைய சுக துக்கங்களில் பங்குகொள்ளும் மாதம்.

இம்மாதத்தில் ஒரு நன்மை புரிபவருக்கு எழுபது நன்மைகள் பதியப்படுகின்றன."

பிஸ்ரூனின் சிந்தனை துலக்கமாய் இறைவனின் செயல்களை எண்ணிப் பார்த்தது. அவன் வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

றிபாஸா இன்னும் அவன் போவதையே பார்த்துக்கொண்டிருந்தாள்.

(கற்பனை)

# நானும் ஒரு தேவதையும்

வாழையூர் - ஸ்ரீவரணி

இடம்: பஸ்தரிப்பு நிலையம்
காலம்: மனோரம்மிய மாலைப்பொழுது
உணர்வு: எதிர்பார்ப்பு.

மணிக்கட்டைச் சுற்றியிருந்த சீக்கோ-5ஐ நிமிர்த்திப்பார்த்தேன். சின்னமுள் ஐந்திலிருந்து விலகிக் கொண்டிருந்தது. இன்னும் சிந்துவைக் காணவில்லை. இன்றாவது அவளுடன் கதைத்துவிடவேண்டுமென்று மனம் பரபரத்தது. (நாடித்துடிப்பு நிமிடத்திற்கு-90)

அதோ தூரத்தே அவள். மென் சிவப்பு சல்வாரில், கூந்தலை தூக்கி முடித்து கண்ணிற்கு மையிட்டு.... ஒருதேவதை போல் வந்துகொண்டிருந்தாள்.

(அப்பாடா,"தலைப்பு வந்தாயிற்று) மனசு இலேசாகிப் போனது எனக்கு!

அருகே வரவர அதிகமாய் 'அதிரினலீன்' சேர்ந்தது குருதியில்.

அருகே (இரு மீற்றர் இடைவெளியில்) நின்றாள். (ஆகா, என்ன வாசனை)

பதட்டமாய்ப் பார்த்தேன்.

அவளும் பார்த்தாள். பார்வையில் வெப்பமிருந்தது.



தாங்காது தாழ்த்திக்கொண்டேன் கண்களை -(சிந்து, கொஞ்சம் கனிவாகத்தான் பாரேன்)

'எப்படி அணுகுவது? 'மனம் திட்டமொன்றை சல்லடை போட்டுத் தேடியது. ம்ஹூம் அகப்படவில்லை (த்தூ, நீயெல்லாம் ஆம்பிளை மனசு)

காத்திருந்த நேர இறுதியில், தெருமுனையில் பஸ் முகப்புத் தெரிய உஷாரானேன். ஏறும்போது, உள்ளே அவளருகில் நின்றுவிட வேண்டும் (இருக்க இடம் கிடைக்குமா என்ன?)

சிந்து ஏற, பின்னால் நான் ஏற (சல்வார் முனை முகத்தை நீவியபோது, ஏற்பட்ட ஸ்பரிசம்... அடடா, தோல் மயிர்க் கணுக்களெல்லாம் விறைத்துப் போய் நின்றது) தூரத்தே சுமி ஓடிவருவது தெரிந்தது. பஸ்சை நிறுத்தி சுமியையும் எற்றிக்கொண்டு நகர, சிந்துவின் மனசு திட்டமொன்றைப் பிடிக்க,... ஏக குஷி சுமியிடம் பேச்சுக்கொடுத்தேன்.

"எங்க போக?"

"லைப்றறிக்கு" (சிந்து முகத்தில் எள்ளு வெடித்தது)

"நானும் போக வேணும், வரட்டா?"

"வாங்களன்" (சிந்து முகத்தில் கொள்ளு வெடித்தது)

பஸ்சில் இந்தப் பக்கம் சுமி, அந்தப் பக்கம் சிந்து. (ஐயோ, வேண்டாததையெல்லாம் கற்பனை பண்ணாதீங்க)

இருக்கைப்பிடியில் சுமியும் சிந்துவும் கை வைத்திருக்க, எதேச்சையாய் பிடிப்பது போல் சுமியின கைபற்றி, மெதுவாய் கீழிறக்கி சிந்துவின் கைபற்ற, உதறினாள்.

சுமி சிரிப்பதைப் பார்த்து வெந்து போனேன் நான்.

மணி அழுத்தி பஸ் நிற்க இறங்கினாள் சிந்து.

எனக்குள் பதட்டம். (நானும் இறங்க வேண்டுமே!)

சுமியைப் பார்த்து கண்ணடித்துவிட்டு, சிந்துவழி பின்பற்றினேன்.

நடையில் 'வேகமிருந்தது, கோபம் தெரிந்தது.

ஈடுகொடுத்தேன் நான். அழைத்தேன். "சிந்து."

நின்றாள். திரும்பினாள், பார்த்தாள். (யப்பா!!!)

காலிலிருந்து கருகத் தொடங்கியது எனக்கு!

நெருங்கினாள் என்னை, பேசினாள்...

"எத்தனை தடவை சொல்லி இருக்கன். சுமித்திரன்ர பழக்கம் சரியில்ல அவனோட சேராதீங்க எண்டு. என்ர பேச்சை மதிக்காம, பஸ்சில அவனோட கும்மாளமடிச்சுக்கொண்டு வந்தனீங்க இல்ல? அதுக்கு இன்னும் ஒரு கிழமைக்கு கதைக்க மாட்டன்."

என் செல்லக் காதலி பேசினாள். ஏறகனவே ஒரு வாரமாய் ஊடல். இன்னும் ஒரு வாரமா?...இறைவா? (நின்ற இடத்தில் காலில் வேரூன்ற, அசைய முடியாது பார்த்துக்கொண்டே நின்றேன் என்னருமைக் காதலியை!

(ஓடிப்போய் தலையில் நீர்வார்த்துக் கொள்ளுங்கள்)

# நேற்றைய நண்பன்....!

—சேத்தூர் எஸ். பகீரதி—

மயக்கிடும் மாலைப் பொழுது. அந்தி நேர வெயில் பூமியில் புதுக்கோலம் போட்டுக்கொண்டிருந்தது. எனது நெருங்கிய உறவினர் தனது பதவி உயர்வு மகிழ்ச்சியை சேர்ந்து கொண்டாட என்னையும் அழைத்திருந்தார். கைக்கடிகாரத்தை ஒருமுறை பார்த்துவிட்டு வேகமாக நடக்கின்றேன். பத்து நிமிடத்திற்குள் அவ் வைபவம் நடக்கும் இடத்தை அடைந்து விட்டேன். முகம் மலர வரவேற்றவரைக் கண்டு கைகுலுக்கி எனது மனப்பூர்வமான மகிழ்ச்சியை அவருக்கு சொல்லிக் கொண்டேன்.

அமைதியாக ஓரிடத்தில் அமர்ந்தேன். எனது விழிகள் வருபவர்களையும் செல்பவர்களையும் காமெரா போல் படம் பிடித்துக்கொண்டிருந்தது. சுழன்ற எனது கண்களுக்குள் அவன்... ஆம்! என் ஆருயிர் நண்பன் ராகவன் தெரிந்தான். அவனைக் கண்டதும் பேசவேண்டும் என்ற ஆவலில் என் இதயம் துடித்தது. ஆனால், அவன் என்னைக் கண்டும் காணாதவனாய் முகத்தைத் திருப்பிக்கொண்டு எதிர் அறையில் போய் அமர்ந்து விட்டான். இதயம் கனத்தது.

நேற்றுவரை ஒன்றாக இருந்து ஒரு பீங்கானில் சாப்பிட்டு ஒரு கட்டிலில் தூங்கி எங்கு செல்வதானாலும் ஒன்றாகவே நானும் ராகவனும் செல்வது எல்லாம் மனதில் நிழலாடியது. இவ்வாறு நாங்கள் எப்பொழுதும் பிரியாமல் திரிவதைக் கண்டு வியந்தபலரும் "சக்தி இல்லையேல் சிவம் இல்லை; சிவம் இல்லையேல் சக்தி இல்லை. இவர்கள்தாம் சக்தியும்–சிவமும்" என்று கூறுவார்கள். ராகவனுக்கு மட்டுமல்ல எனக்கும் இதைக் கேட்க சந்தோஷமாக இருக்கும்.



என்னிடம் ராகவன் எதையும் மறைக்க மாட்டான். நானும் அவனிடம் எதையும் மறைப்பதில்லை. எங்களிடம் ஒளிவு மறைவுகள் இல்லை. இரகசியங்களும் இல்லை. எனக்குப் பிடித்தவையெல்லாம் அவனுக்குப் பிடிக்கும். அவனுக்குப் பிடித்தவையெல்லாம் எனக்கும் பிடிக்கும். இதனால்தானோ என்னவோ என் மனதுக்குப் பிடித்தவளை நான் காதலிக்கும்போது எனது நண்பன் ராகவனும் அவளைக் காதலித்தான். இவ்வாறு ஒருவரை ஒருவர் அறியாமல் சித்ராவைக் காதலித்தோம். ஆனால் சித்ரா என்னை மட்டுமே நேசித்தாள். பெயருக்கேற்றவாறு தேவதை மாதிரி சித்ரா மிக அழகாக இருந்தாள்.

ஒருநாள் ராகவன் திடீரென என்னிடம் "ரகு நான் சித்ராவை லவ் பண்றேன்டா அவ இல்லாம எனக்கு வாழ்க்கையே இல்லடா. என்கூட அவ பேசினாலும் இதைப் பத்தி அவகிட்ட பேச என்னால முடியாது. ப்ளீஸ்டா, கண்ணா எனக்காக ஒரு தடவை அவ முடிவைக் கேட்டுச் சொல்லுடா," என்றதும் நான் ஏகமாய் அதிர்ந்துபோனேன். என் இதயம் குமுறியது. ஆனாலும் நான் சமாளித்துக்கொண்டேன். எனக்கு காதலைவிட நட்பே பெரிதாகத் தோன்றியது. சித்ராவை மறப்பதற்கு முயன்றேன். முடியவில்லை. சித்ராவிடம் ஒருமுறை ராகவனது நிலையைப்பற்றி எவ்வளவோ கூறி என்னை மறந்துவிடும்படியும் வாதாடினேன். அவள் அழுது ஆர்ப்பாட்டம் பண்ணி மறுத்துவிட்டாள். நான் திகைத்தேன்.

என்னைத் தீவிரமாகக் காதலித்த அவள் ராகவனிடம் சென்று என்னைக் காதலிப்பதாகக் கூறிவிட்டாள். நடந்தது இவ்வளவுதான். ராகவன் காரணம் ஏதுமின்றி என்னை விட்டு ஒதுங்கிவிட்டான். என் இதயம் துடித்தது. நான் எவ்வளவோ எடுத்துக்கூறினேன். ராகவன் கேட்கவில்லை. சித்ராவுக்கு நன்றாகப் பேசினேன். "ரகு எனக்கு நீங்க வேணும்...நீங்க வேணும்.." என்று அழுதவளைப் பார்க்கப் பாவமாக இருந்தது. அவள் என்மீது வைத்திருக்கும் அன்பை என்னால் புரிந்துகொள்ள முடிந்தது.

நட்பா? காதலா? நான் என் மனதுடன் சண்டைபிடித்தேன். ஒரு பெண்ணுக்காக நட்பை உதறித்தள்ளிவிட்ட ராகவனைவிட, நான் எவ்வளவு பேசியும் என்னையே வளைய வரும் சித்ரா பெரிதாகத் தெரிந்தாள்.

ஆனால் ராகவன் ஆரம்பப் பாடசாலையில் படிக்கும்போதே என் நண்பனானவன். அவன் என்னை புரிந்து கொள்ளாதது எனக்கு சங்கடமாக இருந்தது. என்னோடு எப்படி நெருங்கிப் பழகியவன். ஆனால் இன்று... அவன் யாரோ. நான் யாரோ. நான் அவனுக்கு எதிரி. "நேற்றைய நண்பன் இன்றைய எதிரி" என்று யாரோ சொன்னது ஞாபகம் வந்தது. நான் விடைபெற்றுக்கொண்டு வெளியில் வந்தேன்.

ராகவனைக் கடந்து வரும்போது அவன் பலமாக யாரிடமோ பேசிக் கொண்டிருந்தான். "நேற்றைய நண்பன் இன்றைய எதிரி. இன்றைய நண்பன் நாளைய எதிரி." நான் சொல்லவேண்டியதை அவன் சொல்கிறான். எனக்குள் சிரித்தபடி வேகமாய் கடற்கரையை நோக்கி நடக்கிறேன். எனக்காக சித்ரா காத்துக்கொண்டிருப்பாள்.

(யாவும் கற்பனை)



சிறுகதை

# அன்பை மறந்து.....

கல்குடா- க. பரமானந்தராஜா

அன்று அலுவலகம் செல்லும்போது தாமதித்துவிட்டது. மனேஜர் மிகவும் கண்டிப்பானவர். வேலைகளை நேரத்துக்கு ஆரம்பிக்காவிட்டால் சீறிப் பாய்ந்து விடுவார். அவசர அவசரமாக அலுவலக மாடிப்படி களிலே ஏறிக்கொள்கிறேன்.

எல்லோரும் தத்தமது அலுவலகக் கடமைகளிலே செயல்படுகிறார்கள். எனது விழிகள் எனது ஆசனத்தின் முன் ஆசனத்தில் அவளைத் தேடின. நான் நினைத்தது போல் எனது நினைவுகளுக்கு இனிமை சேர்க்க மோகனா சிங்காரப் பதுமையாய் அமர்ந் திருந்தாள். வழமைபோல் அவளது நினைவுகளே என்னை ஆர்ப்பரித்தன.

ஒரு பெண்ணின் உள் மனதை அறிந்துகொள்வது எத்தனை கடினமானது! அவள் நிஜமாகவே என்னைக் காதலிக் கிறாள்தானா? அல்லது சந்தர்ப்பம் பார்த்து என்னுடன் பழகிக்கொள்கிறாளா? அப்படி யானால் ஏன் அடிக்கடி மனேஜர் தனியாக இருக்கும்போதெல்லாம் அவருடன் காரணம் இல்லாமல் போய் பேசுகிறாள். எனக்கு மனதில் ஏதோ செய்தது.

அவள் அப்படியானவள் அல்ல... உண்மையிலேயே என்னைத்தான் காதலிக்கிறாள் என எனக்குள்ளேயே சமாதானம் சொல்லிக்கொள்கிறேன். நான் பார்க்க... அவளும் என்னைப் பார்க்கிறாள்.

அந்த விழிகள் ஆயிரம் கவிதை பேசின. அவளது அழகில் மனம் சொக்கிப்போகிறது. எனக்கு வண்டு உருவத்தை கடவுள் தந்திருந்தால் என்ன... எனது மனதிலே இருந்து வண்டொன்று இறக்கை விரித்தது. அதிகாலை வேளையிலே மலர்ந்துவிட்ட மலரின் மீது அமர்ந்து எனது மனவண்டு தேன் குடிப்பதுபோல் இருந்தது.

அழகுலீலையாள் புன்னகையால் வலை வீசினாள். புன்னகையை அள்ளி வீச வேண்டும்போல் இருந்தது எனக்கு.

பார்வையாலும்... புன்னகையாலும் எனை இழந்திருந்த எனக்கு முன்னால் ஒஃபீஸ் பியோன் நின்றிருந்தான்.

"என்ன...?"

"மனேஜர்... உடனே உங்கள வரச்சொன்னாரு..." என்றான்.

அவன் பின்னாலேயே மனேஜரின் அலுவலக அறையை அடைந்தேன். மனேஜர் தேநீரை சுவைத்துக்கொண்டிருந்தார். என்னைக் கண்டதும் முன் ஆசனத்தில் அமரும்படி சைகையால் காட்டிக் கொண் டார். நான் அமர்ந்து கொண்டேன். அவர் எதைப்பற்றி என்ன பேசப்போகிறாரோ என நினைத்து மனம் படபடத்தது.

"மிஸ்டர் அரவிந்தன்! உங்களுக்கு புரமோஷன் கிடைச்சிருக்கு..... நீங்க நாளையில இருந்தே இந்த ஒஃபிஸில அஸிஸ்டன்ட் மனேஜராக கடமையாற்றப் போறீங்க... இந்தாங்க உங்கட நியமனக் கடிதம்.."

தலைமை அலுவலகத்திலிருந்து அனுப்பப்பட்ட அந்த பதவியுயர்வுக் கடிதம் கிடைத்ததும் எனக்கு சந்தோஷம் பிடிபட வில்லை. ஓடிப் போய் மோகனாவிடம் கடிதத்தைக் காட்ட வேண்டும் போல் இருந்தது. அதற்குள் அலுவலகம் முடிந்து அவள் வீடு போய்விட்டாள்.

எனது முகத்திலே சீரியஸை பூசிக் கொண்டேன்.

"அரவிந்தன்.... இதெல்லாம் சீரியஸாக எடுத்தால் எப்படி.....? ம்....சரி, நீங்க சொன்ன சொல்ல நான் எப்பவாவது கேட்காம விட்டிருக்கிறனா?... ஓ.கே.. இனிமேல் உங்கட விருப்பம்போலவே நடக்கிறன்..."

எனது கொள்கைகளை அவள் அங்கீகரித்துவிட்டாள் என்பதை நினைக்க எனக்குள்ளேயே உள்ளூர இன்பம் பொங்கியது. நான் அவளிடமிருந்து விடைபெற்றேன்.

மறுநாள் அலுவலகக் கடமைகளிலே ஈடுபட்டுக்கொண்டிருந்தேன். அடிக்கடி மோகனாவையும் அவதானித்துக் கொண்டேன். அவள் முன்னர் போல் இல்லை. என்னுடன் கதைத்துக் கொண்ட தைத் தவிர தனது கடமைகளையே செய்து கொண்டிருந்தாள். மனதிலே திருப்தியாக இருந்தது.

எனக்கு திடீரென காய்ச்சல் வந்ததால் சில தினங்கள் லீவு எடுத்துக்கொண்டேன். மூன்று நாட்களின் பின்னர்தான் அலுவலகம் சென்றேன்.

அன்றும் வழமைபோல் மோகனாவின் ஆசனத்தை நோக்கினேன். அவள் இல்லை. அவளது ஆசனம் மட்டும் வெறுமையாக இருந்து என்னைப் பார்த்து கண்ணடித்தது. மோகனா இன்று லீவு என நினைத்துக் கொண்டேன். பின்னர், எனது அலுவலக அறையினுள் நுழைந்து கொண்டேன். என்னை மின்னல் தாக்கியதுபோல் இருந்தது.

மனேஜருடன் மோகனா சுவாரஸ்யமாக கதைத்துக்கொண்டிருந்தாள். என்னைக் கண்டதும் சமாளித்துக் கொண்டு தனது இடத்திற்குச் சென்றாள். எனக்கு அன்று அலுவலக கடமைகளை சரிவரச் செய்ய முடியவில்லை.

மோகனா என்னை ஏமாற்றுகிறாள் என்ற உணர்வே வதை செய்தது. நான் தடுமாறிப் போய் நின்றேன்.

மனேஜர் அலுவலக விடயமாக வெளியில் சென்றதும் தருணம் பார்த்து அவரது அறையினுள் நுழைந்தேன். ஒவ்வொன்றாக ஆராய்ந்து பார்த்தேன். மோகனா மனேஜருக்கு எழுதிய பல கடிதங்கள் என்னிடம் சிக்கின.

என்மீது அன்பைக் காட்டிய மோகனாவா இப்படி நடந்துகொண்டாள் என்பதை என்னால் நினைத்துப் பார்க்க முடியவில்லை.

'இத்தனை நாளும் மோகனா நல்லவள் போல் எனக்கு முன்னால் நடித்திருக்கிறாள்..' நிகழ்வுகளைமீட்ட போது மனம் வெதும்பியது.

ஆனால், நான் ஒரு முடிவுக்கு வந்தேன். மோகனாவின் வீட்டுக்குச் சென்றேன். அவளுடன் மனம்விட்டுக் கதைத்தேன்.

"மோகனா... நீ என்மேல அன்பு வைச்சிருக்கிறது எனக்கும் தெரியும்... இருந்தும் நீ வேற ஆண்களோட அளவுக் கதிகமாக பேசிப் பழகுறது என்னால ஜீரணிக்க முடியல்ல... அதுவும் நீ மனேஜரோட தனியாக கதைச்சிக்கொண்டு இருக்கிறது எனக்கெண்டா பிடிக்கல்ல..."

எதுவுமே தெரியாதவள், அறியாதவள் போல் மோகனா புன்னகைத்தாள். நான் அவள் என்னை ஏமாற்றலாம்... அவளை நான் ஏமாற்ற நினைக்கவில்லை... திடீர் இடமாற்றம் பெற்று வெளியூருக்குச் சென்றேன்.

அவள் எனது நிஜமான அன்பை மறந்து வாழ்கிறாள். ஆனால், அவள் என் மீது காட்டிய அன்பை மறக்க முடிய வில்லை. அவளது எண்ணங்கள் என்னைத் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன.

(யாவும் கற்பனை)

# சீதன வில்லும் ஒரு சீதையும்....

ஷர்மிளா இஸ்மாயில்

கண்ணாடி முன்னின்று உருவம் பார்த்து அலங்கரித்து நிற்கும் அக்காவை விறைப்பாய் பார்த்துக் கொண்டிருந்தாள் சஹானா.

"அக்கா உன்கிட்ட ஒண்ணு கேக்கலாமா?" அவள் திரும்பவில்லை. பதிலாக "ம்.. என்ன?" என்ற ஒற்றை வரி வந்தது. கண்ணாடியில் தெரிந்த அக்காவின் முகத்தில் சந்தோசம் தெரிந்தது. கண்களில் கல்யாணக் கனவுகள். அது இவளுக்குப் புரிந்தது. "வ..வந்து அக்கா நான் கேட்டா பிறகு கோபிக்கக்கூடாது.." சஹானாவின் குரல் மெலிதாய் ஒலித்தது. "ப்ச்.... சும்மா அறுக்காம சொல்லு.." அலட்சியமாய் அவள் அக்கா. அலட்சியம் அது அவளோடு கூடப்பிறந்தது. சஹானா வாய் திறந்து மெதுவாய்,

"உங்களோடது காதல் கல்யாணம் தானே?" அன்புள்ள அப்பா பாடல் ஸ்டைலில் கேட்டாள். அவளது அக்கா சட்டென திரும்பினாள். ஏன் இதைக் கேட்கிறாய் என்ற வினா கண்களில் தொக்கி நின்றது. ஆனால் வாயைத் திறக்கவில்லையவள். மேலே சொல்லு என்ற விதமாய் பார்த்தாள். "காதல் கல்யாணம்னா சீதனம் வாங்க மாட்டாங்கன்னு சொல்வாங்க. ஆனா...." சஹானாவை அவளது அழகிய அக்கா கையமர்த்தினாள்.

"என் காதலர் என்கிட்ட சீதனமா ஒரு லட்சம் எதிர்பார்க்கிறார். நானும் இதற்கு சம்மதிச்சுட்டேன். எப்பாடுபட்டாவது அப்பாகிட்ட சீதனப்பணத்தை தரச் சொல்லியிருக்கேன். இதெல்லாம் நியாயமா? நீதியான்னு கேட்கப் போறே இல்லியா?" நீண்ட வரிகளில் வசனம் பேசி முடித்தாள். சஹானா மௌனமானாள்.


சீ...என்ன பெண் இவள்! சீதனம் கேட்ட காதலனுக்காக வக்காலத்து வேறு வாங்குறாள். பாவம் அப்பா. அவர் படும் பாடு புரியலியா இவளுக்கு? உண்மைக் காதலாயிருந்தா சீதனம் கேட்டிருப்பானா அந்த எதிர்கால அத்தான்? அவன்தான் கேட்கிறான். இவளுக்கு புத்தி எங்கே போனது? சீதனம் என்கிற சொல் காதில் விழுந்ததுமே கொதித்துப்போய் இரண்டு வார்த்தை கேட்டுவிட்டு 'குட்பை' சொல்லிவிட்டு வந்திருக்க வேண்டுமல்லவா? அதுக்கு நானாயிருக்கணும். அவனை அறைஞ்சிருப்பேன். இவ்வாறு சஹானா யோசித்து மௌனம் சுமந்தாள். 'நான் யோசிப்பது அக்காவுக்குத் தெரிஞ்சால் என்னை அறைவாள்.' நினைத்துக்கொண்டாள். "இங்கபாரு சஹா...அவர் சீதனமா எடுக்கிற காசெல்லாம் பிற்காலத்துல எனக்குத்தானே? அது அவர் கையில இருந்தா என்ன? கல்யாணம் முடிஞ்சாபிறகு நான் வேற அவர் வேற இல்லியே? சுருக்கமாச் சொன்னா என்னோட எதிர்கால வளத்திற்கு அப்பா எனக்கு கட்டாயமா குடுக்க வேண்டியதுதான். காதல்ன்னு சொன்னவுடனே காசு, பணமெல்லாம் வேணாம்னு போறதில்லையே."

சஹானா பேசவில்லை. அவளால் பேசமுடியவில்லை. 'நீயெல்லாம் ஒரு பெண். இதெல்லாம் ஒரு காதல். கத்தரிக்காய்.' ஓவென்று கத்தவேண்டும் போலிருந்தது அவளுக்கு. அப்பாவின் களைத்துப்போன முகம் மனதில் நிழல் படமாய் விழ லேசாய் ஒரு வேதனை அப்பியது. வார்த்தை பேசாது அறையைவிட்டு வெளியேறினாள்.

•••

"மிஸ் சஹானா இந்தாங்க நான் நேற்று வாங்கின கவிதைப் புத்தகம். உங்களுக்குப் பிடிச்ச வைரமுத்துவின் கவிதைகள்." உற்சாகமாய் முகம் மலர புத்தகத்தை நீட்டியவனை நிமிர்ந்து பார்க்கவும் மனம் கசந்தது. என்றாலும் "தேங்ஸ்" என்று ஒற்றை வார்த்தையுதிர்த்து வாங்கி திரும்பி விட்டாள்.

பக்கங்களைப் புரட்டியவள் சிறிது அதிர்ந்து பின் நிறைய யோசித்தாள். கவிதை வரிகளை பென்சிலால் கோடிட்டு அவன்தன் காதலை முழுதுமாய் வெளிப்படுத்தி, சிறியதோர் கடிதத்தில் நேசம் தெரிவித்து, பதில் கேட்டிருந்தான். சஹானா யோசித்தாள். அக்காவின் ஒரு இலட்சம்.... எதிர்கால அத்தான்... அப்பாவின் முகம்... கவிதைப் புத்தகச் சொந்தக்காரனின் உற்சாக முகம்...காதலாவது கத்தரிக்காயாவது...இந்தக் காலத்துல பணத்தின் முன்னால எல்லாமே அவுட். சம்மந்தா சம்மந்தமில்லாது துண்டுத் துண்டுகளாய் நினைவுச் சிதறல்கள்.... எண்ணச் சுழல்கள்.



இராமர்களுக்கு இன்று இரத்தமில்லை... கவிஞர் வைரமுத்து சீதனம் வாங்கும் இளைஞர்களைச் சாடியிருந்தார். சீதன வில்லையுடைக்க சீதைகளைச் சேரும்படி கேட்டிருந்தார். சஹானா மனதிற்குள் சிறிதாய்ச் சிரித்துக்கொண்டாள். என் அக்காவை எந்த ரகத்தில் சேர்ப்பது? காதலித்துவிட்டு சீதனம் கேட்கும் அக்காவின் இராமனை எதில் சேர்ப்பது?

"ஸொரி மிஸ்டர்....(X) உங்க காதலை என்னால ஏத்துக்க முடியல. மன்னிச்சுடுங்க." அவளது புன்னகைகளை இரசித்துக்கிடந்து காதலுக்காய் காத்திருந்த அவன் Mr (X) அதிர்ந்து பின் சோகம் சுமந்தான். "ஏ... ஏன் என்னை உங்களுக்குப் பிடிக்கலையா?" அழுது விடுபவன் போல அவசரமாய்க் கேட்டான்.

அவள் சிறிது புன்னகைத்தாள். பின் உதடு திறந்தாள். "அதெல்லாம் இல்லை. எனக்கு ஏற்கெனவே ஒரு போய்ப்பிரெண்ட் இருக்காரு. இன்னும் ஒரு வருடத்துல மெரி பண்ணலாம்னு இருக்கோம்." மனதார பொய்யைச் சொன்னவள் அவன் முகம் வாடிப்போனதைப் பார்த்து ஒரு கணம்- ஒரே கணம் பரிதாபப்பட்டு பின் மனசைக் கல்லாக்கித் திரும்பிப் போனாள்.

'என்னை மன்னிச்சிடுங்க. உங்களக் காதலிச்சு பின்னால அக்கா மாதிரி நானும் என் அப்பாவ கஷ்டப்படுத்த விரும்பல்ல. நான் உங்கள காதலிக்கலாம். நாளை அது நாலு பேருக்குத் தெரிய வந்தபிறகு... நீங்களும் இல்ல.... உங்க அப்பா அம்மாவாவது சீதனம் கேட்டு... கொடுத்தாத்தான் கல்யாணம்னு சொல்லிட்டா... அக்காமாதிரி நானும் கண்ணமூடிக்கிட்டு அப்பாவப் பிய்ச்செடுக்க முடியாது. என்னால முடியாது. வந்தபிறகு யோசிக்கிறத விட வருமுன் காத்துகிடறது காதலுக்கும் பொருந்தும்.' மானசீகமாய் தன் மனசுக்குள் பேசியபடியே நடந்தாள் அவள்.

(யாவும் கற்பனை)



# பாலைவன ரோஜாக்கள்

ஓட்டமாவடி அறபாத்

நான் போக வேண்டிய பஸ் இன்னும் வரவில்லை. ஆயிரக்கணக்கில் இறக்குமதி செய்தாலும், சனநெரிசலும், பஸ் தட்டுப்பாடும் நமது நாட்டிற்கு தீராத தலையிடிதான். இன்றைய தினசரியை மேலோட்டமாக மேய்ந்து கொண்டிருந்தேன். அருகில் நின்ற ஆசாமி பவ்யமாய் கேட்டார். 'ஓசிப்' பேப்பர் பார்ப்ப தென்றால் ஒரு தனி இன்பம்தான். கொடுத்துவிட்டு நிமிர்ந்தேன். தூரத்தில் அவள் வந்துகொண்டி ருந்தாள். எங்கேயோ பார்த்த மாதிரி, அருகே வந்தவுடன் மனம் துடித்துக்கொண்டு எழும்பியது. கைக்குழந்தையுடன் அலாதியாக நடந்துவந்தாள். பக்கத்தில் உரசிக்கொண்டு வருபவன் கணவனாக இருக்கவேண்டும். என்னருகே வந்தவன் 'ஷாமி புள்ளய பத்திரமா பார்த்துக்க, அப்பிள் கொஞ்சம் எடுத்து வர்ரேன்." சொல்லிவிட்டு நகர்ந்தான். தூருதுருவென்று குழந்தை ஓடித்திரிந்தது. தாவிப்பிடித்து இடுக்கிக்கொண்டாள்.

அவளேதான் குழந்தையை அதட்டியதில் குரல்கூட தெளிவாய் கேட்டது. மூன்று வருஷமாய் என்னிடம் கெஞ்சிக் கிடந்த குரல். மனசின் மடிப்புகளில் சதா ஒளிவீசிய ஈர விழிகள், சற்று ஒல்லியாக மெலிந்திருந்தாள். நெற்றியில் சுருண்டு புரளும் அதே கேசங்கள். சுண்டுவிரலால் ஒதுக்கிவிட்டு, கண்சிமிட்டுவாளே அவளா இவள். குழந்தை என்னவோ குறும்பு செய்திருக்க வேண்டும், நெற்றியில் அழுத்தி முத்தமிட்டு விட்டு சிரித்தாள். நன்றாக கவனித்தேன். புன்னகைக்கும்போது கன்னங்களில் விழும் இரு குழிகள் - அவளேதான்!

கடைசியாக அவளின் வீட்டில்தான் சந்தித்தேன். "ஷாமி எனக்கு படிப்பு முடியப் போகுது. வீட்ல கல்யாணம் பேசுறாங்க. உங்கள நெனச்சா பயமா இருக்கு. ஏன்னா என்னவிட நீங்க அந்தஸ்துல பணத்துல உயர்ந்தவங்க. நம்மட உறவுக்கு உங்க வாப்பா சம்மதிப்பாரா?" என்னெதிரே இருந்தவள் சடாரென எழுந்தாள். முகம் விகாரமாய் இருந்தது. என்னை சுட்டெரித்து விடுவதைப் போல் பார்த்தாள். அவளின் விழிகளை சந்திக்க வலிமையற்ற என் விழிகள் தாழ்ந்துகொண்டன. உஷ்ணத்துண்டுகளாய் வீழ்ந்தன அவள் வார்த்தைகள்.

"நான் மத்தவங்களைப் போல ஏமாத்தி வாழப் போற பெண்ணல்ல. அந்தஸ்து என்றவார்த்தைய நீங்க இனி பேசப்படாது. இந்த கௌரவப் பிரச்சினைதான் ஆதிகாலமா காதலுக்கு தடையா இருக்கு, என்றைக்கும் நீங்க எனக்குத்தான். கோழையா வாழ நெனைக்காம தைரியமா இருங்க." நான் அவளின் கரங்களை ஆதரவாய் பற்றினேன். எனக்கு வீரத்தையும் துணிவையும் ஊட்டியவள் அவள்தான். வாழ்வின் அர்த்தங்களை நான் புரிந்து நடந்ததும் அவளால்தான்.

ஒருநாள் வீட்டிலிருந்து எதையோ எழுதிக் கொண்டிருந்தேன். அவளிடமிருந்து ஒரு துண்டுக் கடிதம் வந்தது. 'உம்மா கல்யாண வீடோன்றுக்கு போய்விட்டா.' வீட்டிற்கு வந்து போகவும். அப்படியே எழுந்து ஓடினேன். கிணற்றடியில் அரிசி கழுவிக்கொண்டிருந்தாள்.

அவளின் தூரத்து தங்கை உறவான ஒருத்தியும்கூட இருந்தாள். நான் நேரே சென்று கிணற்றுக்கட்டில் அமர்ந்துகொண்டேன். தலையை சாய்த்து சிரித்துவிட்டு, தங்கையிடம் கூறினாள், "இவருதான் உன்ட வருங்கால மச்சான். நல்லா பாத்துக்க." எனக்கு நடுக்கமாய் இருந்தது. இவள் எவ்வளவு சுலபமாய் கனவு கண்டு, முடிவெடுக் கிறாள். சேர்ந்து வாழ விடுவார்களா? சில நேரங்களில் என் கரங்களை பிடித்துக் கொண்டு காரணமில்லாமல் அழுது தீர்ப்பாள்.

அந்தக் காலத்தில், எல்லாமே அவள்தான். அவளை பார்ப்பதற்கென்றே எழும்புவேன். உடை மாற்றுவேன். கனவில் வருவாள் என்ற நம்பிக்கையில் உறங்கிப் போவேன். திடீரென அவளுக்கு என்ன நடந்ததோ? ஒரு கடிதம் அனுப்பி இருந்தாள். வழக்கமான சிரிப்புடன் பிரித்தேன். "என்னை மறந்துவிடுங்கள். வீட்டுக்கும் வரவேண்டாம்." துடித்தேன். துவண்டேன். நிலவின் கால்களை கட்டிப்பிடித்து பௌர்ண மிகளில் புலம்பினேன். ஒரு பௌர்ணமி இரவில் தான் அவளை சந்தித்தேன். முதன் முதலாக இருவரும் அறிமுகமாகி காலவோட்டத்தில் காதலர்களாய் முடிசூடிக்கொண்டோம்.

என்னைக் கண்டால் போதும். தலையை குனிந்து ஒதுங்கிப் போவாள். ஒரு கவிதை எழுதினேன்.

"உன்
முகச்சூரியன்
கவிழ்ந்து போவதால்
என் இரவுகள் கறுத்துப் போவதில்லை.
ஏனெனில்-
உன்-ஞாபக வெளிச்சத்தில்தான்
நான்-
கனவுகள் பின்னிக் கொண்டிருக்கிறேன்.

கவிதையை பத்திரிகையில் படித்துவிட்டு, நண்பியிடம் கூறியனுப்பினாள். "இனி என்னைப் பற்றி எழுதவேண்டாம்" என்று பேனாவை பிடித்துவிட்டால் அவளாக வரும்போது, ஞாபகங்களை எப்படி துடைத்தெறியலாம்? 'நினை' என்றவுடன் நினைக்க வேண்டும், 'மற' என்றவுடன் மறக்கவேண்டும். மனம் என்ன சத்திரமா? தங்க வைப்பதற்கும், துரத்துவதற்கும்? என்னால் முடியவில்லை. முதற்காதல் கல்வெட்டு மாதிரி, மனசில் பதிய வைத்த அந்த பசுமையான நினைவுகளை அறுத்தெறிந்து, உள் மனசால் சிரிக்க முடியவில்லை.

சில நேரம் அவளுக்கு விருப்பமானது என்னெதிரே வரும்போது சம்பவங்கள் தொடராக வந்து தொந்தரவு செய்யும். ஊரில் இருக்க பிடிக்காமல் கண்டிக்கு மாற்றலாகிவந்து விட்டேன். "தம்பி இந்தாங்க பேப்பர்." நினைவுகளில் இருந்து விடுபட்டு நிமிர்ந்து பார்த்தேன். அவள் என்னைத் தான் உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தாள். விழிகள் கலங்கி இருந்தன. நானும் விழிகளை துடைத்துக்கொண்டேன். இனி மேலும் என்னால் தாங்கமுடியாது. அவளுடன் பேசாவிட்டால் நெஞ்சு வெடித்துவிடும்போல் இருந்தது. "ஷாமிலா சுகமா என்றேன்." "ஓம்" ஒற்றையாய் பதில் சொன்னாள். "நீங்க எப்படி இருக்கிறீங்க?" அவள்தான் கேட்டாள். குரல் தளதளத்தது. "ஏதோ இருக்கன். இப்ப எங்க போறீங்க?" நான் கேட்டேன். "அவரு குருநாகல்தான். மாமி ஊட்டுக்குப் போறம்." இடுப்பில் இருந்த குழந்தை அடம்பிடிக்க இறக்கி விட்டாள்.

"உங்களுக்கு இப்ப எத்தனை புள்ளயள்." தயங்கி தயங்கி கேட்டாள். 'இன்னும் இல்ல, உன்ன நினைச்சுக்கொண்டு திருமணம் முடிக்க மனம் பக்குவப்படலியே ஷாமிலா' உதடுவரை வந்ததை அடக்கிக்கொண்டேன். அவளின் தந்தை பயமுறுத்தித்தான் அப்படி மறக்கும்படி எனக்கு எழுதினாளாம். இன்னும் எதையோ பேசினாள் சோகமாய் பெருமூச்சுவிட்டாள். "ஷாமி நீங்க சந்தோஷமா இருக்கீங்களா?" "ஓ. அவருக்கும் பேங்க்ல வேல. எனக்கு எந்தக் குறையுமில்ல, சந்தோஷமா இருக்கன்." சொல்லும்போதே நா தழதழத்தது. "அதோ அவரு வாறாரு. நான் போறன் ஷாமிளா."

"அடி மூதேவி! புள்ளய இந்த நெரிசலுக்குள் இறக்கிவிட்டு என்னடி கண்டவனோட பேசினாய்?" அவளின் 'சந்தோஷம்' என்ற வார்த்தை மீண்டும் என் காதுகளில் தீப்பிழம்பாய் கொதித்தது. அவன் இன்னும் அவளை ஏசிக்கொண்டிருந்தான். நான் பஸ்ஸில் ஏறி அவளைப் பார்த்தேன். முந்தானையால் விழி துடைத்து என்னை பார்த்துக்கொண்டே சென்றாள்.

(யாவும் கற்பனை)

# இலக்கிய நயம்

# ஆசையும்- வெள்ளமாகும்

**தருவது – ரசிகன்**

**ப**கை கண்டு அஞ்சுவதில்லை. பாய்ந்து வரும் படை கண்டும் தொடை நடுங்குவதில்லை. போர்க் களத்தில் புயலாய் மாறும் காளை அவன். ரகுதேவ், எதிரிகள் உச்சரிக்கவே தயங்கும் பெயர். திடம் கொண்டவன்.

ஆனால்-இப்போது மணி மண்டபத்தின் மாடத்தில், கொஞ்சு மொழியாள், கொவ்வை இதழாள் மோகனாவின் இதயத்தை வெல்லும் வேல் விழிகள் முன் எதிர்க்கும் சக்தியில்லாமல் பணிந்து கிடந்தான்.

தன் நிலை எண்ணி மெல்ல நகைத்தான் ரகுதேவ்.

மான் இனத்தில் மலர்ந்தவளோ என்று மனம் நினைக்கும் அழகுடையாள் மோகனா. தன் தேன் சொரியும் இதழ்களால் கேள்வி வீசினாள்.

"ஏன் நகைக்கிறீர்கள்?"

"என் நிலையை நினைத்து."

"ஏன்? உங்கள் நிலைக்கு என்னவாம்?"

இதழ்கள் அசைந்து கேட்டன.

விழிகளோ அவன் வசீகர தோற்றத்தை இரசித்துக் கொண்டிருந்தன. பரந்த மார்பும் அங்கே புல்லாய் வளர்ந்திருந்த ரோமங்களும் விழிகளை வெட்கப்பட வைக்க, பார்வையை தாழ்த்திக் கொண்டாள்.

"படு களத்தில் உயிர் குடிக்க பாய்ந்து வரும் படை கண்டு கூட நான் பயந்தது கிடையாது. பதுங்கியதும் கிடையாது. சிரம் கொய்ய ஓங்கப்படும் வாள்முனை முன் கூட நான் ஒடுங்கிப் போய் நடுங்கியது கிடையாது."

ரகுதேவ் சொல்ல மோகனா கொவ்வை இதழ்கள் குவித்து 'உச்' கொட்டினாள்.

"பொய் என்கிறாயா மோகனா?"

"இல்லையில்லை. தற்புகழ்ச்சி கூடாது. அடுத்தவர் புகழ்ந்தால் அது பெருமை."

இப்போது ரகுதேவ் 'உச்' கொட்டினான்.

"உண்மையைச் சொன்னால் சிலருக்கு பிடிப்பதில்லை."

"யார் சொன்னது பிடிக்காது என்று? செவ்விதழ்களில் இருந்து தேன் சொரியும் என்றுதான் கேள்விப்பட்டிருக்கிறேன். அது உண்மை என்று உன் இதழ்கள் ஒத்துக் கொள்ளவும் வைத்துவிட்டன. ஆனால்..."

அவன் சொல்ல மோகனாவின் கன்னங்கள் இரண்டும் வெட்கத்தில் சிவந்து,



அதுவே மேலும் அழகாகி, பக்கத்தில் வா என்று ரகுதேவின் உதடுகளுக்கு அழைப்பு விடுத்தன.

வெட்கத்தை மறைத்துக்கொள்ள வினாவை ஒரு கவசமாக்கி,

"என்ன....ஆனால்?"

"இப்போது உன் இதழ்களில் கொட்டியவை தத்துவ முத்துக்கள். அப்பப்பா... போதை தரும் இதழ்களில் இருந்து மேதையான உள்ளம் உதிர்த்த தத்துவங்கள்..."

"போதும்...உங்கள் புகழாரம். இந்தக் கேலிதானே வேண்டாம் என்கிறது."

முகம் திருப்பினாள். பின் மீண்டும் அவன் புறம் திரும்பிக் கேட்டாள்,

"ஏன் நகைத்தீர்கள்? அதைச் சொல்லுங்கள் முதலில்."

"பிறிதொரு நாள் சொல்கிறேன்."

"இல்லையில்லை. இப்போதே சொல்ல வேண்டும். இல்லாவிட்டால் நான்..."

"இல்லாவிட்டால்?"

"நான் போய்விடுவேன்."

"யார் தடுத்தார்கள்? போவதுதானே."

முகத்தில் கோபம் காட்டினாள். அவன் முகத்தை விழிகளால் நோக்கியபடியே,

"உண்மையாகப் போய்விடுவேன்."

ரகுதேவ் முகத்தில் சலனம் காட்டாமல்,

"நல்லது. சென்று வா."

எழ முயல, கரம் நீட்டி மோகனாவின் கரம் தொட்டு இழுத்துவிட, மோகனா அவன் மீது சாய்ந்தாள்.

சாய்ந்த போது ரகுதேவ் மீது மோகனாவின் மலர்க் கணைகள் தொடுத்த தாக்குதலால் ரகுதேவ் தன்னை மறந்தான். யானைப் பலம் காட்டி மோகனாவை தன்னோடு இறுக்கமாக்க, இன்ப வேதனையில் அழகுச் சிலை சிணுங்கியது.

"மூச்சு நின்றுவிடப் போகிறது."

என்றாள் சிணுங்கியபடி.

"என் மூச்சே நீதானே மோகனா."

சொல்லியபடியே கழுத்தில் முகம் புதைத்து பற்களால் மெல்லக் கடித்தான். பின் முகம் உயர்த்தி அவள் இதழ்களை தன் உதடுகளால் இறுக மூடினான்.

மோகனா விழிகள் மூடி. உள்ளே ஊற்றெடுக்கும் சுகம் உணர்ந்தாள்.

இதழ்கள் கலந்தன. ஒருடலாய் உடல்கள் சங்கமிக்க சுற்றம் மறந்து சுக உலகில் இன்பச் சிறகுகள் கட்டி மேலே உயர்ந்தனர்.

"மோகனா"

என்றான் கிறக்கமான குரலில் ரகுதேவ்.

"என்ன..."

என்றாள் தன்னை தொலைத்துக் கொண்டிருக்கும் பலவீனமான குரலில்.

"தோற்றுக் கொண்டே இருக்கிறேன் உன்னிடம் மட்டும்."

"யார் தோற்றுப் போகச்சொல்வது?"

"உன் விழிகள். உன் கனியிதழ்கள். இடை தாங்கி நிற்கும் இரு கனிகள்..."

"போதும். போதும்...."

வெட்கத்தில் சிவந்த முகம் கவிழ, செவ்விதழ்களை மீண்டும் எடுத்துக் கொண்டன ரகுதேவின் உதடுகள். பொல்லாத உதடுகள் மோகனாவின் இதழ்களை பிரித்து நுனி நாவால் கோலம் போட்டு, உள்ளே நாவிரண்டும் கலந்தன. வீணையில் எழும் இனிய நாதமாய் மனதிலே எழுந்தன இனிய உணர்வுகள்.

ஆற்று வெள்ளமாய் உணர்வுகள் உள்ளே பொங்க மோகனா பொய்யாகக்கூட அவன் செய்யும் இன்ப வேதனையை தடுக்க முடியாமல் தன்னைக் கொடுத்தாள்.

வெட்கம் ஒரு பக்கமாய் ஒதுங்கிக் கொண்டது. ஆசை என்ற வெள்ளத்தில் நாணம் அள்ளுப்பட்டுப் போனது.

மணி மண்டபத்து மாடம் மன்மதனின் அரங்கமாய் மாறிப்போனது. இப்போது நாம் இதற்கு ஒரு விளக்கம் கேட்க, திருவள்ளுவரை நாடிப் போகலாம். அடடாவோ, தயாராக இருக்கிறது குறள்.

**காமக் கடும்புன லுய்க்குமே நாணொடு**
**நல்லாண்மை யென்னும் புணை.**

**குறள்– 1134 அதிகாரம்–114.**

## குறுக்கெழுத்துப் போட்டி இல–40

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | ■ |
| | ■ | 2 | 3 | | ■ | 4 |
| | 5 | | | ■ | 6 | |
| ■ | | | | 7 | ■ | |
| 8 | | ■ | ■ | 9 | | |
| | ■ | 10 | | | | ■ |
| 11 | | | ■ | 12 | | |

**இடமிருந்து வலம்**

1. செலுத்தாமல் இருப்பது சட்டப்படி குற்றமாகும்.
2. ஒரு உலோகம்.
5. வேலியும் இந்தப் பணியைச் செய்யும்.
6. பஞ்சிலிருந்தும் எடுக்கலாம்.
9. படை தங்குமிடம்.
10. நல்லவர்கள் மனதிலும் இது உண்டு என்பார்கள்.
11. துரோணர் ஏகலைவனிடம் கேட்டது.
12. கீதத்தின் இன்னொரு பெயர் (மாறியிருக்கிறது)

**மேலிருந்து கீழ்**

1. மலரின் காதலன்.
2. சாண்டில்யன் இது பல படைத்துள்ளார்.
3. பொன்னியின் செல்வன் கதாசிரியர்.
4. இறுதித் தூக்கம் இங்குதான்.
5. இது தங்கத்தில் இருந்தால் மதிப்புண்டு.
7. அச்சம் கொள்ள வைக்கும்.
8. இதற்காக அடிபட்டுக்கொள்வோரும் இருக்கிறார்கள்.

**இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 12.03.1994க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:**

**குறுக்கெழுத்துப் போட்டி இல-40**
**தினமுரசு வாரமலர்**
**88/14, சோமாதேவி பிளேஸ்,**
**கிருலப்பனை**
**கொழும்பு -05.**

**சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசளிக்கப்படும்.**

## குறுக்கெழுத்துப் போட்டி இல-38க்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 நி | மி | ட | ம் | ■ | 2 பு | 3 கை |
| ழ | 4 க | ரு | வா | டு | ■ | த் |
| ல் | ■ | 5 க | 6 பி | ல் | ■ | த. |
| ■ | 7 க | ண் | ண | கி | ■ | டி |
| 8 பூ | ச | ணி | க் | கா | ய் | ■ |
| ங் | ■ | ய | கு | ■ | 9 பா | சி |
| 10 கா | ய | ம் | ■ | 11 சூ | டு | ■ |

**குறுக்கெழுத்துப் போட்டி இல.38இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்**

1. எஸ். கணேஷ் கண்டி.
2. எஸ். சஹிலன் சிலாபம்.
3. வி. ராஜ்குமார் கொழும்பு–5.
4. ஐ. ரிஸ்வானா டெல்வத்த.
5. கே. அப்துல் சலாம் கல்முனை.
6. ரி. ஜலீல் கொழும்பு–11.
7. ஏ. அமுதா நுவரெலியா.
8. எஸ். ஏ. பாஹிர் வவுனியா.
9. ஆர். சுமதி நீர்கொழும்பு.
10. றிபாயா இஸ்மாயில் காத்தான்குடி–5.

**இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.**

---

டியர் சிந்தியா, உங்களுக்கு தேர்தல் பற்றிய கனவு வருவதுண்டா?

**க.மதியழகன்–இந்துகலை மேல் பிரிவு.**

ஏதோ என் நல்ல காலம். கெட்ட கனவுகள் வருவதில்லை.

•

இலங்கையில் தற்போது நிலவிவரும் இனப்பிரச்சனைக்கு சமஷ்டி அரசியல் முறையில் தீர்வு காணலாம் தானே?

**க.றொபட் என்டன்–பசறை.**

காணலாம். காணலாம். சும்மா போ தம்பி. இருப்பது என்ன பிரச்சனை என்பதிலேயே இப்போது பிரச்சனை வந்துவிட்டது. முதலில் அதற்கு ஒரு முடிவு வரட்டும்.

வாழ்வில் மாறி மாறி வரும் இன்ப துன்பத்தைப் பற்றி உங்கள் கருத்தென்ன?

**செல்வி. ஹிதாயாஹுஸைன் தியத்தலாவ.**

இரவு பகலும் இயற்கையின் நியதி. இந்த இரண்டில் ஒன்று மட்டுமே எப்போதும் இருந்தால் சலிப்பு வந்துவிடும் அல்லவா? துன்பம் வரும் போதுதானே இன்பத்தின் பெறுமதி புரிகிறது. எனவே இரண்டும் வாழ்க்கைக்கு தேவைதானே.

•

இலங்கைக்கு ஐ.நா. பாதுகாப்பு படையை வரவழைத்தால் எப்படியிருக்கும்?

**கே.சசீந்திரன்–மட்டுநகர்.**

அது அழைக்கப்பட்ட நாடுகளில் எல்லாம் அமைதி திரும்பிவிட்டதா என்ன? அதனால் நம்பிக்கை கொள்ள இடமில்லை.

•

---

(19ம் பக்க மகாபாரதம் தொடர்ச்சி)

கீழே இறங்கும் காலகட்டத்தில், அவர்கள் மேலே ஏறும்போது சேர்த்து வைத்த அரிய சிறப்புகள் அனைத்தும் சிதைந்து நொறுங்கிப் போய்விடும். இத்தகைய சாபக் கேடுகளின்போது அவர்களின் கையில் அகப்பட்டதைப் பற்றிக்கொண்டு காப்பாற்ற முற்படுகின்றனர். அரசியலும் இதிலிருந்து விதிவிலக்கல்ல. பாரத வர்ஷத்தின் சீர்குலைவுக்கான கால கட்டம் இது. மனிதனால் ஏணிகளை உருவாக்க முடியும் என்பதனால் வருந்த வேண்டியதில்லை. அமுதத்தினைப் பெற சமுத்திரத்தைக் கடைய வேண்டும். அப்போது முதலில் விஷமே வெளிப்படும். விஷத்தையாராவது உண்டேயாக வேண்டும். மகனே! நீ அந்த விஷத்தை உட்கொள்ளவே பிறந்தவன். இதுதான் உன் கடமை! கலங்காதே!

**கங்கை மறைகிறாள்.**

**–காட்சி மாற்றம்–**

**கிருபாச்சாரியாரின் குருகுலம்**

**துரியோதனன் முதலான மாணவர்களுக்கு போதிக்கிறார் குரு.**

**கிருபா:** அரசனின் கடமைகளிலிருந்து மாறுபட்டது அரசியல். அரசருக்குரிய கடமைகள் என்னும் சுடரை அணைத்து விட்டு அரசியலில் பிரவேசிக்கும் மன்னன் வழி தவறுவது நிச்சயம். சுயநலம், அகங்காரம் என்னும் மாயையில் அவன் சிக்குகிறான். சுயநலம் மனிதனிடத்தில் பொதிந்துள்ள கடவுட் தன்மையினை தன் கொடிய விஷக்கொடுக்குகளால் கொட்டிவிடும். ஆகவே மன்னன் தன் கடமைகளில் செலுத்த வேண்டிய கவனத்தினை அரசியல்பால் செலுத்த வேண்டாம். முதலில் அரசனின் கடமைகள் என்ன என்பதைப்பார்ப்போம். அரசனுக்குரிய தர்மம் அல்லது கடமை எனும்போது அங்கே ஆசாபாசங்கள் அணுகலாகாது என்பதை முதலில் புரிந்துகொள்ளவேண்டும். ஏனெனில் ஆசைக்கு கண்ணில்லை. தர்மம் அல்லது கடமை பவித்திரமான ஒளியைப் போன்றது. துரியோதனா! இதன் அர்த்தம் என்ன? (சமஸ்கிருத சுலோகம் ஒன்றைக் கூறுகிறார்)

**துரியோ:** தர்மத்தின் பாதையில் செல்வதற்கு துணை அவசியமில்லை. எவருடைய உதவியும் தேவையில்லை.

**கிருபா:** ஆசை அரசர்களின் விரோதி என்பதை மறந்துவிடாதே! அரண்மனையிலுள்ள பொக்கிஷங்கள் அத்தனைக்கும் அரசனே உரிமையாளன் என்று கருதலாகாது. அத்தனை செல்வத்துக்கும் உரித்துடையவர்களின் பிரதிநிதியே மன்னவன். ஆசை அரசனை மிகவும் சிறியவனாக்கிவிடும். எனது தந்தை, எனது மகன், எனது நண்பர்கள், எனது எதிரிகள் என்றெல்லாம் கருத ஆரம்பித்தால் 'எனது' என்ற சிறைக்குள் அகப்படுவதைத் தவிர, தப்புவதற்கு மார்க்கமில்லை. ஆசாபாசமெனும் சிறைக்கூண்டில் புகுந்த மன்னன், மக்கள் அனைவருக்கும் உரியவனாக முடியாது.

••••

**விதுரர் பாண்டு புத்திரர்களுடன் குருகுலம் வருகிறார்.**

**கிருபாச்சாரியாருக்கு வணக்கம் செலுத்துகிறார்.**

**விதுரர்:** குரு பெருமானே! எனது தாழ்மையான வணக்கம்.

**கிருபா:** நீடூழி வாழ்க!

**விதுர:** பெரிய தந்தையார், மகாராஜா பாண்டுவின் புத்திரர்களை தங்கள் சேவைக்கு அனுப்பி வைத்துள்ளார்.

**துரியோ:** அஸ்தினாபுரிக்கு ஒரேயொரு அரசர்தான் - திருதராஷ்டிர மாமன்னர்! அவருடைய மகன் நானேதான்!

**பீமன்:** அவனைப்பிடித்து உதைக்கட்டுமா?

**யுதிஷ்:** வேண்டாம்-பொறு!

**யுதிஷ்டிரன் கிருபாச்சாரியாரை வணங்குகிறான்.**

**யுதிஷ்:** என் பெயர் யுதிஷ்டிரன். சிரேஷ்டரான திருதராட்டின மாமன்னரின் தம்பியின் புதல்வன். தங்கள் தாழ்பணிகிறேன்.

**கிருபா:** நீடூழி வாழ்க! பேரறிவாற்றல் பெற்ற அறிஞனாக விளங்குவாய்! குருகுலத்துக்கு சகோதரர்களாகிய உங்களை வரவேற்கிறேன். இங்கே வாரும் பிள்ளாய்- என் அருகில் அமர்க...

**துரியோ:** நான்தான் அங்கே இருப்பேன்.

**கிருபா:** இல்லை. உனக்குரிய இடத்தில்தான் நீ அமரவேண்டும். குருகுல இளவரசர்களில் யுதிஷ்டிரனே சிரேஷ்டன். ஆகவே இவன் இங்கேதான் இருக்க வேண்டும். இந்த இடம் இவனுக்காகவே இன்றுவரை காலியாக வைக்கப்பட்டிருந்தது.

••••

அரச தூதுவன் குதிரையில் வந்து இறங்கி கிருபாச்சாரியாரிடம் வருகிறான்.

**தூதன்:** வணக்கம் குரு சிரேஷ்டரே! மகாராஜா தங்களை அழைத்து வரும்படி என்னை அனுப்பியுள்ளார்.

**கிருபா:** அப்படியா? யுதிஷ்டிரா! உனது சகோதரர்களையும் ஏனைய மாணவர்களையும் உன்னுடைய பாதுகாப்பில் விட்டுச் செல்கிறேன். பார்த்துக்கொள். விதுரரே புறப்படலாமா...?

**பின்னணிப் பாடல்:**

**நெறியின் நிறைவும் பரந்த கொள்கையும்**
**சிறந்த கல்வி அடக்கமும் பணிவுமே**
**பரந்த அறிவெனும் வழியின் திறவு கோல்!**
**செறிந்த பேராற்றலைப் பெறுபவன் எவனோ**
**அவனே அருளுறை இதயக்காவலன்!**
**அன்று கற்றவை அனுபவ முத்திரை**
**இன்று நமது பாதையின் ஒளிச்சுடர்**
**நாளை தோன்றும் புதிய யுகத்தின்**
**வேளையில் எமக்குப் புத்துயிர் ஊட்டும்.**

புத்தொளிச்சுடரே விரைந்து வருக!
புதிய ஒளியே வருக! வருக!

இன்றைய நிகழ்ச்சியின் சிறப்பு அம்சங்களின் தொகுப்புடன் காட்சி முடிகிறது.

–தொடர்ந்து வரும்–

எம்.ரி.வி. தொலைக்காட்சி நிறுவனத்தின் உரிமை பெற்று மகாபாரத கதை வசனம் வெளியிடப்படுகிறது.

# மகாபாரதம் அங்கம் 19

**இவ்வாரம் (06.03.94 ஞாயிறு மாலை 7.00மணி) எம்.ரி.வியில் மகாபாரதம் தொடரைப் பார்க்கும் உங்கள் கரத்தில் முரசும் இருக்கட்டும்.**

அழகு தமிழில் தருவது- இராஜகுமாரன்

காலத்தின் குரல்: அஸ்தினாபுரத்தின் சொத்துக்களான பாண்டு புத்திரர்களை மதுராபுரிக்கு அழைத்துச் செல்ல முடியாத ஏமாற்றத்தோடு வாசுதேவர் திரும்புகிறார்.

மாமுனிவர் வேதவியாசர் அஸ்தினாபுர எதிர்காலத்தை தனது ஞானதிருஷ்டியால் உணர்கிறார். நடைபெறப்போகும் சம்பவங்களை தன் தாயார் சத்தியவதி தாங்கமாட்டாள் என்று அறிந்து அவளை அழைத்துச் செல்ல வருகிறார்.

-காட்சி துவக்கம்-

அஸ்தினாபுரம் அரண்மனை. வேதவியாசர் வருகிறார்.

வேதவியாசர்: அம்மா! எனக்காக தாங்கள் எழுந்திருப்பதா?

சத்தியவதி: மைந்தன் என்பதற்காகவல்ல, மாமுனிவர் என்பதற்காகவே இந்த மரியாதை.

வியா: ஆண்டவன்கூட தன் அன்னையின் பாதக்கமலங்களில் பணிந்து வணங்குவதுண்டு.

சத்தியவதி: மைந்தன் இன்று மாதாவை நினைத்த காரணம்...?

வியா: மைந்தன் மாதாவுக்கு ஆற்றவேண்டிய கடமை! நதி போன்றது காலம். அதிலே ஓடம்போல் தத்தளிக்கிறது 'உடல்' இலக்கினை அடையத்துடிக்கிறது உயிர்!

சத்தியவதி: புரியவில்லையே புத்திரனே!

வியா: போதும் தாயே! உலக மாயையில் சிக்கி நீங்கள் துயரப்படுவது! விடுபட வேண்டும் இந்த மாயையில் இருந்து.

சத்தியவதி: இங்கிருந்து விடுபட்டு போவது எங்கே புத்திரனே!

வியா: அஸ்தினாபுரத்தில் முடிந்துவிட்டது உங்கள் பணி. அம்பாவையும், அம்பாலிகாவையும் அழைத்துக் கொண்டு புறப்படுங்கள். வனத்திற்கு வாருங்கள் தாயே! தவமேற்கும் பாதை தங்களுக்காக திறந்திருக்கிறது.

சத்தியவதி: உன்னிடம் என்றுமில்லாக் கடுமை இன்றுமட்டும் ஏன் மகனே?

வியா: பார்வையிழந்தவன் திருதராட்டினன். அவனால் மட்டுமல்ல, தங்களால்கூட விதியின் கை எழுதிய வரிகளை விழிகளால் பார்க்கமுடியாது. விதிப்படி இங்கு விளையப்போவதை தாங்கும் சக்தி தங்களுக்கில்லை தாயே!

சத்திய: விளையப்போவது என்ன மகனே?

வியாச: நாளைய நிகழ்வை இன்று அறிவதால் விளைவது இன்பமல்ல. துன்பம்! அறிய வேண்டாம் தாங்கள்! தங்களை அழைத்துச் செல்லவே வந்திருக்கிறேன் இங்கே!

-காட்சி மாற்றம்-

திருதராட்டினரும் காந்தாரியும் அரண்மனையில் உரையாடுதல்.

திருத: அரண்மனைக்கு வந்தாராமே வியாச மாமுனிவர்!

காந்: ஆம்! தன் அன்னையை காண்பதற்காக. சத்தியவதி அம்பிகா, அம்பாலிகா ஆகியோரோடு வேதவியாசர் வருகிறார்.

திருத: தாங்கள் ஏன் இங்கு வரவேண்டும் தாயே? ஆணையிட்டிருந்தால் தங்கள் இடத்திற்கு நான் வந்திருப்பேனே?

சத்தி: வாழ்க நீடூழி...! (காந்தாரியிடம்) கணவருடன் வாழ்க நீடூழி!

காந்: தாயே! என்ன இது? வெறும் பாதங்களுடனா தாங்கள் நடந்து வந்தீர்கள்?

சத்தி: ஆம் மகளே! அஸ்தினாபுரத்தில் என் பணி முடிந்துவிட்டது. வனம் சென்று தவம் செய்யும்படி அழைத்திருக்கிறார் வேதவியாசர்.

திருத: அப்படியானால் ஏதாவது குற்றம் புரிந்தோமோ நாங்கள்?

வியாச: இன்றுவரை அப்படி எதுவும் நடக்கவில்லை.

திருத: மாமுனிவர் வேதவியாசர் பாதம் இங்கு பட்டது எங்கள் பாக்கியம்.

வியா: காலடி ஓசை கேட்டு வருபவர் யார் என்று அடையாளம் காண்பதுபோல், நாளை நடைபெறும் சம்பவங்களிலும் அவதானமாய் இருந்துகொள்.

திருத: நான் துர்ப்பாக்கியசாலி. எதையும் என்னால் கண்டுகொள்ள முடியவில்லையே!

வியாச: விதியை நொந்து பயனில்லை மகனே! யாவும் விதி என்று நினைத்திருந்துவிட்டால் செயலுக்கே இடமில்லாமல் போய்விடும். மனிதன் செய்யும் செயல்களுக்கு மனிதனே பொறுப்பு. தன் பார்வையினை தானே மறைத்துக்கொண்டாள் காந்தாரி! அதுபோல் உன் ஆத்மாவின் பார்வையினை நீயும் மறைத்துவிடாதே! துரியோதனன் உனக்கு மகன். ஆனால் யுதிஷ்டிரன் குருகுல வம்சத்தின் தலைமகன். அதை மட்டும் மறந்துவிடாதே!

திருத: மாமுனிவரே! தங்களோடு என்னையும் அழைத்துச் செல்லுங்கள்.

வியாச: வாழ்க்கையில் இருந்து பயந்து ஓடுதல் துறவறமாகாது மகனே! இல்வாழ்க்கையிலும் துறவியாக வாழமுடியும். சுயநலத்தை துறந்துவிட்டால் போதும்.

திரத: குடும்பஸ்தன் எப்படிப் பூண முடியும் துறவு?

வியாச: முடியும். உனக்கு சொந்தமில்லாதவை மீது பற்று வைக்காதே. அம்மா! நாம் புறப்படலாம் அல்லவா?

சத்தி: மகனே திருதராட்டிரா! மகன் பாண்டுவின் புத்திரர்களை உன்னிடம் விட்டுச் செல்கிறேன். உன் தம்பி உன்னிடம் நம்பிக்கையோடு தந்தவற்றின் வாரிசுகள் அவர்கள்! தங்கள் உரிமைகளை அவர்கள் கேட்டுப் பெறும் நிலைக்கு இடம் வைக்காதே! (காந்தாரியிடம்) அஸ்தினாபுரியை திருதராட்டினனிடம் ஒப்படைத்துச் செல்கிறேன். அவனுக்கு நீ பக்கபலமாய் இரு! (திருதராட்டினனிடம்) நீ இங்கேயே இரு. காந்தாரி வாயில்வரை வரட்டும் எங்களுடன்.

- அனைவரும் பறப்படுதல்
- வாயிற் காவலர்கள் மரியாதை செலுத்துகின்றனர்.

சத்தி: காந்தாரி! ஒரு இல்லதரசியின் எல்லை இந்த வாயில் வரைதான். குந்தியையும் மைந்தர்களையும் கவனித்துக்கொள்.

- காந்தாரியை அணைத்து விடைபெறுகிறார் சத்தியவதி.
- வாயிற் கதவை வியாச முனிவர் திறக்க பீஷ்மர் அங்கே நிற்கிறார்.

சத்தி: பீஷ்மா...! மகனே விடைபெறட்டுமா?

பீஷ்ம: அம்மா! நானும் வருகிறேனே! ஆணையிடுங்கள்.

சத்தி: குருவம்சத்தின் அரியணையுடன் பிணைக்கப்பட்டவன் நீ. எவ்வாறு என்னுடன் அழைத்துச் செல்ல முடியும்? உனது துறவும் தபமும் இதுதானே!

பீஷ்ம: இப்பொழுது அரியணையும் நாடும் பல வழிகளிலும் பாதுகாப்புடன் தானே உள்ளன அம்மா!

வியாச: கங்கா புத்திரனே! எதிர்காலத்தை ஊடுருவிப் பார்த்தாயா? நீ விரும்பிய போது தான் உன்னை யமதர்மன் அணுக முடியும் என்ற வரம்பெற்றவனல்லவா நீ! உயிருடனுள்ளவரை அஸ்தினாபுரத்துடனேயே பிணைக்கப்பட்டிருப்பாய் பிரகஸ்பதியின் சீடனே!

அம்மா புறப்படலாம்...

சத்தி: குடும்பத்தவர்கள் அனைவரையும் கவனிக்கவேண்டியது உன் பொறுப்பு. அவர்களில் மூத்தவன் நீ. இறைவன் உனக்கு நீண்ட ஆயுளை அளிக்கட்டும்!

வியாச: உன் புகழ் ஓங்கட்டும்!

-காட்சி மாற்றம்-

திருதராட்டினன் அரண்மனை- கிரீடத்தை கரங்களால் அணைத்தபடி திருதராட்டினர் அமர்ந்துள்ளார். காந்தாரி வருகிறார்.

திருத: வா காந்தாரி!

காந்தா: அமைதியற்றிருக்கிறீர்களே பிரபு!

திருத: இந்த கிரீடம் மீண்டும் கை நழுவப் பார்க்கிறதே காந்தாரி?

காந்தா: இந்தக் கிரீடம் மட்டுமே ஒருவருடைய இலட்சியமாக அமைந்துவிடக் கூடாது பிரபு!

திருத: எனது வேதனையைப் புரிந்துகொள்ள உன்னால் முடியாது காந்தாரி! விலைமதிப்பற்ற தன் சொத்தைப் பறிகொடுத்தவனுக்குத்தான் அந்த வேதனை புரியும். குருவம்சத்தின் தலைமகன் நான் என்பதை என்னால் மறக்கமுடியாதிருக்கிறதே! அது சரி குந்தியைப் போய்ப் பார்த்தாயா?

காந்: தங்களிடம் உத்தரவு பெற்றுப் போகத்தான் வந்தேன் பிரபு!

திருத: இந்த அரண்மனையின் மகாராணி நீ! உனக்கு உத்தரவு எதற்கு? குந்தியின் சௌகரியங்களைக் கவனி. எனது தம்பியின் பிள்ளைகள் ஐவரும் உன் பொறுப்பிலேயே உள்ளனர். துரியோதனனுக்கு அடுத்தபடியாக இரண்டாந்தரத்தில் வைத்துக் கணிப்பதாக அவர்கள் கருதிவிடாதபடி பார்த்துக்கொள்.

காந்: அவர்கள் ஏன் அவ்வாறு கருதவேண்டும்? சகோதரர்கள்தானே அனைவரும்?

திருத: பேருக்கு அப்படி இருப்பதனால் பயன் என்ன? இந்த குருவம்சத்தின் தலை மகன் தானே நான்! இருந்தும் இன்று குருவம்சத்தின் அடுத்த தலைமுறைக்கு யுதிஷ்டிரன் தலை மகன்! ஆமாம் யுதிஷ்டிரன் தலைமகன்!!

காந்: துரியோதனன் மூர்க்கத்தனம் மிக்கவனாக வளர்கிறான். யுதிஷ்டிரன் தான் மூத்தவன் என்பதனை அவனிடம் பல தடவை விளக்கியுள்ளேன். நீங்களும் அவனுக்கு விளக்கிக் கூறுங்கள்.

திருத: நான் குருடனாகப் பிறந்தமையினால் எனக்குரிய மகுடம் என் தம்பி பாண்டுவின் தலையில் ஏறியது. இதில் அநியாயம் நடைபெறவில்லை என்பதனை நான் அறிந்து ஏற்றுக்கொண்டேன். ஆனால் என் மகன் துரியோதனன் குருடனல்ல. அவனை எவ்வாறு சமாதானப்படுத்த முடியும்?

காந்: உங்கள் மனப் புண்ணை ஆற்றுவதற்கு நீங்கள் ஏன் இதுவரை முயற்சிக்கவில்லை பிரபு?

திருத: நான் என்ன செய்யமுடியும்? எனது மரணத்தின் பின்னர் துரியோதனன் அரியணை ஏறுவான் என்று அவனுக்கு நம்பிக்கை அளிக்கப்பட்டுவிட்டது. நானே அவன் அந்த நம்பிக்கையைப் பெற வழிவிட்டேன். நமது குல குருவும் அந்த ஆசையை அவனுக்கு ஊட்டிவிட்டார். இப்போ நானே அவனிடம் போய் 'மகனே யுதிஷ்டிரன் தான் மூத்தவன். ஆகவே நீ அரியணை ஏறுவதானால் அதற்கேற்ற தகுதியையும் திறமையையும் நிரூபித்தாக வேண்டும்' என்று எவ்வாறு கூறமுடியும்?

காந்: அவனுடைய தகுதியை நிரூபிக்க முடியாது என்று ஏன் கருதுகிறீர்கள்? பாண்டவர்களை விட படிப்பில் முன்னணியில் நிற்கிறான்.

திருத: அவன் தோற்றுப் போனால்..?

காந்: அஸ்தினாபுரியின் கிரீடத்தை ஏற்க அவனுக்கு அருகதையில்லை என்றாகிவிடும். அதுதான் தலைவிதி!

திருத: மீண்டும் அந்தத் தலைவிதி! தலைவிதி ஏன் என்னை எப்போதும் இடர்படுத்துகிறது?

காந்: பிரபு! விதியின் எழுத்துகளை நம் கையால் அழித்துவிட முடியாதே!

திருத: எனது செயல்களுக்கு நான் பாத்திரவாளி அல்லன் என்று கருதுகிறாயா?

காந்: அவ்வாறு அல்ல. எமது செயல்களுக்கு நாம்தான் பொறுப்பு. தன் எதிரில் தென்படுவதையே பிரதிபலிக்கும் கண்ணாடியைப் போன்றதே விதி! அது மனிதர்களைப் பிணைக்கும் கயிறு அல்ல. அது மனித வாழ்க்கையின் கதை. ஆகவே மனிதனுடைய சொந்தச் செயல்களுக்காக விதியை நோவதில் அர்த்தமில்லை மகாபிரபு!

திருத: காந்தாரி! எனக்கு புத்திமதி கூறாதே! எனது அபிலாசைகளை நிறைவேற்ற எனக்கு துணையாக இரு. என்னைத் தனியே விட்டுவிடாதே. என்னைப் பற்றி எனக்கே பயமாக இருக்கிறது.

காந்: பாரத வர்ஷத்தின் வாரிசு பயம் கொள்ளலாமா? ஆசைகளுக்கு இடம் தரலாமா? துரியோதனனின் தந்தை என்பதை மட்டும் எண்ணிக்கொண்டிருக்காதீர்கள். அஸ்தினாபுரத்தின் அரசர் நீங்கள். நீதியை நிலைபெற வைப்பது உங்கள் கடமை!

-காட்சி மாற்றம்-

குந்தியின் அரண்மனை

குந்தி: வாருங்கள் எல்லாரும்! பிரார்த்தனை செய்துவிட்டு படுக்கைக்குச் செல்லுங்கள்.

யுதிஷ்: என்ன செய்கிறாய் பீமா? அம்மா தூங்கச் சொன்னார் அல்லவா?

பீமன்: துரியோதனனின் தீய செயல்களால் துன்புறும் என்னால் அமைதியாகத் தூங்க முடியவில்லையே!

யுதிஷ்: தீய செயல் என்று நீ கணிப்பதே அவனுடைய கருத்தில் நற்செயல்கள், மறந்து விடு. மன்னிப்பதே இறைவனை நாம் அணுகவழி. மன்னிப்பதற்கு இணையாக எதுவுமே இல்லை. உணவு பற்றி உன் சிந்தனையைச் செலுத்து.

பீமன்: உணவைப்பற்றிக் கூறியதும் பசி வந்துவிட்டது.

யுதிஷ்: நீ எப்போதும் மாறப் போவதில்லை.

பீமன் வெளியே செல்லும்போது காந்தாரியைக் காண்கிறான்.

பீமன்: வணக்கம் பெரியம்மா!

காந்: நீடூழி வாழ்க! குந்தி எங்கே இருக்கிறாள் மகனே?

பீமா: அரண்மனையிலேயே இருக்கிறார் பெரியம்மா...

காந்தாரி குந்தியின் அரண்மனையை அடைகிறார்.

குந்தி காந்தாரியின் தாழ் பணிந்து வணங்குகிறாள்.

காந்: இதென்ன குந்தி?

குந்தி: மூத்தவர்களிடம் இளையவர்கள் ஆசி பெறுவது இயல்பல்லவா அக்கா..? தாங்கள் இங்கு வரும் சிரமத்தை ஏன் ஏற்க வேண்டும்? சொல்லி அனுப்பியிருந்தால் நானே வந்திருப்பேனே!

காந்: உங்கள் தேவைகளைப் பற்றி விசாரித்து அறியவே வந்தேன். எல்லாம் வசதியாக இருக்கிறதா சகோதரி?

குந்தி: ஏன் அப்படிக் கேட்கிறீர்கள்? நான் இங்கு விருந்தாளி அல்லவே! எனது சொந்த இல்லத்துக்குத்தானே வந்திருக்கிறேன்?

உட்காருங்கள் அக்கா.

காந்: நீண்ட காலத்தின்பின் உன் வரவால் இங்கு ஏற்பட்டுள்ள நல்ல சூழலை அவதானிக்க முடிகிறது. இருப்பினும் ஏதாவது தேவைப்பட்டால் கூச்சப்படாமல் கேட்டுப் பெற்றுக்கொள்ளத் தயங்க வேண்டாம்!

குந்தி: நான் ஏன் தயங்க வேண்டும்? இந்த அரண்மனையில்தானே நான் மணமகளாக முதன் முதலில் காலடி எடுத்துவைத்தேன்...!

இவ்வாறு கூறிய குந்தி தனது கடந்த காலத்தை நினைத்து விம்முகிறாள்.

காந்: அழாதே குந்தி! கண்ணீரால் எந்தப் பிரச்சனையும் தீராது. மாதரியின் பிள்ளைகளுடன் உனது பிள்ளைகளையும் பராமரிக்கவேண்டிய நீயே இவ்வாறு கலங்க முடியுமா? கண்ணீர் வடிக்க உனது கடமைகள் இடம் தருமா? குந்தி! துரியோதனின் நடத்தைகளுக்கு மன்னிப்புக் கோர வந்துள்ளேன்.

குந்தி: அவ்வாறு கூறவேண்டாம் அக்கா! என்னிடம் மன்னிப்புக் கோரினால் நான் பாபியாகிவிடுவேன்.

காந்: இந்த அரண்மனையில் துரியோதனனுக்கு எவ்வளவு உரிமை உண்டோ அந்தளவுக்கு அவர்களுக்கும் இருக்கிறது.

குந்தி: உரிமைகளைக் கணக்குப் பார்க்க நான் வரவில்லை அக்கா! இந்த அரண்மனைக்குரிய பொக்கிஷங்களைச் சேர்க்க வேண்டிய இடத்தில் ஒப்படைக்கவே வந்தேன். உரிமை எது; அல்லாதது எது என்பதை என் மைத்துனர் மகாராஜா அறிவார்- பெரியவர் பீஷ்மரும் அறிவார். அக்கா! அஸ்தினாபுரத்தின் மகாராணி தாங்கள். உங்கள் அரவணைப்பிலேயே என் பிள்ளைகளை விட்டுள்ளேன்.

காந்: கடவுள் கிருபை இருந்தால் உனது மகன்களுக்கு உரியவை கிட்டும். யுதிஷ்டிரனே குடும்பத்தில் தலைமகன். எனது மகன் மூத்தவனாக இருந்திருக்கக் கூடாதா என்ற கவலை எனக்கு இல்லாமலில்லை. நானும் ஒரு தாய். என் மகன் . அஸ்தினாபுரத்தின் அரியாசனம் ஏறவேண்டும் என்ற ஆசை எனக்கும் ஏற்படுவது இயல்பே! ஆனால் நமது ஆசைகள் உண்மையினை மாற்றிவிட முடியாது. துரியோதனனை விட உன் மகன் யுதிஷ்டிரனே மூத்தவன் என்பது தான் உண்மை. எனது அண்ணன் சகுனியை நம்பமுடியாது. அவர் மனதில் ஏதோ திட்டம் இருக்கிறது. திரியோதனனின் மனதை அவர் கெடுத்து விடுவாரென அஞ்சுகிறேன். இருப்பினும் சகோதரர்களுக்கிடையில் கசப்புணர்வு வரலாகாது அல்லவா குந்தி?

குந்தி: எனது பிள்ளைகளை எவரும் தவறாக வழி நடத்தவோ ஆவலைத் தூண்டவோ நான் ஒருபோதும் அனுமதிக்க மாட்டேன்.

காந்: உனக்கிருக்கும் தைரியம் எனக்கில்லை. அண்ணன் சகுனியின் போதனை எக்காலத்திலும் நீக்கிவிட முடியாத கொடிய விஷத்தைப் போன்றது. பிரார்த்தனை ஒன்று தான் சிறந்த வழி குந்தி! பிரார்த்தனை செய்!

-காட்சி மாற்றம்-

திருதராட்டிரன் அரண்மனை- சகுனியுடன் துரியோதனன் வருகிறான்.

சகுனி: அஸ்தினாபுரியின் நீதி வெல்க! பாரத வர்ஷ மாமன்னர் திருதராட்டினர் தனது மகனுக்கு இழைக்கும் அநீதியும் வாழ்க! வரலாற்றில் உங்கள் பெயர் வெள்ளி வரிகளில் தங்க எழுத்துக்களால் பொறிக்கப்படும் மகாபிரபு! எனது மருமகன்- சகோதரி காந்தாரியின் மைந்தன் துரியோதனனுக்கு அநீதி இழைக்கப்படுவதை நான் ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை!

திருத: நான் என்னப்பா செய்ய முடியும்? தனது புதல்வர்களை அழைத்துக்கொண்டு மீண்டும் கானகத்துக்கே போகும்படி குந்தியிடம் சொல்ல முடியுமா?

சகுனி: அவ்வாறு செய்யும்படி நான் கூறினேனா? உங்கள் சகோதரரின் அனாதைக் குழந்தைகளுக்கு பாதுகாப்பளிக்கத்தான் வேண்டும்? ஆனால் காலமான பாண்டுவின் அரண்மனையை அவர்களுக்குக் கொடுத்திருக்க வேண்டியதில்லையே! அந்த மாளிகையினை அவர்களுக்குக் கொடுத்தமையினால் அவர்களுக்கு ஆதிக்க ஆசையினை உண்டாக்கி விட்டீர்களே! இங்கே தானே குந்தி மகாராணியாக இருந்தாள். பாசம் எனும் கங்கை நீரில் நீச்சலடிப்பதற்கு உத்தரவிடுவதற்கு முன்னதாக பீஷ்மரால் பாதுகாக்கப்பட்டுவரும் அஸ்தினாபுரத்தின் எதிர்காலத்தை உங்கள் மகன் துரியோதனனுடையதாக்குவதைப் பற்றி நீங்கள் சிந்தித்திருக்க வேண்டாமா மைத்துனரே? உங்கள் மகனுடைய எதிர்காலத்தைப் பற்றி சிந்திக்க வேண்டியவர் நீங்கள் அல்லவா? நேற்று வரை பாண்டு புத்திரர்கள் இமையமலைச் சாரலில், தபசிரேஷ்டர்கள் தவம் புரியும் புண்ணிய பிரதேசத்தில் சுதந்திரமாகத் திரிந்தவர்கள்.. இந்த அரச மாளிகை அந்தச் சுதந்திரப் பறவைகளுக்கு ஏற்றதல்ல, அந்தப் பறவைகள் இந்தக் கூண்டை விரும்ப மாட்டா இல்லையா மைத்துனரே?

திருத: ஆனால் அவர்கள் இங்கு மகிழ்ச்சியுடன் திருப்தியாக இருக்கிறார்கள் என்று குந்தி கூறியதாக காந்தாரி சொன்னாளே!

சகுனி: காந்தாரியா கூறினாள்? எதிர்காலத்தைப் பற்றி அவளுக்கு என்ன தெரியும்? குந்தி அரசி அல்லவா? அவள் அப்படித்தானே கூறவேண்டும்!

திருத: இந்த மாளிகையில் துரியோதனனுக்குள்ள அத்தனை பாத்தியத்தையும் பாண்டவர்களுக்கும் இருக்கிறதல்லவா?

துரியோ: இல்லை! அவர்களுக்கு இங்கு எதுவித உரிமையுமில்லை. அவர்கள் ஐவரையும் கொன்றுவிடுவேன். அவன் பீமன்! அவனருகிலிருந்து உணவு கொள்ளவே எனக்குப் பிடிக்காது. அவன் அர்ச்சுணன்! அவன், தான் பெரியவன் என்ற கர்வம் பிடித்தவன். அழுக்குப் பிடித்த உடைகளோடு அவன் தாத்தாவின் மடியிலேறினான். இவர்கள் அரச மாளிகையில் வாசம் செய்ய லாயக்கற்றவர்கள் அப்பா!

சகுனி: உன்னுடைய ஆத்திரத்தை அடக்கிக்கொள் பிள்ளாய்! உன் தந்தையின் அநீதிகளை அனுசரிக்கக் கற்றுக்கொள். ஓ மாமன்னரே! ஓய்வெடுங்கள். விழித்திருக்கும்போதும் கண்ணுறங்கும் போதும் கிரீடத்தை கெட்டியாகப் பிடித்துக்கொள்ள மறந்துவிடாதீர்கள். வா குழந்தாய் நாம் போகலாம்!

-காட்சி மாற்றம்-

பீஷ்மரின் இருப்பிடம்-பீஷ்மர் ஆழ்ந்த சிந்தனையிலிருக்கிறார். விதுரர் வருகிறார்.

விதுர: மதிப்புமிக்க தந்தையே! வணக்கம்! கடந்த பல நாட்களாக கடும் சிந்தனையிலாழ்ந்து காணப்படுகிறீர்களே! காரணம் அறியலாமோ?

பீஷ்ம: உண்மையில் காரணம் என்ன என்று நீ அறியமாட்டாயா விதுரா? அஸ்தினாபுரி இன்று நிகழ்காலத்துக்கும் எதிர்காலத்துக்குமிடையில் நிற்கிறது. எமது மூதாதையர்கள் அரும்பாடுபட்டு சேகரித்து தொகுத்த விலைமதிப்புமிக்க சரம் போன்று கட்டியெழுப்பிய உறுதியான சமுதாயத்தின் அத்திவாரமே பல இடங்களில் வெடித்து ஆட்டம் கண்டு வருவதை நீ அறியமாட்டாயா? அரசியல் அந்தகாரமாகிவிட்டது. அரசரோ பாச வலைக்குள் அகப்பட்டு, ஏனையோருக்கு உரிமையானவற்றையும் தனதாக்கிக்கொள்ளும் ஆசையில் திணறுகிறார். தோட்டத்திலுள்ள பூச்செடிகள் அனைத்தையும் கண்காணிக்க வேண்டிய தோட்டக்காரன் ஒரே ஒரு மொட்டின்மீது மட்டும் கதிரவனின் ஒளிபடவேண்டும் என்று விரும்பினால், ஏனைய செடிகளினது கதியும் என்னாவது? அந்த ஒரே மொட்டின்மீது முழு ஒளியும் படுமானால் அதுவே தீய்ந்துபோய்விடமாட்டாதா? இவைதான் தேள் போல் என்னை நிதமும் கொட்டி வேதனைப்படுத்துகின்றன. இன்றைய நிலையில் எதிர்காலத்தைப்பற்றிய கவலை என்னை வாட்டி வதைக்கிறது.

விதுர: தந்தையே! காலம் ஓடும் நதியைப் போன்றது. நாம் தான் அதனை நமது வசதிக்கேற்றவாறு இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்று வகுத்துள்ளோம். இன்றைய நிகழ்காலம் நாளை இறந்தகாலமாகி விடுமே!

பீஷ்ம: நான் வேதாந்தம் பற்றிப் பேசவில்லை விதுரா! கரடுமுரடாகத்தோன்றும் நிகழ்காலத்தைப் பார்க்கிறேன். நிகழ்காலம் இறந்த காலமாகும்போது நாம் வரலாற்று ஏடுகளில் ஒளிந்துகொள்வோம். ஆனால் இன்றைய நாடகத்தில் பல பாத்திரங்களையும் ஏற்று நடிக்கும் வேடதாரிகள் நாம். ஆகவே இன்றையைப் பற்றி நாம் அறிந்துகொள்ள வேண்டும் அல்லவா?

விதுர: பிதாவே! தங்களிடமே நான் கற்ற பாடம் இது. நாம் ஏற்றிருக்கும் பாத்திரத்தின் முழுத் தன்மையினையும் நாம் அறியவில்லை என்ற உண்மையில்தான் எமது முழுப்பலமும் தங்கியிருக்கிறது. எதிர்காலத்தைப் பற்றிய முழு அறிவையும் நாம் பெற்றிருந்தால் எமது செயல்களுக்கு அர்த்தம் எங்கே? செயலாற்றுவதோ, செயலாற்றாமல் விட்டுவிடுவதோ என்பதனை நிர்ணயிக்கும் வல்லமை மனிதனிடத்தில் மட்டுமே உள்ளது.

பீஷ்ம: திருதராட்டினனை அவன் போக்கிலேயே விட்டுவிடவேண்டும் என்கிறாயா?

விதுர: அவ்வாறு நான் எப்படிச் சொல்ல முடியும் தந்தையே! தேர்ந்தெடுக்கும் உரிமையை தாங்கள் ஏற்கனவே பயன்படுத்திவிட்டீர்கள் என்பதனை நான்அறிந்தவன் அல்லவா?

பீஷ்ம: என் கண்களைக் கட்டிக்கொள்ள வேண்டும் என்றா கூறுகிறாய்?

விதுர: இவ்வினாவுக்கு நீங்களே விடை தேடுங்கள். என்னால் முடியாது.

பீஷ்ம: சரி ஒரு நல்ல நாளை தேர்ந்தெடுத்து பாண்டு புத்திரர்களை கிருபாச்சாரியாரின் ஆசிரமத்தின் குருகுலத்தில் சேர்த்துவிடு.

விதுர: அவ்வாறே செய்கிறேன் பிதாவே!

பீஷ்ம: நான் எனது தாயாருடன் தனித்திருக்க விரும்புகிறேன். நீர் போகலாம்.

விதுரர் சென்றதும் தனது தாய் கங்கையைத் துதிக்க கங்கை பிரசன்னமாகிறாள்.

கங்கை: நீடூழி வாழ்க மகனே!

பீஷ்ம: அத்தகைய வாழ்த்து எனக்கு வேண்டாம் தாயே! எனது தந்தை அளித்த வரத்தினால் இன்று இறுக்கமாகக் கட்டுண்டு கிடக்கிறேன் நான்!

கங்கை: துயரம் தவிர் மகனே!

பீஷ்ம: துன்பத்துக்கும் ஓர் அளவு உண்டல்லவா அம்மா?

கங்கை: இவ்வளவு சோகத்துக்குக் காரணம் என்ன மகனே?

பீஷ்ம: ஒரே காரணம் என்றால் சொல்லலாம். என் கண் முன்னே சிதைந்துகொண்டிருக்கும் வாழ்க்கையின் உயர்ந்த இலட்சியங்களை எண்ணி கலங்குகிறேன். எமது மூதாதையர்கள் உண்மைக்கும் பொய்மைக்கும் இடையில் வரைந்த கோடுகள் அழிந்துபோய் விட்டன. எந்த அரியணையை பாதுகாப்பேன் என்று என் தந்தைக்கு வாக்களித்தேனோ, எனக்கு முழுப் பாத்தியதையும் உள்ள அதே அரியணை இன்று திருதராட்டினனின் மகனால் இழிவு படுத்தப்படுகிறது என்ற கொடூரமான செயல் கண்டு கலங்குகிறேன் அம்மா! பேராசை அவன் கண்களைக் குருடாக்கிவிட்டது. அகந்தையும் ஆணவமும் இறுமாப்பும் அவனை ஆட்கொண்டுவிட்டன. இந்த நிலையில் பாண்டு புத்திரர்களுக்கு எனது ஆசியை வழங்குவதைத் தவிர என்னால் எதுவுமே செய்ய முடியவில்லையே!

கங்கை: கலங்க வேண்டாம் மகனே! துன்பம் உன்னைத் தொடும்போது அன்னையான என்னிடம் வா! இந்த வயதில் நீ விந்திய மலையைவிட உயர்ந்தவன். உனக்குத் தெரியும்- உயர ஏறவும் இறங்கவும் உள்ளது ஒரே ஏணிதான். மேலே ஏறியவர்கள் என்றோ ஒருநாள் கீழே இறங்கித்தானாக வேண்டும். அவர்கள்

(18ம் பக்கம் பார்க்க)

பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வண்ண நகைகள்
மின்னிப் பேசுகின்றன.



அருள் ஜுவலர்ஸ்
இல. 3, செட்டியார் தெரு,
கொழும்பு–11.
தொ.பேசி: 436331


## கட்டுமரச் சைக்கிள்


ஏலேலோ ஐலசா என்று பாடிப்பாடி துடுப்பு வலித்துப் போனது பழையதை. இப்பொதெல்லாம் அதிக வேக எஞ்சின்கள் பொருத்தப்பட்ட படகுகள் நீலக்கடலை கிழித்துச் செல்கின்றன.

ஜாலியாக கடலில் ஒரு சுற்று சுற்றிவிட்டு வரவேண்டும் போல் இருந்தால் அதற்கும் நவீன சொகுசான வசதி வந்துவிட்டது.

கட்டுமரத்தில் உங்கள் சைக்கிளை இணைத்து வழமைபோல் மிதிக்க வேண்டியது. கட்டுமரம் அந்த உந்து விசையில் உங்களோடு வரும். சைக்கிளை இணைப்பதற்கான முறையும், சைக்கிள் ஹாண்டிலில் இருந்து சுக்கானுக்கு இணைப்பு ஏற்படுத்தும் வசதியும் கொண்ட 'சைக்கிள் கட்டுமரம்' தான் படத்தில் இருக்கிறது. இறக்கை கட்டிப் பறக்கிறதோ இல்லையோ கட்டுமரம் கட்டிப் பறக்குதையா காரிகையின் சைக்கிள்!







## பிரபலமான இடம்

படத்தைப் பார்த்தவுடன் இது ஒரு பாரிய தொழிற்சாலை என்று நினைத்துவிட்டீர்கள். உலகில் உள்ள மிகப் பெரிய நூலகங்களில் இதுவும் ஒன்று. இது ஒருபது பட்டடார பாரிஸ் நகரில், நவீன முறையில் நிர்மாணிக்கப்பட்டது.

இங்கே நூலகம் மட்டுமல்ல, ஒளிப்படக்காட்சி மையங்கள், விஞ்ஞான ஆய்வுகூடங்கள், மிகப்பழைய வரலாற்றுப் படங்கள் ஆகியவையும் உண்டு.

பாரிஸ் மாநகரைக் காணவரும் உல்லாசப் பயணிகள் இங்கு செல்லாமல் போவது அரிது. அத்தனை தூரம் இதன் பிரபலம் பெரிது.

படம்: உதவி–க. அம்பலவாணன் –பிரான்ஸ்.

தினமுரசு வாரமலர்

## இளங்கன்று பயமறியாது



நீர் யானைக் குட்டியோடு நேசமோடு பழகும் சின்னஞ் சிறு பிஞ்சு



## பஞ்சணை வாழ்வு பவிசான பொழுது

நாய் வீட்டில் வளரும் பிராணி என்றுதானே சொல்வதுண்டு.

நாய் வீட்டுக்குள்ளும் வாழும் பிராணி. வெளிநாடுகளில் நாய்களை பிள்ளைகளிலும் மேலாய் பாசம் வைத்து வளர்க்கிறார்கள். (நம்நாட்டிலும் அப்படி உண்டுதானே)

நாய்களுக்கு பொழுதுபோக்க வசதியில்லாவிட்டால் அவ்வளவு நன்றாக இருக்காதே என்று தொலைக்காட்சி வசதியும் செய்துகொடுத்துவிடுவார்கள்.

வெறும் தரையில் தூங்கினால் உடம்பு என்னாகும். அதற்காகவே தனியான விசேஷ பஞ்சணைப் படுக்கை, தலையணை.

கொடுத்துவைத்த நாய்கள்.

## நாய்க்கும் ஒரு காலம்



மனிதனுக்கு மனிதனே உதவி செய்யாத காலம் இது. நாய்க்கு பணிவிடை செய்வதென்றால் ஏதோ காரணம் இருக்கவேண்டுமே என்று நினைக்கிறீர்கள் அல்லவா? உண்மைதான்.

படத்தில் பவிசாக இருக்கும் நாய் ஒரு திரைப்பட நட்சத்திரம். தொலைக்காட்சித் தொடர்களில் நடித்து நன்றாகச் சம்பாதிக்கிறது. அதனால்தான் நாய் மேலே போய்விட்டது. வளர்ப்பவரோ தரையில் இருந்து பணிவாகப் பணிபுரிகிறார். நன்றியுள்ள மனிதன்.


LIONS CLUB
OF COLOMBO CITY
அனுசரணையுடன் முதன் முறையாக
நம் நாட்டுக் கலைஞர்கள்

மோகன் – ரங்கன் உடன்
'அப்சராஸ்'

பயாஸ்–ரட்ணம் உடன்
'சுப்பர் சன்ஸ்'

ஸ்ரீதர் பிச்சையப்பாவின்
நகைச்சுவை நாடகம்
நம் நாட்டு தமிழ், சிங்கள திரைப்பட
கலைஞர்களின் நடனவிருந்து
இவை அனைத்தும் ஒரே மேடையில் இடம்பெறும்.





ஜகு-புகு-ஜகு-புகு ரயிலே
திரையிசை கலைக் கதம்ப சிறப்பு நிகழ்ச்சி
சுகததாச உள்ளரங்கு
14. 03. 1994 மாலை 6. 30